G.B.Sathyanesan,BA.
Bro, Dinakaran's Prayer
Meeting at Palayancottai
on 5-12-1976.

உருகாயோ நெஞ்சமே



டி.ஜி.எஸ். தினகரன்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக *(மத்தேயு 10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

உருகாயோ நெஞ்சமே

டி. ஜி. எஸ். தினகரன்

For RATHINA ENTERPRISES,
G.B. Sathyanesan, B.A
MANAGING PARTNER.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600003

COPYRIGHT

First edition February 1976

Reprinted April 1976

இந்நூல் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கும்படி பண உதவி அளித்த, கேனன் எட்வர்டு செல் நிதிக் குழுவினருக்குப் பதிப்பாளர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1976. B8239

முகவுரை

சகோதரர் தினகரன் எழுதிய இச்சிறப்பு நூலை வாசிப்ப வர்க்கு, அவரை அறிமுகப்படுத்த அவசியமில்லை. அநேக இடங்களில் ஆண்டவரது திருவசனங்களை உரைத்து, வாழ்க்கையில் சாதிப்பவரென்பது யாவரும் அறிந்த உண்மை.

இந்நூலில் அவர் நம்மை தேவனுடைய சந்நிதானத்திற்கு மட்டுமன்று, அவரது திருப்பாடுகளுக்கு மட்டுமன்று, அவரது திருவசனத்திற்கும் நம்மை எடுத்துச் செல்கிறார். இந்நூல் திருவசனத்தை அடிப்படையாகக்கொண்ட நூல். ஒவ்வொரு அத்தியாயத்திலும் திருவசனம் அதிகமாக உபயோகப்படுகிறது. இந்நூலின் சிறப்பு இதுவே. மேலும் வாசகர் எளிதில், ஆழ்ந்த தெய்வீகக் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் முறையில் எழுதியுள்ளார்.

திருவசனக் கருத்துக்களைத் தெளிவாக விளங்கும்படி நாடோடி வாழ்க்கையின் அனுபவங்களை உதாரணங்களாக வரைந்துள்ளார். இந்நூலில் பிரசங்கிமாருக்குப் பயன்படத் தக்க அநேக சிறு வரலாறுகள் உள்ளன. ஆண்டவரின் அன்பை ரசிக்காத மக்களும் அவரைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு எண்ணங்களும், கருத்துக்களும், கதைகளும் எழுதப்பட்டுள்ளன.

நான்காம் அத்தியாயத்தில் அதிக அழகாக இயேசு பெருமானின் திருப்பாடுகளையும், பின்வரும் தேற்றரவாளனையும் இணைத்து விளக்கியுள்ளார். நெருக்கப்பட்ட நெருக்கத்தில் நொறுங்குண்ட நெஞ்சத்திற்கு, நெருப்பாக, பரிசுத்த ஆவியை வருணிக்கின்றார். முடிவுரையில் ஆன்மாவுக்குப் பயன் தரக்கூடிய போதனைகளைப் போதிக்கின்றார். இந்நூலை ஆண்டவருக்குத் தத்தம்செய்து எல்லா சமயத்தினருக்கும் ஆன்மீக அமிர்தமாகப் பயன்படும்படி அர்ப்பணிக்கின்றேன். இயேசு பெருமான் இந்நூலை ஆசீர்வதிப்பாராக.

சுந்தர் கிளார்க்

சென்னை பேராயர்

முன்னுரை

தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து பூமியில் மனிதனாய்ப் பிறந்து 'ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்' என வேதம் (எபி. 2:9) கூறுகிறது. உலகத் தோற்ற முதல் பூமியில் அநேக மகான்களும் மகாத்துமாக்களும் சில கொள்கைகளுக்காக அல்லது தம் தேச நலத்துக்காக தம் வாழ்க்கையைத் தியாகம் செய்ததை சரித்திர வாயிலாக அறிகிறோம். நம் தேச பிதா மகாத்மா காந்தி அவர்கள் இந்திய நாட்டிற்கு சுயாட்சி வாங்கிக் கொடுப்பதற்காகவும், மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காகவும் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தார். அவ்வாறே ஆபிரகாம் லிங்கனும் அமெரிக்க நீக்ரோக்களுக்குச் சம உரிமை அளிக்க வேண்டுமென்ற அவரது ஒரு கொள்கைக்காகத் தம்மையே பலியாக அர்ப்பணித்தார்.

தேவகுமாரனாகிய இயேசுவோ இந்தப் பூமியில் மனிதனாய் வந்தபொழுது, தாம் வந்த நோக்கத்தைப் பின்வருமாறு மொழிந்தார்:

> 'ஒருவன் தன் சிநேகிதனுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.'
>
> 'ஆடுகளுக்காக (உலக மக்கட்காக) என் ஜீவனையும் கொடுக்கிறேன்.'
>
> 'அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு' (யோவா. 15:13; 10:15,18).

ஆம்! அவரது மரணம் பாவத்தில் உழலும் மனுமக்களைத் தூக்கியெடுப்பதற்காகவே நிகழ்ந்தது!

அறிஞர் ஒருவர் அந்தக் கருத்தைப் பின்வரும் உதாரணத்தால் விளக்கினர்: இரு புறமும் கரைபுரண்டோடும் ஆறு ஒன்றில் நீந்தத் தெரியாத எளியவன் ஒருவன் கால் சறுக்கி விழுந்துவிட்டான். தன் உயிருக்காகத் தவித்து தடுமாறினன். சிறு கூட்டம் ஒன்று கரையில் கூடியது. 'ஐயோ! பாவம்! நீந்தத் தெரியாதவன் ஆற்றுக்கு வரலாமா? வந்தாலும் ஜாக்கிரதையாய், தூரமாய் இருக்கக்கூடாதா?' என்று அவனைக் குறித்துக் குறைகூறியது ஒரு குரல்!

'தம்பி! தலைமட்டும் தண்ணீருக்குள் மூழ்காமல் மூச்சைப் பிடித்து மேலேயே வைத்துக்கொள். அதோ! மிதந்து வரும் மரக்கட்டையைப் போய் பிடித்துக்கொள்' என்று கரையிலிருந்து அறிவுரை உரைத்தது வேறொரு குரல்.

'விதி யாரை விட்டது! அவன் செய்த கருமம்! இப்படிச் சாகவேண்டுமென்று அவன் தலையில் எழுதியிருக்கிறது! யார் பெற்ற பிள்ளையோ?' என்று ஒலித்தது ஒரு வேதாந்தக் குரல்.

அந்தோ! இந்தக் குரல்களெல்லாம் ஆற்றங்கரையில் அழகாக அடுக்குமொழியில் அனுதாபத்தோடு ஒலித்தனவே தவிர, மடியும் உயிரைக் காப்பாற்ற விழையவில்லை. அப்பொழுதுதான், அங்கு வந்த படிக்கத் தெரியாத, ஆனல் நீந்தத் தெரிந்த வாலிபன் மடியும் மனிதனைக் கண்ணுேக்கினன். மனம் பதறினன். பேச்செதுவுமின்றி தன் உடைகளைக் கழற்றியெறிந்தான். 'வில்லிலிருந்து விடுபட்ட அம்பைப்'போல தண்ணீருக்குள் பாய்ந்தான். கண்மூடித் திறப்பதற்குள் நீந்திச் சென்று மூழ்குபவன் அருகில் சேர்ந்தான். கைநீட்டி அவன் தலைமயிரைப் பிடித்துக்கொண்டான். வெள்ளம் இருவரையும் இழுத்துச் செல்ல ஆரம்பித்தது. 'பைத்தியக்காரன், அவசரக்காரன், யோசிக்காமல் குதித்துவிட்டானே' என்ற விமரிசனங்கள் அவனைக் குறித்தும் கரையில் எழுந்தன! நல்ல வேளை, மனதை அதைரியப்படுத்தும் இந்தச் சொற்களெல்லாம் அவன் காதில் விழவில்லை. அணு அணுவாகத் தன் முழு பலத்தையும் பிரயோகித்து நீந்திக் கரைசேர்ந்தான். அவன் உயிர் பிழைத்து மற்ற உயிரையும் காப்பாற்றினன்.

இன்றைய உலகின் நிலையும் அதுவேதான். துயரக் கடலில் மூழ்கித் தத்தளிக்கும் மனிதனுக்கு அறிவுரைகள் கூறுவோர்

ஏராளம். 'அவன் கருமத்தை அவன் அனுபவிக்கிறான்' என்று வேதாந்தம் பேசித் தம்மைத் திருப்தி செய்துகொள்வோர் பலர். ஆனால் இயேசுகிறிஸ்துவோ 'நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி . . . தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்' (கலா. 1:4). ஒவ்வொரு மனிதனும் வாடும் துயர்க் கடலில், அவர்தாமே குதித்தார். அவரும் பாடுகளை அனுபவித்தார். சிலுவையில் மரணத்தை ருசி பார்த்தார். மனுக்குலத்தை இரட்சித்தார்.

'நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்' (ரோ. 5:7,8) என்ற வசனம் இவ்வன்பை விளக்குகின்றது.

இந்தச் சிறிய புத்தகத்தில், இயேசுகிறிஸ்து 'ஒவ்வொருவர்க்காகவும்' அனுபவித்த பாடுகளையும் வேதனைகளையுமே தெளிவாய்த் தியானிக்கப்போகிறோம்.

நண்பரே! கெத்செமனே தோட்டத்திலும், சிலுவை மீதிலும், போர்ச்சேவகர் கையிலும் அவர் அனுபவித்த வேதனையெல்லாம் உமக்காகவே என்பதை நீர் மறந்துவிடாதிரும். உம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் உமக்கு வரக்கூடிய சகல பாடுகளையும் அவர்தாமே தமது சரீரத்தில் உமக்குப் பதிலாகச் சுமந்தார். எனவே இயேசு அனுபவித்த வேதனைகள், துயரங்கள் என்னவென்பதைக் கவனமாய் நீர் வாசிப்பீராக. அவைகளை இயேசு அனுபவித்தது 'எனக்காகவே' என்பதை உம் உள்ளம் ஏற்றுக் ஏற்றுக்கொள்ளும் கணத்தில், உமக்குள் ஒரு தெய்வீக விசுவாசம் எழும்பி வரும்; உமக்கு தேவனிடமிருந்து அற்புதங்களைக் கொண்டுவரும்.

இப்புத்தகத்தை வாசித்து முடிக்குமுன்பு அவர் அருளும் ஆசி உம்மேல் பனியைப்போல் இறங்குவதாக! உம்மை ஆசீர்வதிப்பாராக!

சென்னை 1976 டி. ஜி. எஸ். தினகரன்

பொருளடக்கம்

				பக்கம்
	முகவுரை	..	..	iii
	முன்னுரை	..	..	v
1.	‘இரத்த வேர்வை’	..	..	1
2.	‘இரத்தம்’	..	..	22
3.	‘காயங்கள், தழும்புகள்’	..	..	47
4.	‘நெருக்கமும் நெருப்பும்’	..	..	60
5.	‘ஆத்தும வருத்தத்தின் பலன்’		..	100

1

‘இரத்த வேர்வை’

‘அவர் (இயேசு) மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார், அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது’ (லூா. 22:44).

மேற்கண்ட வேத வசனம் இயேசுகிறிஸ்து தாம் யூதாஸால் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இரவு, ஒலிவ மலையிலுள்ள கெத்செமனே என்னும் தோட்டத்தில் வேதனையுடன் ஜெபித்த நிலையை விவரிக்கிறது. தோட்டத்திற்கு தம் சீடர்களுடன் இவ்வாறு ஜெபத்திற்கு வருமுன்பதாக, அன்னாருடன் அவர் பஸ்கா பண்டிகையை ஆசரித்தார். பஸ்காவை ஆசரிக்கும் பொழுதே அவர் உள்ளத்தில், அடுத்து தாமும் சிலுவையில் அவ்வாறே பலியிடப்படப்போவதை நினைவுகூர்ந்தார்போலும்! அவர் ‘ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார்’ என்று வேதம் சொல்லுகிறது (யோவா. 13:21). கிரேக்க நாட்டாரில் சிலர் அவரைக் காண வந்தபொழுதும், யூதர்கட்காக மட்டுமின்றி உலகிலுள்ள யாவருக்காகவும் தன்னை சிலுவையில் பலியாக அர்ப்பணிக்கும் நாள் சமீபமாயிற்று என்று உணர்ந்தவராய் ‘இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது’ என்றார் (யோவா. 12:27). அவருக்கு எதிரே உண்பதற்காக வைக்கப்பட்டிருந்த அப்பமும், திராட்சரசமும், முறையே சிலுவையில் அடிக்கப்பட்டபின் நொறுக்கப்பட்ட தம் சரீரமாகவும், அதிலிருந்து சிந்தப்போகும் தம் இரத்தமாகவுமே அவர் கண்களுக்குத் தோன்றின. அப்பத்தை ‘இது என் சரீரம்’ என்றார். திராட்ச ரசத்தையோ ‘என் இரத்தம்’ என்றார்.

'உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்' என்ற நேசரின் வார்த்தை தங்கள் செவியில் விழுந்தவுடன் வேடன் அம்பு பட்டுத் துடிக்கும் புறுவென பன்னிரு சீடரில், பதினொரு வரும் துடித்து, இயேசுவை நோக்கி, 'ஆண்டவரே! நானோ? நானோ?' என்று வினவத் தொடங்கினார்கள். துரோகியான யூதாசும் தான் வாளாவிருந்தால் ஏனையோர் ஐயுறுவர் என எண்ணி 'ரபீ! நானோ?' என வினவினான். இயேசுவும் 'நீ சொன்னபடிதான்' 'நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்' என்றார் (மத். 26:22,25; யோவா. 13:27). நேரடியாக, இவ்வாறு, இயேசு தன்னை அவன் காட்டிக்கொடுப்பான் என்பதைக் கூறியும்கூட யூதாஸ் மனம் மாறவில்லை. அவரைக் காட்டிக்கொடுக்க, சூழ்ச்சி செய்வதற்கென கல்மனதுடன் புறப்பட்டுப் போய்விட்டான்.

இயேசுவும் பந்தியிலிருந்து எழுந்தார். பஸ்காவை ஆசரித்து முடித்த அவர் சீடரும் எழுந்தனர். பாரம்பரியப்படி 'ஸ்தோத்திரப் பாடல்' ஒன்றைப் பாடினர். நேசரின் விருப்பப் படி ஒலிவமலை நோக்கி அவருடன் நடந்தனர். பாவம்! இதுவே கடைசித் தடவையாக அற்புத மூர்த்தியோடு தாம் நடக்கும் சந்தர்ப்பம் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார் களோ என்பதை நாம் அறியோம். கெத்செமனே தோட்டம் வந்ததும், பதினொருவரில் எண்மரை ஓரிடத்தில் நிறுத்தி 'இங்கே உட்கார்ந்திருங்கள்' எனச் சொல்லி மேலே செல் கின்றார். எல்லா முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் அவர் தம்மோடு அழைத்துச் செல்லும் பேதுரு, யோவான், யாக்கோபு என்ற மூவர் மட்டுமே பின்செல்லுகின்றனர். அன்னாரோடு தனித்து வந்தபின், அவர் 'துக்கமடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார். . . என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என் னோடேகூட விழித்திருங்கள்' என்றார் (மத். 26:37,38).

> 'ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று?' (மா. 4:40)

> 'அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்?' (மத். 14:31).

என்றெல்லாம் பயம், அவிசுவாசம் நிறைந்த தம் சீடரை அதட்டின கெம்பீர தொனி மறைந்து, இப்பொழுது அதே சீடரை நோக்கி 'என்னோடேகூட விழித்திருங்கள்' என்று கெஞ்சும் குரல் ஒலிக்கிறது. அவர் உள்ளம் துக்கம்,வியாகுலம் இகில் இவற்றினால் நிறைகிறது (மத். 26,37; மா. 14:33). தமக்கு மிக நெருங்கின மூன்று சீடரையும் 'தனித்து விட்டு 'கல்லெறி தூரம் அப்புறம்' (லூ. 22:41) போகிறார். அதற்குள் உள்ளத்தின் வியாகுலம் மிகப் பெருகி கால்கள் தள்ளாட நிலத்தில் முகங்குப்புற விழுந்தார். இவ்வாறு விழுந்த அவர் எவ்வாறு ஜெபம்பண்ணினார் என்பதையும், அவர் உள்ளத்தை நிறைத்த வியாகுலம் சரீரத்தையும் பிளந்து கொண்டு இரத்தமாக வெளிவந்தது என்பதையுமே இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்தில் நாம் கண்ட வேத வசனம் விவரிக்கிறது.

தேவன் மனிதனைப் படைத்து பூமியில் குடியேற்றின பொழுது, அவன் வாழ்வைக் குறித்துக் கீழ்க்கண்டவாறு வழி வகுத்தார். ('மனிதனாகிய) நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்ட படியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர் வையால் ஆகாரம் புசிப்பாய்' (ஆதி. 3:19). 'வேர்வை' என்பது கடின உழைப்பைக் காட்டுகிறது. சரீரம் மிகக் கடுமையாக உழைக்கும்பொழுது வேர்வை தோலின் வழியாக வெளிவருகிறது; இது இயற்கை. நாம் தியானிக்கும் வசனத் தில் இயேசுவின் சரீரத்திலிருந்து வேர்வை வடிந்தது என வாசிக்கிறோம். அவர் முகங்குப்புற விழுந்து கிடக்கிறார். சரீரம் அசையாமல் இருக்கிறது. தசைகளுக்கு கடின வேலையொன்று மில்லை. ஆனாலும் வேர்வை புறப்பட்டு வழிகிறது. காரணம் என்ன? சரீரப் பாடு அல்ல; மன வியாகுலம். அது மனதைத் துளைக்கிறது. மனதிலிருந்து சரீரத்திற்குப் பாய்கிறது. நரம்பு மண்டலங்களைத் தாக்குகிறது. வியர்வை புறப்படுகிறது. வியர்வையோடுகூட நரம்பிலுள்ள இரத்தமும் கலந்துவிடு கிறது. எனவேதான் 'அவருடைய வேர்வை, இரத்தத்தின் பெருந் துளிகளாய்த் தரையிலே விழுந்தது' என வேதம் சொல்லுகிறது. ஒரு மனிதனுடைய மன வியாகுலம் அடக்க முடியாமல் போய் வரம்பு மீறும்பொழுதுதான் (climax of mental agony) இவ்வாறு வியர்வையில் இரத்தம் கலந்து

விடுகிறது என வைத்திய நூல்களும் கூறுகின்றன. தேவ குமாரனுகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை இவ்வாறு பிளந்த வியாகுலம்தான் என்ன? அவர் இவ்வாறு வியாகுலப்படக் காரணமும்தான் என்ன?

அ. அவர் மனிதகுமாரன்

இயேசுவின் பிறப்பைக்குறித்து கன்னி மரியாளுக்கு அறிவிக்க காபிரியேல் தேவதூதன் வந்து இறங்கின பொழுது இருவருக்குமிடையே நடந்த கீழ்க்கண்ட உரையாடல் இயேசு இன்னுர் என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறது.

'(கன்னி) மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே? என்ருள்.

> தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்த முள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்...தேவனுலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்ருன்' (லூ. 1:34, 35,37).

மேற்கண்ட உரையாடல் மூலம் இயேசுவின் பிறப்பு முற்றிலும் தேவனுடைய வல்லமையால் நடப்பிக்கப்பட்டதென நாம் அறியலாம். ஒன்றுமில்லாமையிலிருந்து வானத்தையும் பூமியையும் அண்டசராசரங்களையும் படைத்த தேவன், சூரியனையும் சந்திரனையும் எண்ணுக்கடங்கா விண்வெளிச் சுடர்களையும் ஒரே ஒரு வார்த்தையால் உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகராகிய தேவன், மரியாள் என்னும் ஒரு கன்னிகையின் வயிற்றில் தம் அமானுஷ்ய சக்தியால் ஒரு பரிசுத்த வித்தை வைத்து ஒரு பரிசுத்த குழந்தையை உருவாக்கச் சித்தம்கொண்டார். பரிசுத்த தேவனிடமிருந்து இந்த வித்து வந்ததால் 'உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்த முள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்' என தேவ தூதனும் மொழிந்தான். இயேசு, காணக்கூடாத தேவனிட மிருந்து தோன்றியவர். அவர் தேவகுமாரனே.

அதே சமயம், அவரும் உலகோரைப்போன்றே ஒரு மனித சரீரத்திலே வாழநேர்ந்தது. இதைக்குறித்து,

> 'தேவனே! உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் . . . ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்' (எபி. 10:7,5)

என தேவகுமாரன் திருமொழியாய், பரிசுத்த ஆவியானவர் கூறுகின்றூர். ஆம்! இயேசு, 'அதரிசனமான தேவனுடைய தற்சொரூபம்' (கொலோ. 1:15).

'அவருடைய மகிமையின் பிரகாசம், அவருடைய தன்மையின் சொரூபம்' (எபி. 1:3). எனினும் மனிதராகிய நம்மைப்போலவே, ஒரு மனித சரீரத்தில்தான் இப்பூமியில் வாழ்ந்தார். இந்த அம்சத்தை, கொலோ. 2:9 அழகாக விளக்குகிறது.

> 'தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.'

வெளித்தோற்றத்தின்படி இயேசு மனிதனுய்க் காட்சியளித்தார். ஆனுல் இந்தப் பாண்டத்தினுள் அடங்கியிருந்ததோ தேவத்துவம். மறுரூபமலைக் காட்சி இதை ரூபகாரப்படுத்துகிறது (மத். 17:1,2) வசனங்களை வாசிப்போம்.

'ஆறு நாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும், யாக்கோபையும் அவனுடைய சகோதரனுகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானுர், அவர் முகம் சூரியனைப்போல பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று.'

மலையுச்சியில் அவர் தனித்து ஜெபிக்கும்பொழுது அவருக்குள் அடங்கியிருந்த தெய்வீகம் பொங்கியெழுகிறது, உடல் முழுவதையும் ஒளிப்பிழம்பாய் மாற்றுகிறது, அவர் அணிந்திருந்த உடையையும் பிரகாசிப்பிக்கிறது. இயேசுவில் தேவத்துவம் நிறைந்திருந்தது. தோற்றத்திலேயோ மனித சரீரமும், மனித இயல்புடையவராகவுமே காணப்பட்டார்.

அவருக்குப் பசியுண்டாயிற்று (மத். 4:1,2: மா. 11:12).
அவர் இளைப்படைந்தார் (யோவா. 4:6).
தாகத்தால் வாடினுர் (யோவா. 19:28).

மனதில் களிகூர்ந்தார் (லூ. 10:21).
அன்புகூர்ந்தார் (யோவா. 11:5; மா. 10:21).
விசனப்பட்டார், கோபமடைந்தார் (மா. 3:5).
மனதுருகினார் (மத். 9:36; 14:14; 20:34).
ஆச்சரியப்பட்டார் (மா. 6:6; மத். 8:10).
கண்ணீர் விட்டார் (யோவா. 11:35).
பரிதபித்தார் (மத். 15:32).
திகில், வியாகுலம் அடைந்தார் (மா. 14:33).
மரணத்திற்கேதுவான துக்கம் அனுபவித்தார் (மா. 14:34).

நண்பரே! தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து கெத்செமனே தோட்டத்தில் திகிலையும், வியாகுலத்தையும், மரணத்திற்கேதுவான துக்கத்தையும் அடைய ஒரு காரணம், அவர் மனித குமாரனாகவும் இருந்ததால்தான். 'பிள்ளைகள் (நாம்) மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார்' (எபி. 2:14) என்ற வேத வசனமும் இந்தக் கருத்தையே விளக்குகின்றது. இயேசுகிறிஸ்துவும் தம் மரணத்தைப்பற்றிப் பேசியபொழுதெல்லாம், தம்மை 'மனித குமாரன்' என்றே குறித்துப் பேசியது குறிப்பிடத்தக்கது (லூ. 9:22,44,56). இயேசுகிறிஸ்து நம்மைப்போல இந்த உலகில் மனிதனாய் வாழ்ந்தபடியால் மனிதனுடைய பாடுகளும், அவனுக்கு வரும் சோதனைகளும் அவருக்கு மிக நன்றாய்த் தெரியும். எனவே, அவர் நமக்காய்ப் பரிதபிக்கிறவராயிருப்பார்.

'நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே (இயேசு) நமக்கிருக்கிறார்.'

'அவர் (இயேசு) தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்' (எபி. 4:15; 2:18).

மேற்சொன்ன இந்த வேத வசனங்கள் நமக்கு என்றும் ஆறுதலளிப்பவையாகும்.

ஹோமியோபதி வைத்திய முறையைக் கண்டுபிடித்த ஹனிமேன் என்ற மேதை, மலேரியா நோயின் கொடுமையை அழிக்க மருந்தொன்று தேடினாராம். நோயின் வலியையும், அதை எதிர்க்க தாம் தயாரித்த மருந்தின் வல்லமையையும் தாமே அனுபவித்தறிய முயன்றாராம். முதலாவது மலேரியா நோய்க் கிருமிகளைத் தம் உடலில் புகுத்திக்கொண்டார். சில மணி நேரங்களில் கொடிய மலேரியா நோய் அவரைத் தாக்கியது. அதன் உச்சக் கட்டம் வரும்வரை வாளாவிருந்தார். பின் தாம் தயாரித்த மருந்தையும் தம் சரீரத்திற்குள் செலுத்தினார். அவர் முயற்சி வெற்றி பெற்றது, குணமடைந்தார். எனவே, இந்த மருந்தை மருத்துவ உலகிற்குத் தைரியமாக அளித்தார்.

தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவும், இந்த உலகின் பாடு, துன்பங்களை அனுபவிக்கவே உலகில் மனிதனாய் இறங்கி வந்தார். பரலோகத்தில் இருக்கும்வரை தம்மால் மனிதனின் துயரை அறிய முடியாதென்றே, பூலோகம் இறங்கி வந்து 33½ வருடம் 'பாவம்', 'சாபம்' என்னும் நச்சுக்கிருமிகள் நிறைந்த இவ்வுலகில் மனிதனாய் வாழ்ந்தார். நம்மேல் இயேசு வைத்த அன்பு, எவ்வளவு பெரியது! நம் துயரை, கண்ணீரை, வாழ்க்கைப் போராட்டங்களை அவர் நன்கு அறிவார். நம் துயரங்களை அவரிடம் அறிக்கையிடும்பொழுது அதை வெகு நன்றாய் விளங்கிக்கொள்வார். நமக்காகப் பரிதபிப்பார். இதை அடுத்துவரும் பத்திகளில் இன்னும் தெளிவாய் காண்போம்.

ஆ. தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல்

'அவர் (இயேசு) அசட்டைபண்ணப்பட்டவரும், மனிதரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார் . . . மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்' (ஏசா. 53:3,4).

தேவகுமாரனாகிய இயேசு பூமியில் மனிதனாய்ப் பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பு, ஏசாயா என்றொரு பக்தன் வாழ்ந்து வந்தார். அவர்மேல் தேவனுடைய பரி

சுத்த ஆவியானவர் தங்கியிருந்தார். 'தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனிதனுடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியி னாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்' (2 பே. 1:21) என்ற வசனத்தின்படி அந்த பக்தன், பரிசுத்த ஆவியின் ஏவுதலினால், இயேசு பூமியில், ஒரு கன்னியின் வயிற்றில் மனிதனாய்ப் பிறப்பார் என்றும் (ஏசா. 7:14,9:6). மக்களிடையே பலத்த அற்புதங்களைச் செய்வாரென்றும் (ஏசா. 35:46; 61: 1–3) ஆனால் முடிவில் பொறாமைகொண்ட மக்களால் கொடூரமான மரணத்திற்குட்படுவார் என்றும் (ஏசா. 52:14; 53ம் அதிகாரம்) தெளிவாகத் தீர்க்கதரிசனம் உரைத்தார். அவர் மூலம் தேவன் முன் மொழிந்த ஒவ்வொரு வார்த்தை யும் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையில் நிறைவேறிற்று. இயேசுவின் மரணமும் அவ்வாறே கொடூர மரணமாகவே அமைந்தது.

மரணத்திற்கு முன் இயேசுகிறிஸ்து எவ்வாறு தம் மனதில் வியாகுலமடைவார் என்பதையும்கூட அவர் விவரித்தார். அதை மேலே கூறப்பட்டுள்ள ஏசா. 53:3,4ம் வசனங்களில் கண்டோம். அதில் 3ம் வசனம் சொல்லுகிறது: இயேசு 'துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார்' என்று. 4ம் வசனமோ, ஒரு முக்கியமான வார்த்தையைக் கூடச்சேர்த்துச் சொல்லுகிறது.

'அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்'.

இந்த வசனத்திற்கு நம் செவிகளை அதிகக் கவனமாய்ச் சாய்ப்போமாக; யாருடைய பாடுகளை, யாருடைய துக்கங் களை இயேசு சுமந்தார்? ஏசாயா, 'நம்முடைய, நம்முடைய' என்று சொல்லுகிறார். இது எத்தனை பெரிய இரகசியம்! இயேசு கெத்செமனே தோட்டத்தில், இரத்தவேர்வையோடு சுமந்தது, அவருடைய வியாகுலம் மட்டுமன்று, நம்முடைய, உம்முடைய, என்னுடைய, ஏன், உலகத்தில் பிறந்த ஒவ் வொரு தகப்பனுடைய, தாயுடைய, வாலிபனுடைய, வாலிபப் பெண்ணுடைய, குழந்தையினுடைய பாடுகளையே, துக்கங்களையே, வியாகுலங்களையே சுமந்தார். எத்தனை ஆறுதலான சத்தியம்.

G.B. Sathyanesan,

ஒரு மனித வாழ்வு, ஆவி, ஆத்துமா, சரீரம் அல்லது ஆத்துமா, மனம், சரீரம் (Soul, mind and body) என்கிற மூன்று பகுதியுள்ளதாகும். இம்மூன்று பகுதியிலும் செம்மையாயிருக்கும் ஒரு வாழ்வே பரிபூரணமான வாழ்வாகும். 'பாவம்' ஓர் ஆத்துமாவைக் கெடுக்கும் நச்சுக் கிருமியாகும். பாவம் நிறைந்த ஓர் ஆன்மா சாந்தியற்று, தேவனோடு தொடர்பற்றுத் தவிக்கிறது. அத்தகைய ஆன்மா தங்கியிருக்கும் உடல் ஆரோக்கியமாகவும், மனம் இன்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்தாலும், அவ்வாழ்வு பயனற்றதேயாம்.

பல வருடங்களுக்கு முன் பிரபல சினிமா நடிகை ஒருத்தி தற்கொலை செய்துகொண்டாள். உலகின் பல பாகங்களிலும் மக்கள் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தனர். அவளுக்கு வாழ்க்கையில், உலகோர் கணக்கின்படி, ஒரு குறையுமில்லை. பணம் குவிந்திருந்தது. புகழ் நிறைந்து வழிந்தது. அழகில் நிகரற்றவள். கணக்கற்ற வாலிபர்கள் அவளைத் தம் இதய தெய்வமெனக் கருதினர். அவள் படம் எண்ணற்ற ரசிகர்கள் இல்லத்திலும், உள்ளத்திலும் இடம்பெற்றிருந்தது. ஒரு மாலை, புதிதாகத் தன் தேசத்தில் தெரிந்தெடுக்கப்பட்டிருந்த தேசாதிபதியின் மாளிகையில் அவருக்களிக்கப்பட்ட விருந்தில் கலந்துகொண்டு, அவரையும் வந்திருந்த மிக உயர்ந்த செல்வாக்குள்ளோர் பலரையும் மகிழ்வித்தாள். இரவு வீடு திரும்பினாள். மறுநாள் காலை, அவள் தற்கொலை செய்துவிட்டதாக பத்திரிகைகள் அறிவித்தன.

எங்கும் ஒரே அதிர்ச்சி, பரபரப்பு. யாவர் உள்ளத்திலும் எழுந்த கேள்வி, 'ஏன் ஏன்'? போலீசார் அவள் நாட்குறிப்புப் புத்தகத்தை எடுத்து ஆராய்ந்தனர். அவள் கடைசியாக 'தனிமை உணர்ச்சி என்னை வாட்டுகிறது' என்று எழுதியிருந்தாள். பல்லாயிரக்கணக்கான மக்களால் தெய்வத்திற்கு அடுத்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தவள்தான் அவ்வாறு எழுதினாள். அவள் உடலில் அழகும், ஆரோக்கியமும் நிரம்பி வழிந்தது. மனம் திரையுலக சிற்றின்பத்தில் மூழ்கி மயங்கிக் கிடந்தது. ஆனால் ஆத்துமாவிலோ சாந்தியில்லை. அந்த ஆத்துமாவை சாந்தியினால் நிரப்ப வல்லவர் சிருஷ்டிகராகிய தேவன் மட்டுமே. அவர் வாழும் ஆன்மா மட்டுமே தெய்வீக சாந்தியினால் நிரம்பி வழியும். 'துன்மார்க்கருக்குச் சமாதானம்

இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்' என வேதமும் கூறுகிற தன்றோ? (ஏசா. 48:22; 57:21.) அந்த நடிகையின் ஆன்மாவில் உண்டான நோய் தொடர்ந்து மனதையும் வாட்டி முடிவில் சரீரத்தை நஞ்சினால் மாயும்படி செய்தது. புகழ் ஏணியின் உச்சப்படியில் நின்றுகொண்டிருந்த ஒரு வாழ்க்கை, இமைப்பொழுதில் உலகைவிட்டு மறைந்தது.

அவ்வாறே, உடலில் தோன்றும் பிணியும், எந்த வாழ்க்கையையும் நரகமாக்குகிறது. வட இந்தியாவின் முக்கிய நகரமொன்றில், தமது இடையறு உழைப்பால் ஒரு கிறிஸ்தவ சபையைக் கட்டியெழுப்பி, அதைப் பராமரித்து வந்த சிறந்த பக்தியுள்ள நண்பர் ஒருவரை அறிவேன். அவர் தனியார் நிறுவனமொன்றில் உயர் பதவி வகித்து வந்தபொழுதும் ஓய்வுநேரமெல்லாம் ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டு உழைத்தவர். அவர் மனம் எப்பொழுதும் இறைவனைப்பற்றும் துதிப்பாடல்களால் நிறைந்திருக்கும். மகிழ்ச்சி ததும்பும் முகம் உடையவர். ஒரு சமயம் நான் அந்த நகரத்திற்குப் போயிருந்தபொழுது, அவரைக் காண விரும்பி அவர் இல்லம் சென்றேன். அவரைக் கண்டேன். தமக்கே உரிய அன்புக்குரலோடு என்னை வரவேற்றார். ஆனால் என் உள்ளம் எனக்குள் திடுக்கிட்டது. அவர் தோற்றத்தில் மாற்றம் கண்டேன். அவர் உடல் கொடிய ஒரு நோயால் பாதிக்கப்பட்டதால், உருமாறி எலும்பும் தோலுமாயிருந்தார். தம் அலுவலகத்திற்கோ, விரும்பிச்செய்த ஆலயத் திருப்பணிக்கோ செல்ல இயலாமல் படுத்த படுக்கையாயிருந்தார். அவருக்காக என்னையுமறியாமல் கதறி அழுதேன். அவர் உள்ளம் பக்தி நிறைந்தது. மனமோ குழந்தை உள்ளம் போல் தூய்மையானது. ஆனால் சரீரத்தில் தோன்றிய பிணியோ அவர் வாழ்க்கை இன்பத்தைத் தகர்த்தெறிந்தது. வாழ்க்கையே ஸ்தம்பித்துவிட்டது.

சில மாதங்களுக்கு முன் மேல் நாடு ஒன்றிற்குச் செல்லும் வாய்ப்பு இயேசுகிறிஸ்துவின் கிருபையினால் எனக்குக் கிடைத்தது. அந்நாட்டின் சிறப்பையும், செழிப்பையும் கண்டு வியப்படைந்தேன். வேதத்தில் சொல்லப்பட்ட, பாலும் தேனும் ஓடும் தேசம் இதுவோ என என் மனம் எண்ணியது. எங்கும் மக்கள் மிக்க மகிழ்ச்சியோடும் மலர்ந்த முகத்தோடும் காணப்பட்டனர். எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்ட மக்கள் என சற்றுப்

பொறுமையும் கொண்டேன். சில நாட்கள் கழிந்தன. அந் நாட்டுப் போதகர் ஒருவரோடு உரையாடிக் கொண்டிருக்கை யில், அவர் தம் நாட்டைப்பற்றிச் சொன்ன ஒரு செய்தி என் னைத் தடுமாறச்செய்தது. 'எங்கள் நாட்டில்தான் கூடுதலான மக்கள் மன நோயினுல் வாடுகிறுர்கள். அநேகர் மன நோய் மருத்துவ மனைகளிலேயே தம் வாழ்நாளைப் பரிதாபமாகக் கழிக்கின்றனர்' என்பதே அவர் கூறியது. செல்வம் செழித் தோங்கும் அந்நாட்டில், மக்கள் உடற்கட்டில் மிகுந்த ஆரோக் கியமாகக் காணப்படும் அந்நாட்டில் அநேகர் மனநோய் மருத் துவ மனையில் வாடக் காரணமென்ன? கவலையென்னும் ஓர் கொடிய நச்சுப் பூச்சி அவர்தம் மனதை கடித்துக் குலைத்து விடுகிறது. ஆன்மாவிற்கும், கட்டுக்கோப்பான அவர்தம் உட லுக்கும் நடுவில் இணைகம்பியாய் விளங்கும் 'மனம்' உடைவு பட்டுவிட்டதால் ஆன்மாவிற்கும் உடலுக்கும் தொடர்பு அற்றுப்போயிற்று. ஆன்மாவை உள்ளடக்கிய உடல் செய லற்று மருத்துவ மனையில் பயனற்று வாடுகிறது.

மேற்கண்ட மூன்று உதாரணங்கள் மூலம் ஓர் உண்மையை விளங்கிக்கொள்ளலாம். ஒரு மானிட வாழ்வு பூரணத்தோடு விளங்கவேண்டுமானுல் ஆன்மா, மனம், சரீரம் மூன்றிலும் ஆரோக்கியமும், இணைப்பும் இருத்தல் வேண்டும். மூன்றில் ஏதாவது ஒன்று பழுது பட்டாலும் அவ்வாழ்வு உடைந்த பாத் திரமே! மோட்டார் ஒன்றை எடுத்துக் கொள்வோம். அழகிய வர்ணங்கள் தீட்டப்பட்ட கண்கவர் உடல் ஒன்று அதற்கு உண்டு; அது ஊர்ந்து செல்லும்படி செய்யும் யந்திரம் ஒன்று அதனுள் அடங்கியுள்ளது. யந்திரத்தை இயங்கச் செய்யும் ஜீவனுக பெட்ரோல் இருக்கிறது. அந்த வாகனம் பூரணத் தோடு விளங்க உழைக்க இம்மூன்றும் செம்மையாயிருத்தல் அவசியம். அஃதே போன்று மனித வாழ்விலும் பூரணம் விளங்க ஆன்மா, மனம், சரீரம் இம்மூன்றும் ஆரோக்கியத் தோடிருப்பதும் ஒன்றேடொன்று இணைந்து செயல்படுவதும் இன்றியமையாததாம்.

நல்லது. இனி ஓர் மனிதனின் உள்ளடங்கிய மனதின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் கொடிய நச்சுக்கிருமிதான் என்ன? அதற்கும் தேவகுமாரனுகிய இயேசுவின் 'இரத்த

வேர்வைக்கும்' உள்ள தொடர்பும்தான் என்ன என்பதையும் சற்றே வேதாகமம் வாயிலாக நோக்குவோம்.

'மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும்'
'மனோதுக்கத்தினாலே ஆவி முறிந்துபோம்'
'இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்'
(நீதி. 12:25; 15:13; 14:10).

மேற்கண்ட வசனங்கள், மனிதனின் மனதை அரிக்கும், விஷப் பூச்சிக்கு மூன்று பெயர்களைக் கொடுக்கின்றன. கவலை, துக்கம், கசப்பு, காலரா, க்ஷயரோகம், டைபாய்டு போன்ற நோய்க்கிருமிகள் ஒரு ஆரோக்கியமான உடலுக்குள் நுழைந்து அவ்வுடலைக் கெடுப்பதுபோல இந்தக் கிருமியும் மக்களின் மன திற்குள் நுழைந்து அதைச் செயலற்றுப்போகும்படி செய்து 'மனநோய்' என்னும் பிணியையும் உண்டாக்கி அவ்வாழ்வை நரகமாக்குகிறது.

ஒரு சமயம் மிக வயதான ஒரு அம்மாளுக்காக ஜெபிக்கும்படி தேவ ஊழியர் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். அவர் அந்த அம்மாளைக் கண்டவுடன் திடுக்கிட்டார். காரணம் அந்த முதிர் வயதில் அவர்களை ஒரு சாய்வு நாற்காலியில் படுக்க வைத்து கை கால்களை கயிறுகளால் கட்டிவைத்திருந்தனர். 'இவ்வாறு கட்டப்பட காரணம் என்ன?' என அவர் வினவிய பொழுது அவர்கள் கொடுத்த மறுமொழி:

'ஐயா! இந்த அம்மையாருக்குக் குழந்தைகள் இல்லை. அவர்களுக்கென சொந்தமாக ஒரு தனி வீடும் இல்லை. எனவே வயதான பிறகு நான் எங்கு தங்குவேன் என்று தனக்குள்ளேயே கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு அதை அடக்கி வைக்க முடியாமல் அவ்வாறே தம் வாயினால் முணுமுணுத்துக் கொண்டிருப்பார்கள். இதே சிந்தனை மூளையைத் தாக்க இப்பொழுது பைத்தியம் பிடித்துவிட்டது. எழுந்து அடிக்கடி சுயநினைவின்றி ஓடிவிடுவதால் இப்படிக் கட்டி வைக்க வேண்டிய ஓர் நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுவிட்டது. உறவினரும், நண்பரும் அந்த அம்மாளுக்கு ''அவ்விதக் கவலையே வேண்டாம் நாங்களெல்லாம் கவனித்துக்கொள்வோம்'' எனப் பலமுறை சொல்லியும் அவள் கேளாததால் இன்று இந்தப் பரிதாப நிலை!'

மனக்கவலையோ கசப்போ துக்கமோ மிகக் கொடிய விஷக் கிருமி என்பதை இந்த ஒரே சம்பவம் திட்டமும் தெளிவுமாக விளக்குகின்றது. மற்ற விஷ நோய்க் கிருமிகளுக்கு விலகி ஓடுவது போலவே இதற்கும் விலகி ஓடி நம் வாழ்வைக் காத்துக் கொள்வது எத்துணை அவசியம். ஐயா! கேட்பதற்கே பயங்கரமாக உள்ள இந்தக் கொடிய சத்துருவிடமிருந்து நம்மைத் தப்புவித்துக்கொள்ள வழியேதும் உண்டோ என நம் உள்ளத்தில் ஒரு கேள்வி எழுகின்றதல்லவா? ஒரு நற்செய்தி! தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து கெத்செமனே தோட்டத்தில் தாம் யூதாசால் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில் இந்தக் கொடிய மக்களின் விரோதியை முகமுகமாய்ச் சந்தித்தார். அதன் கொடிய விஷத் தீண்டலைத் தாமே அனுபவித்தார். அதன் வல்லமையை நிரந்தரமாக அழித்தார். வெற்றி சிறந்தார்.

ஏசாயா தீர்க்கதரிசி மொழிந்த தீர்க்கதரிசனத்தை மறுபடியும் சற்று ஆராய்ந்தால், கெத்செமனே தோட்டத்தில் தேவகுமாரனுக்கும், இந்த மானிட இனத்தின் விரோதிக்கும் நிகழ்ந்த போராட்டத்தைத் திட்டமாய் விளங்கிக்கொள்ளலாம்.

> அவர் 'துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார்',
> 'நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்' (ஏசா. 53:3,4).

கெத்செமனே தோட்டத்தில் இயேசுவிடம் காணப்பட்ட நான்கு தன்மைகள், துக்கம், வியாகுலம், திகில், மரணத்திற்கேதுவான துக்கம் (மத். 26:37,38; மா. 14:33) எனலாம். அவர் மனிதனாக பூமியில் வாழ்ந்த 33½ வருடங்களும் அவரிடம் காணப்படாத இந்தத் தன்மைகள், இப்பொழுது திடீரென்று காணப்படக்காரணம் என்ன? உலகோர் அத்தனைபேரும் இந்த உலகில் அனுபவிக்க வேண்டிய வியாகுலம், திகில், துக்கம் யாவற்றையும் அவர் தாமே சுமந்தார். அது எவ்வளவு கடினமாயிருந்திருக்க வேண்டும். இந்திய நாட்டில் 60 கோடி மக்கள் உண்டு. இந்திய மக்கள் ஒவ்வொருவருடைய கவலையை மட்டும் இயேசு சுமந்திருந்தால் கூட, அது எத்தனை பெரிய பளுவாக இருந்திருக்கக் கூடும்.

இந்த நூற்றுண்டின் ஆரம்ப நாட்களில் இங்கிலாந்து தேசத்தில் ஸ்மித் விகிள்ஸ்வொர்த் என்ருெரு பக்தர் இருந்தார். அவர் கிறிஸ்துவின் அன்பினுல் நிறைந்தவராய் உலகெங்கும் நோயினுல் வாடும் மக்கட்காக ஜெபிப்பதையே தம் தொண்டாகக் கொண்டிருந்தார். அவர் பிரார்த்தனையால் அற்புத குணமடைந்தோர் எண்ணிக்கை கணக்கிலடங்காது. அவரது முடிவைப்பற்றிய வரலாறு ஆச்சரியமானது.

வயதுசென்ற அவர், தமது நெருங்கிய நண்பர் ஒருவரது மரண ஆராதனைக்கென ஆலயம் சென்றிருந்தார். அங்கே அவர் அமைதியாக அமர்ந்திருந்தபொழுது அவரது நண்பர் ஒருவர் அங்கு வந்தார். அவரைப் பார்த்ததும், பயங்கர நோய் ஒன்றினுல் அவரது மகள் வாடியதும் அவளுக்காகத் தாம் சென்று ஜெபித்ததும் விகிள்ஸ்வொர்த்துக்கு ஞாபகம் வந்ததுபோலும். அவரை அணுகி அந்தப் பெண்ணின் நலன் பற்றி அதிகக் கருத்தாய் விசாரித்தார். அந்த நண்பர் மிகுந்த கவலையோடு, தன் மகள் இன்னும் சுகமடையாமல் மிகப் பரிதாபமான நிலையில் இருப்பதை விவரித்தார். ‘இன்னுமா சுகமடையவில்லை?’ என்று மிகுந்த பாரத்தோடு தம் நண்பரின் வியாகுலத்தைத் தம்முடையதாகவே எடுத்துக்கொண்டு நீண்ட ஒரு பெருமூச்சு விட்டார். அவர் துயரம் மிக ஆழமாக அவர் நெஞ்சைத் தாக்கியதுபோலும். அந்தப் பெருமூச்சோடு கூடச் சேர்ந்து அவரது உயிரும் பறந்து போயிற்று. அந்த ஆலயத்தில் தம் இருக்கையிலேயே அவர் மரித்து இயேசுவின் பாதம் சேர்ந்தார்.

ஒரே ஒரு மனிதனுடைய துயரத்தைத் தம்முடையதாகப் பாவித்து அவர் வியாகுலத்தைத் தம் உள்ளத்தில் எடுத்துக் கொள்ள பக்தன் விகிள்ஸ்வொர்த் முயன்றபொழுது அந்தப் பளுவைத் தாங்க இயலாமல் அவர் இருதயம் நின்றுபோனது. 60 கோடி இந்தியரின் மன வியாகுலத்தையும் உலகிலுள்ள அத்தனை கோடி மக்களின் வியாகுலத்தையும் இயேசு கெத்செமனே தோட்டத்தில் சுமக்க நேரிட்டபொழுது அவர் இருதயம் எப்படித் தவித்திருக்கவேண்டும்? அவர் மனதை நெருக்கிய வியாகுலம், மெள்ள மெள்ள இருதயத்தைத் தாக்கி, நரம்புகளைத் தாக்கி இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தி, அழுத்தி, வேர்வையோடு கலக்கும்படி செய்தது. வியா

 B. Sathyanesan, B.A.

குலத்தின் பாரத்தைத் தாங்க இயலாது, தடுமாறி, முகங் குப்புற விழுந்த இயேசுவின் சரீரத்தில் இருந்து வெளிவர முயன்ற வேர்வை, அவர் இரத்தத்தையும், சேர்த்து இழுத்து வந்தது. இதுதான் இயேசு அடைந்த இரத்த வேர்வையின் இரகசியம்.

'நெஞ்சமே, கெத்செமனேக்கு நீ நடந்து வந்திடாயோ?
சஞ்சலத்தால் நெஞ்சுருகித் தயங்குகின்றார் ஆண்டவனார்!
இரத்தவேர்வையாலே தேகம் மெத்த நனைந்திருக்குதே
குற்றம் ஒன்றும் செய்திடாத கொற்றவர்க் கிவ்வாதை
ஏனோ?'

என்ற பாடலில், கவிஞர் ஒருவர் பாவம் இன்னதென்பதறி யாத தேவகுமாரனுடைய தேகம் இரத்த வேர்வையாலே நனையக் காரணம் என்னவென்று தவிக்கின்றார்.

'ஐயா! இயேசு, நம் வியாகுலத்தை, நம் பாடுகளை, உலகி லுள்ள யாவருடைய துக்கத்தை, தம் மீது ஏற்றுத்தவித்தார்' என்பதே நாம் அளிக்கும் பதில். இந்தக் கொடிய பாரத் தைத் தூக்க இயலாது தவித்து பிதாவாகிய தேவனை நோக்கி 'என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடு மானால் நீங்கும்படி செய்யும்' என ஜெபிக்க ஆரம்பித்த அவர் கடைசியில் 'என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது' எனத் தம்மை தேவ சித்தத்திற்கு ஒப்புவிக்கிறார். 'கர்த்தரோ அவரை நொறுக் கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்' (ஏசா. 53:10) என்ற தீர்க்கதரிசனத்தின்படி தேவதீர்மானத்தின்படி நாம் அனைவரும் உலகில் பற்பல காரணங்களால் அடைய வேண்டிய வியாகுலத்தைத் தேவன் அவர்மேல் சுமத்தினார். அந்தச் சுமையின் கீழ் அவர் நொறுங்கினார். பிழியப்பட்டார். அவர் சரீரத்திலிருந்து இரத்தம் வேர்வையாகப் பீறிட்டு வெளி வந்தது.

துயரம், துக்கம், வியாகுலம், திகில் நிறைந்த ஓர் உலகில் நாம்வாழ்கிறோம். ஒவ்வொருநாளும் ஒவ்வொருவிதப்பிரச்சினை நம் உள்ளத்தைக் கலக்குகிறது. எங்கு செல்வோம், யார் எம் கவலையை நீக்குவார் என நம் உள்ளம் நமக்குள் தவிக்கிறது,

வியாகுலமடைகிறது. வாழ்க்கைக் கவலை நாள்தோறும் நம்மை நெருக்குகிறது. கண்களில் கண்ணீர், உள்ளத்தில் கலக்கம், 'இரவும். பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று' (சங். 43:3) என்ற வேத வார்த்தையின்படி வியாகுலத்தோடு வாழ்க்கை நடத்தும் நமக்கு ஒரு நற்செய்தி! இன்று நாம் அனுபவிக்கும் மனவேதனைகளை அவர் தாமே கெத்செமனே தோட்டத்தில் ஏற்கெனவே 2000 வருடங்களுக்கு முன் அனுபவித்துத் தீர்த்தார். இன்று துயர நேரத்தில் அவர் பாதத்தில் ஜெபத்தின்மூலம் விழுந்து, நம் துயரங்களைச் சமர்ப்பிக்கும்பொழுது, அவர் உள்ளம் கெத்செமனேயில் தாம் அனுபவித்த வியாகுலம், திகில், துக்கம் இவற்றை நினைவுகூருகிறது. நம்பால் அனுதாபத்தோடு உருகுகிறது. அவருடைய மனவுருக்கம் நம் இடர்கள் யாவற்றிலுமிருந்து நம்மை விடுவிக்கிறது. கெத்செமனேயில் அவர் 'பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும்' ஜெபித்ததால், இன்றும் அவர் சமூகத்தில் கண்ணீரோடு நாம் வேண்டுதல் செய்கையில், அவர் தாமே அதைக் கேட்டு, நம் கண்ணீரையெல்லாம் விரைந்து வந்து துடைக்கிறார்.

'கண்ணீரெல்லாம் துடைப்பார் கண்மணிபோல் காப்பார்,
கார்மேகம் போன்ற கஷ்டங்கள் வந்தாலும்
கனிவுடன் உன்னைக் காத்திடவே இயேசு அழைக்கிறார்'

என பக்தன் ஒருவனும் இதையே மனதில் வைத்துப் பாடினான் போலும்! அருள்நாதர் இயேசுவும், பின்வருமாறு மொழிந்தாரே:

'நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்' (மத். 6:34). 'வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத். 11:28).

இயேசுவின் அச்சடையாளங்களைத் தரித்திருந்த அவர் சீடன் பவுலும் அவ்வாறே நமக்குக் கூறினாரன்றோ:

'நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே

கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்' (பிலி. 4:6,7).

இயேசு சிந்திய இரத்தவேர்வை, நாம் வியாகுலத்தில் மூழ்கி இரத்தக் கண்ணீர் சிந்துவதைத் தவிர்த்து நமக்கு வாழ் வளிக்கிறது. இவ்வாறு இயேசுவால் வாழ்வுபெற்ற ஒரு குடும் பத்தின் கதை என் நினைவிற்கு வருகிறது:

ஒரு கணவனும் மனைவியும் தம் ஐந்து குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தனர். வறுமையின் மேல் வறுமை அவர்களை வாட்டியது. கடன் பளு அவர் குடியிருந்த சொந்த வீட்டை யும் விழுங்கியது. ஒருநாள் அவர்கள் குழந்தைகளில் ஒருவன் கடைக்குச் சென்று, சில பொருள்கள் வாங்கும்பொழுது கடைக்காரன் அவன் ஏழைச் சிறுவன் என்பதற்காக, வேறு யாரோ செய்த திருட்டுப்பழியை அவன் மேல் அநியாயமாய்ச் சுமத்தினான். சிறுவன் அழுதுகொண்டே வீடு திரும்பினான். இந்நிகழ்ச்சி, அந்தத் தாயின் மனதை வெகுவாய் வேதனைக் குட்படுத்தியது. இனி இவ்வுலகில் வாழ்வது எதற்கு என்ற கேள்வி அவளுக்குள் எழுந்தது.

கணவனும், தன் நான்கு குழந்தைகளும் முறையே அலுவல கத்திற்கும் பள்ளிக்கும் செல்லும் வரை காத்திருந்தாள். தன் ஐந்து வயதே நிரம்பிய கடைசிக் குழந்தையோடு ஓர் அறைக் குள் நுழைந்தாள். எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடினாள்; சமையல் அடுப்பிற்கென வரும் எரிவாயுவைத் (Gas) திறந்துவிட்டாள். குழந்தையை அணைத்துக்கொண்டு வெகு வாய் மனம் சோர்ந்து மரணத்தை எதிர்நோக்கி ஒரு படுக்கை யில் சாய்ந்தாள். குழந்தை பலவிதக் கேள்விகளைக் கேட்சு ஆரம்பித்தது: 'அம்மா! இப்பொழுதுதானே படுக்கையி லிருந்து எழுந்தோம். ஏன் மறுபடியும் படுத்துக்கொண்டோம்? அம்மா! ஒரே வெப்பமாயிருக்கிறது, ஏன் கதவையும் மூடி விட்டீர்கள்?' தாய் சொன்ன ஒரே பதில்: 'பேசாமலிரு! பேசாமலிரு!' என்பதே. வாழ்வுப் படகு மூழ்கும்போது வேறு என்ன பதில் கூற முடியும்? அப்பொழுதுதான் அறைக்கு

வெளியே இயக்கியே வைக்கப்பட்டிருந்த வானொலிப் பெட்டியில் ஓர் இனிய கீதம் ஒலிபரப்பாகியது. அந்தப் பாடலின் இனிமை, கருத்து அந்தத் தாயின் உள்ளத்தில் கன்மலைத் தேன்போல் பாய்ந்தது:

'பாவ சஞ்சலத்தை நீக்க, பிராண நண்பர் தான் உண்டே!
பாவப்பாரம் தீர்ந்து போக, மீட்பர் பாதம் தஞ்சமே!
சால துக்க துன்பத்தாலே, நெஞ்சம் நொந்து சோருங்கால்!
துன்பம் இன்பமாக மாறும், ஊக்கமான ஜெபத்தால்!
கஷ்ட நஷ்டம் உண்டானாலும், இயேசுவண்டை சேருவோம்!
மோச நாசம் நேரிட்டாலும், ஜெப தூபம் காட்டுவோம்!
நீக்குவாரே நெஞ்சின் நோவை, பலவீனம் தாங்குவார்!
நீக்குவாரே மனச்சோர்பை, தீயகுணம் மாற்றுவார்!'

பாடல் அளித்த இயேசுவின் அன்பைப்பற்றிய செய்தி, அவள் உள்ளத்தை இழுத்தது. உனக்கு இன்னும் நம்பிக்கை உண்டு என அவள் மனதில் நம்பிக்கை ஊட்டியது. சட்டென படுக்கையிலிருந்து எழுந்தாள். குழந்தையை அள்ளி அணைத்தாள். கதவைத் திறந்து வெளியே ஓடினாள். வானொலிப் பெட்டியின் அருகே உட்கார்ந்து தேம்பித்தேம்பி அழுதாள். 'இயேசு சுவாமி! தற்கொலை செய்துகொள்ள எண்ணிய என்னை மன்னியும்! என் குறைகளை மன்னியும்! என் கவலைகளை உம் மலர்ப் பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். என்னையும் என் குடும்பத்தையும் காப்பாற்றும்' எனக் கதறினாள். கெத்செமனே தோட்டத்தில், அவளைப் போலவே மிகுந்த வியாகுலம் நிறைந்து கதறிய இயேசு அவள் சோகக் குரலைக் கேட்டார்! உள்ளத்தில் ஆறுதல் அளித்தார். நிலைமை மாற ஆரம்பித்தது. இழந்த உலக ஆசிகளையும் திரும்ப அந்தக் குடும்பம் பெற ஆரம்பித்தது. பலருக்கு ஆறுதல் அளிக்கும் குடும்பமாகத் திகழ்ந்தது.

இந்தக் குடும்பத்திற்கு இவ்வாறு புது வாழ்வு அளித்தது இயேசுவின் இரத்த வேர்வை, கெத்செமனேயில் தேவ குமாரன் சிந்திய இரத்த வேர்வை. இரத்த வேர்வை சிந்திய அவர் நமக்கும் வாழ்வளிப்பார்.

இ. 'மரணத்துக்கேதுவான துக்கம்'

கெத்செமனே தோட்டத்தில் இயேசு 'துக்கமடையவும், வியாகுலப்படவும்' தொடங்கின பொழுது தம் சீடர்களைப் பார்த்து, 'என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருக்கிறது' (மத். 26:38) என்றார். மக்களுக்காக என் ஜீவனையும் கொடுக்கவே வந்தேன் என்று சொன்னவர் (யோவா. 10:15), இப்பொழுது அந்த நேரம் வந்தபொழுதோ, 'மரணத்திற்கேதுவான துக்கம்' என்னை நிரப்புகிறது என்று கதறுகிறார். காரணம் என்ன? வேதம் என்ன சொல்லுகிறது?

'ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும் படிக்கும் அப்படியானார்' (எபி. 2:15).

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் விரும்பாத, பயந்து நடுங்கும் ஒரு காரியம் 'மரணம்'. மரணத்தைப்பற்றிய பயம் இல்லாதோர் யார்? ஆனால், தம்மை நேசிப்பவர்கள், இந்த மரண வேதனை, துக்கம் இவற்றிலிருந்தும் விடுதலை பெற்று மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்பதற்காக துக்கத்தின் சிகரமாகிய 'மரண துக்கத்தையும்' இயேசு அனுபவித்தார். தன் மார்பில் பால் குடிக்கும் குழந்தை நோய்வாய்ப்படும் பொழுது, கசப்பான கடினமான மருந்தை தான் உட்கொண்டு தாய்ப்பால்மூலம் அந்த மருந்தின் சக்தி, தன் குழந்தையின் சரீரத்தில் பாய்ந்து சுகமடையும்படி செய்யும் தாய்போல, இயேசுவும் மரண துக்கம், மரண பயம் தன் அடியார்களை அணுகாமல் இருப்பதற்காக அந்தத் துக்கத்தையும் கெத்செமனேயில் அனுபவித்தார். ஆம்! இயேசுவின் 'இரத்த வேர்வை', நம் உள்ளத்தில் தோன்றும் மரண துக்கத்தையும் நீக்குவதற்காகவேயாம்.

இயேசுவின் பாதத்தில் தம் வாழ்வை அர்ப்பணித்து, அவர் தம் தூய இரத்தத்தால் தங்கள் கருமம், பாவம் இவைகளிலிருந்து கழுவப்பெற்று தூய்மையடைந்தோருக்கு அவர் கொடுக்கும் வேறொரு பேறு 'மரண பயத்தினின்றும் விடுதலை.' இயேசுவின் சீடரும்கூடத் தம் மரணத்தைப்பற்றிக் கூறினதென்ன? பவுல் அடியார் இவ்வாறு கூறினார்:

'நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது . . . ஓட்டத்தை முடித்தேன்' (2 தீமோ. 4:6,7).

'தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு' (பிலி. 1:23).

மரணத்தைப்பற்றி ஒரு பயத்தோடு அவர் பேசவில்லை. மரணத்திற்குப் பின் கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையாயிருக்கிறது என மகிழ்ச்சியுடன் பேசினர்.

கிறிஸ்துவின் ஊழியத்தை தியாக சிந்தையோடு செய்து வந்த ஓர் ஊழியரை அறிவேன். ஒருநாள் அவர் ஒரு கூட்டத்தில் பேசின பொழுது, இவ்வாறு கூறினர்: 'சில நாட்களுக்கு முன் கனவொன்று கண்டேன். எனக்கு முன் மரித்துப்போன ஒரு சகோதரர் என் கனவில் தோன்றி, ''நீங்களும் வாழ்க்கையை முடிக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா?'' எனக் கேட்டார்கள். இவ்வளவுதான் கனவு, ஆனல் நான் திட்டமாக உங்கள் யாவருக்கும் முன்பாகச் சொல்ல முடியும். நான் மரித்து இயேசுவிடம் செல்ல ஆயத்தமாகவே இருக்கிறேன்.'

அவ்வாறே மூன்ரும் நாள் இரவு தன் படுக்கையில் மிகுந்த சமாதானத்தோடு தன் தேகத்தை விட்டு ஆண்டவரின் திருவடி சேர்ந்துவிட்டார்.

இயேசுவின் இரத்த வேர்வை, உலகில் நாம் அனுபவிக்கும் வியாகுலம், துக்கம் இவற்றிற்காக மட்டுமல்ல, நாம் தேகத்தைவிட்டுப் பிரியும் வேதனை நேரம் வரும்பொழுது நம்மைத் தேற்றுவதற்காகவுமே. நமக்காக 'இரத்த வேர்வை' யைச் சிந்திய இயேசுவை நம் உள்ளத்தில் நாம் ஏற்று இருக்கிருேமா? அப்பொழுது இயேசுவின் 'இரத்த வேர்வை' சம்பாதித்த சகல பாக்கியமும் நம்முடையதாகும். இயேசுவின் 'இரத்த வேர்வை' நம் வியாகுலம், திகில், துக்கம் இவற்றை நம் வாழ்விலிருந்து அகற்றி நித்திய வாழ்வை நமக்கு இப்பொழுதே தரும்.

மனதில் பதிய வேண்டிய சத்தியங்கள்:

இயேசு சிந்திய இரத்த வேர்வை எனக்காக.

கெத்செமனேயில் அவர் பட்ட வியாகுலம், திகில், துக்கம்

என் வியாகுலம், கவலை யாவற்றையும் தீர்க்கவே.
இயேசு மரணத்துக் கேதுவான துக்கத்தினுல் நிரம்பியது
என் மரண நேரத்தில் நான் அதற்குத் தப்பவே!
ஆம்! நான் மகிழ்வுடனே இவ்வுலகில் வாழ்ந்து,
மகிழ்வுடனே

இயேசுவின் பாதம் சேருவேன்.
'பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு?
பூலோகத்தில் உம்மைத்தவிர எனக்கு வேறே விருப்ப
மில்லை!' (சங். 73:25.)

2

'இரத்தம்'

'அந்நாளிலே பாவத்தையும் அழுக்கையும் நீக்க தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்' (சக. 13:1).

'அவருடைய (தேவனுடைய) குமாரனுகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்' (1 யோ. 1:7).

மனித வர்க்கத்தில் பாவம் மிகப் பழம் பிரச்சினே. தேவன் ஒரு மனிதனையும் அவனுக்குத் துணையாக ஒரு பெண்ணையும் ஆதியிலே படைத்தார் என வேதம் சொல்லுகிறது. அவர்களுக்கு முறையே ஆதாம், ஏவாள் எனப் பேரிட்டார். ஏதேன் என்னும் தோட்டம் ஒன்றை உண்டாக்கி அங்கே அவர்களைத் தன் செல்லப் பிள்ளைகளைப்போல் வைத்திருந்தார். அவர்களோடு உலாவினுர்; சஞ்சரித்தார் (ஆதி. 3:8,9).

அவர்களுடைய பாதுகாப்பிற்கென ஒரு கட்டளையும் கொடுத்துவைத்திருந்தார். 'நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம், ஆனுலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் காலத்தில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்' (ஆதி. 2:16,17) என்று வேதம் சொல்லுகிறது. அந்தோ! மனிதன் இக்கட்டளையை மீறினுன். வேதம் ரோமர் 3:23ல் சொல்லுகிறதுபோல் அவர்கள் இதன் நிமித்தமாய் 'தேவ மகிமையற்றவர்களாகி', தேவனுடைய பிரசன்னத்தை இழந்துபோனுர்கள். பாவம் அன்றுமுதல் மனித வர்க்கத்தை உடும்புபோல் பிடித்தது. ஒவ்வொரு குழந்தையின் இரத்தத்திலும்கூட பாவ சுபாவம் குடிகொண்டிருக்கிறது என வேதம் சொல்லுகிறது (சங். 51:5).

மனிதன் சிருஷ்டிக்கப்பட்டவுடன் தேவ பிரசன்னத்தை இழப்பதற்கு முன், தேவன் அவனை ஆசீர்வதித்தார். 'தேவன்

தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாகவே அவர்களைச் சிருஷ்டித்தார்.

பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பிஅதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்' (ஆதி. 1:27,28).

மனிதன் பாவம் செய்து, தேவனுடைய பிரசன்னத்தை இழந்த பொழுதும் மேற்கண்ட ஆசீர்வாதம் நிலைத்து நிற்கிறது. அது மாறிப் போகவில்லை. மனித வர்க்கம் பூமியெங்கும் இன்னும் பலுகிப் பெருகிக்கொண்டேயிருக்கிறது. எனினும் மானிடவர்க்கத்தை இந்தப் பாவம் என்னும் சாபத்தினின்றும் விடுவிக்க தேவன் ஒரு வழி வகுத்தார். அதைக் கீழ்க்கண்ட வசனங்களில் நாம் காணலாம்.

'இரத்தமே உயிர்' (உபா. 12:23).

'சகல மாம்சத்திற்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் ஜீவனுக்குச் சமானம்' (லேவி. 17:14).

'மாம்சத்தின் உயிர் இரத்தத்திலே இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன், ஆத்துமாவிற்காகப் பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே' (லேவி. 17:11).

பாவம் செய்ததற்கு தேவன் கொடுத்த நியாயத்தீர்ப்பு கடினமானது. 'உன் கண் அவனுக்கு இரங்க வேண்டாம்; ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்படவேண்டும்' (உபா. 19:21). 'ஒருவன் பிறனை ஊனப்படுத்தினுல், அவன் செய்தபடியே அவனுக்கும் செய்யப்படக்கடவது. நொறுக்குதலுக்கு நொறுக்குதல், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' (லேவி. 24:19,20). 'ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்கு காயம், தழும்புக்குத் தழும்பு பழிகொடுக்க வேண்டும்' (யாத். 21:23-25).

"ஜீவனுக்கு ஜீவன்" இதுவே தெய்வ நியாயம். பாவம் அவ்வளவு கொடியது. ஒரு மனிதனின் ஆத்துமாவில் உண்டாகும் பாவக்கறை நீக்கும் பரிகாரமாக வேறொரு பலி செலுத்தியாக வேண்டும். இல்லையெனில் பாவ விஷம் நிறைந்த அந்த ஆத்மா இறைவனது திருப்பிரசன்னத்தை இழந்து மடிந்து விடும். "பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசே. 18:20). "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோ. 6:23) என்று வேதமும் கூறுகிறதல்லவா? எனவே தான் பாவம் என்னும் விடம் நிறைந்த ஒரு ஜீவனுக்காக, தேவன் இரத்தம் சிந்துதலை நியமித்தார். காரணம், "இரத்தம் ஜீவனுக்குச் சமானம்" (லேவி. 17:14).

லேவியராகமம் புத்தகத்தில் நாம் மனிதன் தன் வாழ்வில் காணும் கருமங்களைப் போக்கிக்கொள்ள பல்வேறு பலிகளை தேவன் நியமிப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக 4, 5, 6 அதிகாரங்களில் "பாவநிவாரண பலி"யைப் பார்க்கிறோம். பாவம் செய்த ஒருவன் தான் செய்த பாவத்தை உணரும் பொழுது அதற்குப் பிராயச்சித்தமாக காளை, ஆட்டுக்கடா, வெள்ளாட்டுக் குட்டி, புறா இவற்றில் ஒன்றை, தேவனுடைய ஆசாரியனிடம் கொண்டுபோய், அதன்மேல் தன் கையை வைத்து, பிறகு அதை ஆசாரியனிடம் ஒப்புவிக்கவேண்டும். அந்த மிருகம் அல்லது புறாவின் மேல் தன் கையை வைப்பது, அவன் தான் பாவி என்று ஒத்துக்கொள்வதையும், தன் பாவத்திற்குத் தண்டனையாக அந்த மிருகம் அல்லது புறாவின் ஜீவன் பலியாகக் கொடுக்கப்படுகிறதென்பதையும், தன் மேலிருந்த பாவம், சாபம் யாவும் அதன்மேல் கடந்து போகிற தென்பதையும் காண்பிப்பதற்காகவே. ஆசாரியன் அந்தப் பிராணியை, தேவ சந்நிதியில் வெட்டுகிறான். அதன் இரத்தத்தை பலிபீடத்தில் தெளிக்கிறான். அந்த இரத்தத்தில் மறைந்திருக்கும் ஜீவனைப் பார்த்து, தேவன் பாவம் செய்த மனிதனின் பாவத்தை மன்னிக்கிறார். அவன் ஜீவன் பாவத்திற்குரிய தண்டனையால் மடியாமல் காக்கிறார். "அப்பொழுது ... மன்னிக்கப்படும்" என்ற வார்த்தை மறுபடியும் மறுபடியும் இந்த அதிகாரங்களில் கூறப்படுவதை நாம் காணலாம் (லேவி. 4:20, 26, 31, 35; 5:10, 16, 18; 6:7).

தேவன் பாவம் செய்த மனிதனுடைய அந்தக் குறிப்பிட்ட குற்றத்தை, பாவத்தை மன்னிக்கிறாரே தவிர, பாவத்தின் வேர் அவனை விட்டு அகற்றப்படுவதில்லை. பாவ சுபாவத்தின் மேல் அவனுக்கு வெற்றியில்லை. செய்த பழைய குற்றங்களையே அவன் திரும்பத் திரும்பச் செய்கிறான். மறுபடியும், மறுபடியும் பலிகளைச் செலுத்தி தேவனிடம் மன்னிப்புக் கேட்கிறான். இதை எபிரேயர் 10:1–4 முதல் உள்ள வசனங்கள் அழகாய் விளக்குகின்றன. '. . . வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்தவருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்ட பின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா?

அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே ஆண்டு தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம், பாவங்களை நிவிர்த்திசெய்ய மாட்டாதே'.

'காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்ய மாட்டாதே!' என்ற வசனம் ஆழ்ந்த கருத்துடையதாக இருக்கின்றது. அந்தப் பலிகளின் இரத்தத்தைப் பார்த்துச் செலுத்தும் மக்களுடைய குற்றங்களை தேவன் மன்னிக்கும்படி அந்தப் பலிகள் அவரைத் தூண்டுகின்றனவே தவிர பாவம் செய்தவர் உள்ளத்தின் ஆழத்தில் உறைந்து கிடக்கும் பாவக்கறைகளை அவை அகற்றுவதில்லை. பாவஞ் செய்யத் தூண்டும் இச்சைகள்மேல் நிரந்தர வெற்றி தருவதுமில்லை. இதை ஒரு நடைமுறை உதாரணத்தால் விளக்குவோம்.

நான் சிறுவனாயிருந்தபோது எங்களூரில் வருடா வருடம் ஒரு திருவிழா நடக்கும். அப்பொழுது அங்கிருந்த ஒரு கோவிலுக்கு என் உறவினர்கள் குடும்பம் குடும்பமாய்ச் செல்வார்கள். அவரவர் பொருளாதார நிலைக்குத் தக்கபடி ஒரு ஆட்டையோ, கோழியையோ கொண்டு செல்வர். அங்கிருக்கும் பூசாரியிடம்

அந்த ஆட்டை அல்லது கோழியை ஒப்புவிக்க, அவன் தன் கையிலுள்ள அரிவாளால் அதன் தலையை ஒரே வீச்சால் வெட்டியெறிவான். அதன் இரத்தத்தையோ அந்த அம்மனுக்கு முன் சிதறும்படிச் செய்வான். உயிரிழந்த பிராணியின் உடலை பயபக்தியோடு பெற்றுவந்து அதை யாவரும் உண்பார்கள். கடந்த காலத்தில் குடும்பத்தில் வந்த எல்லா கருமங்களும், பாவங்களும் குடும்பத்தைவிட்டு இந்தப் பலியால், அதன்மூலம் சிந்தப்பட்ட ரத்தத்தால் நீக்கப்பட்டுவிட்டதென மிக உவகை எய்துவர். ஆனால் இந்த உவகை வெகுநாள் நீடித்து நிற்பதில்லை. சில நாட்களுக்குள் தன் வயலுக்குப் பாயவேண்டிய தண்ணீரை மற்றவன் தன் வயலுக்குத் திருப்பிக்கொண்டான் என்பதற்காக, அல்லது மற்ற வயலின் வரப்பு தன் வயலுக்குள் சில அங்குலங்கள் வந்துவிட்டது என்பதற்காக அல்லது தங்கள் தகப்பனார் தேடிவைத்த சொத்தைப் பாகம் பிரிப்பதில் ஏற்பட்ட சிறு சச்சரவிற்காக ஒருவரையொருவர் பகைத்து சகோதரனும் தன் மற்ற சகோதரனைக் கொலை செய்வதும் மிகச் சாதாரணம். வெகு சில தினங்களுக்கு முன்பதாக அவர்கள் சிந்திய வெள்ளாட்டுக்கடா கோழி இவற்றின் இரத்தம் அவர்தம் பாவ உணர்ச்சியை, கொலை செய்யத்தூண்டும் எழுச்சியை, சொந்த சகோதரனின் இரத்தத்தையும் சிந்தத் தூண்டும் தப்பெண்ணத்தை மாற்ற வலிமையற்றதாகவே போய்விடுகிறது.

நல்லது! ஒருவேளை ஒரு மனிதனுடைய ரத்தம் மற்றொரு மனிதனுடைய பாவத்தைத் தீர்க்குமோ? பாவம் நிறைந்த ஒரு மனிதனின் இரத்தம் மற்றொரு இரத்தத்திலுள்ள பாவக் கறையை நீக்குவதெப்படி? பாவியாகிய ஒரு மனிதனைப் பரிசுத்தமாக்க வேண்டுமானால், எந்த மனிதனுடைய இரத்தம் பரிகாரமாகச் சிந்தப்படுகிறதோ அவன் பாவமற்றவனாய் பரிசுத்தனாய் இருத்தல் அல்லவா வேண்டும்? பாவமே செய்யாத பரிசுத்தமான ஒரு மனிதன் பூமியில் உண்டோ? வேதம்என்னசொல்லுகிறது?

> 'பாவம் செய்யாத மனுஷன் இல்லையே!' (2நாளா. 6:36).
>
> 'ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை!' (பிர. 7:2).

'ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்ல!' (சங். 143:2).

'தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே!' (மா. 10:18).

'என் இருதயத்தைச் சுத்தமாக்கினேன், என் பாவமறத் துப்புரவானேன் என்று சொல்லத்தக்கவன் யார்?' (நீதி. 20:9).

'அவர்கள் எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள், நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும்இல்லை!' (சங். 53:3; 14:3.)

விடத்தால் தீண்டப்பட்ட ஒருவன் அதே விடத்தால் தாக்குண்டு தவிக்கும் வேறொருவனைக் காப்பாற்றுவது எங்ஙனம்? குடிபோதையில் தள்ளாடி நடக்கும் ஒருவன் குடிபோதையில் விழுந்து கிடக்கும் வேறொருவனைத் தூக்கி எடுப்பது எங்ஙனம்?

பல வருடங்களுக்குமுன் வட இந்தியாவில் அரசாங்கத்தில் பொறியாளராக நல்ல பதவியிலிருந்த ஒருவரும் அவர் மனைவியும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டார்கள். அவர்கள் கொலை செய்தது வேறு யாரையும் அல்ல, ஒன்பதே வயது நிரம்பிய தங்கள் மூத்த குமாரனை! இதை வாசிக்கும்பொழுது இரத்தம் துடிக்கலாம். வாய், 'எத்தனை கொடியவர்கள்' என்று முணு முணுக்கலாம். அவர்கள் அவ்வாறு கொலை செய்யக் காரணம் என்னவென்று போலீஸார் வினவியபொழுது அவர்கள் கொடுத்த பதிலின் சாராம்சம் இதுதான்! தம் இஷ்டதேவதைக்கு நரபலி கொடுத்தால் தம் கருமம் எல்லாம் தீரும், குடும்பத்தில் நல்வாழ்வு மலரும் என்ற எண்ணத்தால் அவ்வாறு செய்தார்களாம். உள்ளத்தை அழுத்தும் கருமங்களிலிருந்து விடுதலைபெற மனித உள்ளம் தான் எவ்வளவு துடிக்கிறது! அவ்வாறு பத்து மாதம் சுமந்து பெற்று ஒன்பது வருடங்கள் பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி வளர்த்த புதல்வனைப் பலியிட்டு அந்த பச்சிளங் குழந்தையின் இளவுடல் துடிக்கத் துடிக்க அவன் இரத்தத்தை சிந்தியதால் அவர் தம் கருமம் நீங்கிற்றோ? இல்லை! இல்லை! பாவத்தின் மேல் பாவத்தைக் குவித்துக்கொண்டனர். அரசாங்கத்தால் கொலைகுற்றம் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர்.

மனிதனின் பாவங்களை நீக்க வல்லது காளை, வெள்ளாட்டுக் கடா, புரு இவற்றின் இரத்தமுமல்ல! ஒருபாவிக்காக வேறொரு பாவி தன் இரத்தத்தைச் சிந்துவதாலுமல்ல! பின் வழிதான் என்ன? இந்தப் புதிரை விடுவிக்கவே, தேவாதிதேவன், பாவ மறியாப் புனிதன், 'பரிசுத்தர்', 'பரிசுத்தர்' 'பரிசுத்தர்' என தேவதூதரால் புகழ்ந்து ஸ்தோத்தரிக்கப்படும்பரிசுத்ததேவன் மனு உருவெடுத்துப் பூமியில் இறங்கினார். அவரைக் கண்ட யோவான் என்னும் ஒரு தீர்க்கதரிசி தன்னையுமறியாமல் 'இதோ! உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' என்று கூவினான் (யோவா. 1:29) அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். இயேசு என்பதற்கு 'பாவங் களை நீக்கி இரட்சிப்பவர்' என்று அர்த்தமாம். இயேசுவும் 'அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவே' தாம் வந்ததாகப் பகிரங்கமாகக் கூறினார் (மத். 20:28).

இயேசுகிறிஸ்து தேவகுமாரனானதால், மனுவுருக்கொண்டு வந்த தெய்வ அவதாரமானதால் பாவமற்றவராய் இருந் தார். அவர் இரத்தமும் பாவமற்றதாக இருந்தது. தம்மை வெறுத்த யூதரிடம் அவர் இவ்வாறு வினவினார்:

> 'என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்?' (யோவா. 8:46.)

அவரை நியாயந்தீர்த்த ரோம நியாயாதிபதியாகிய பிலாத்துவும், அவரைச் சிலுவையிலறையும் படி கூக்குரலிட்ட ஜனத்திரளைப் பார்த்து கீழ்க்கண்ட ஒப்பற்ற சாட்சியைக் கூறினான்.

'நான் இவனிடத்தில் (இயேசுவினிடத்தில்) ஒரு குற்றமும் காணேன்' (யோவா. 19:4,6). அவரோடுகூட 3½ ஆண்டுகள் வாழ்ந்து அவர் வாழ்க்கையை உள்ளும் புறமும் அறிந்திருந்த பிரதான சீடன் பேதுருவும் 'அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை' (1 பே. 2:22) என நற்சாட்சி பகர்ந்தான்.

ஆம்! பாவமற்ற இயேசுகிறிஸ்துவின் இரத்தம் பாவி களாகிய நம்மை பாவத்திலிருந்துநிரந்தரமாக விடுவிக்க, கழுவி சுத்திகரிப்பதற்காகச் சிந்தப்பட்டது. 1970ம் ஆண்டு பம்பாய்

பத்திரிகையில் வெளிவந்த ஓர் உண்மைச் சம்பவம், வாசித்த யாவர் உள்ளத்தையும் உருக்கிற்று. 18 வயது நிரம்பிய வாலிபன் ஒருவன் எதிர்பாராவண்ணம் தீ விபத்திற்குட்பட்டான். உடையில் பற்றிய தீ உடலைக் கருக்காமல் இருக்க மேல் சட்டையைக் கழற்றி எறிந்தான். காலை இறுக்கிப் பிடித்திருந்த 'இருக்கக் காலாடையை' (Tight Pants) கழற்ற எவ்வளவோ முயன்றான். அது தன் பெயருக்கேற்ப அவன் கால்களை இருகப் பிடித்துக்கொண்டது. அதற்குள் பற்றியெரிந்த நெருப்பு அந்த உடையையும், கால்களையும் பொசுக்கியது. தாங்கொணு வேதனையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டான். வைத்தியர்கள் அவன் உயிருக்காய்ப் போராடினர். தலைசிறந்த வைத்தியர் ஒருவர் இவ்வாறு கூறினர்:' Give me skin. I will save him' (அவன் உடலுக்குப் பொருத்தமான வேறு மனிதத் தோலைக் கொடுங்கள். அவன் உயிரைக் காப்பாற்றுகிறேன்!) உற்ருர், உறவினர், அண்டை அயலகத்தார், ஆருயிர் நண்பர்கள் யாவரும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்களே தவிர, தம் உடலிலிருந்த தோலை நன்கொடையாய் கொடுக்க யாரும் முன்வரவில்லை. அவ்வமயம் அவனது அருமைத் தாயார் ஓடிவந்தாள். வைத்தியரின் தேவையை அறிந்தாள். முன்பின் யோசிக்காமல் வைத்தியரிடம் ஓடினுள். 'ஐயா! என் உடலிலிருந்து எவ்வளவு தோல் அவசியமோ, அவ்வளவும் எடுத்துக்கொள்ளுங்கள். நான் எப்படிப் போனுலும் பரவாயில்லை. என் குழந்தை பிழைத்தால் போதும்' எனக் கதறினுள். அவ்வாறே வைத்தியர் செய்தார். வாலிபனும் பிழைத்தான். தாயின் அன்பு எவ்வளவு சிறந்தது!

ஆனுல்! தேவன் கூறுவதென்ன?

'ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை' (ஏசா. 49:15). அந்தத் தாய் தன் குழந்தைக்காக மட்டும் தன் சரீரம் பிளக்கப்பட ஒப்புக்கொடுத்தாள். ஆனுல் தேவகுமாரனே அகில உலகத்திலும் தன் கையினுல் படைக்கப்பட்ட 'ஒவ்வொருவருக்காகவும்' தன்னை நேசிப்பவர்களுக்கும், நேசிக்காதவர்களுக்கும் யாதொரு

மாறுபாடுமின்றிதம் உடல் நொறுக்கப்பட, பாடுபட மகிழ்ச்சியோடு தன்னை ஒப்புக்கொடுத்தார்.

தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் வேறொரு சிறப்பும் உண்டு. ஒரு சமயம் என் நண்பன் மனைவி பிரசவத்திற்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். திடீரென மருத்துவர்கள் அவரிடம் ஓடிவந்து 'உங்கள் மனைவிக்கு சரீரத்தில் இரத்தமே இல்லை. உடன் இரத்தம் அவசியம். எங்களிடம் இருக்கும் இரத்தம் அவர்கள் உடலில் சேராது. காரணம், அவர்கள் இரத்தம் 'ஓ' பிரிவைச் சேர்ந்தது ('O' Group). அந்தப் பிரிவைச் சேர்ந்த இரத்தம் எளிதில் கிடைக்காது என்றனர். இரத்த தானம் செய்யும் பலரை அவசரமாய் அழைத்துச் சோதித்தனர். பலனில்லை. அப்பொழுது என் நண்பர் தம் இரத்தைத்தைப் பரிசோதிக்கும்படி கேட்டுக்கொண்டார். சோதித்தபொழுது, அது 'ஓ' பிரிவைச் சேர்ந்ததெனக் கண்டு அந்த இரத்தத்தை எடுத்து அவர் மனைவியின் உடலில் செலுத்த அந்த அம்மாளின் அபாயநிலை நீங்கியது, உயிர் பிழைத்தார்கள்.

ஓர் உயிரைக் காப்பாற்ற தம் இரத்தத்தைப் பலர் கொடுக்க முயன்றும் பயனில்லை. அவர்கள் இரத்தம் அந்தக் குறிப்பிட்ட உடலின் இரத்தத்தோடு இணையவில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தமோ, தேவகுமாரனும், தெய்வ அவதாரமும், சர்வசிருஷ்டிகரும், கர்த்தாவுமானவருடையஇரத்தமானதால் எல்லா மனிதருக்கும், உயிருக்கும், தேசத்தாருக்கும், ஜாதியாருக்கும் பொருந்தும் தெய்வீக இரத்தமாம். என்னே தேவனுடைய ஞானம்! எனவேதான் இயேசுவை 'எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபை' என்று வேதம் வியந்து பேசுகிறது (தீத்து 2:11). ஆனால் இந்த தேவ கிருபை இயேசுவின் சரீரத்திலிருந்து இரத்தமாய் வெளிவரும் முன்பு, அவர் சரீரம்பட்ட பாடுதான் என்ன? அடைந்த வேதனை தான் என்ன?

அந்த இரத்தம் அவர் சரீரத்திலிருந்து வெளிவருமுன் அவர் உடல் கசக்கப்பட்டது. திராட்ச இரசம் இனிக்கிறது. அருந்துவோர் உடலையும் மனதையும் பரவசப்படுத்துகிறது. 'ஆனால் இந்த இரசத்தை எடுக்குமுன் திராட்சைப்பழமோ

G.B. Sathyanesan, B

கசக்கிப் பிழியப்படுகிறது. அத்தரை நுகருவோர் ஆனந்தம் அடைகின்றனர். அதன் நறுமணம் அவருடலின் களைப்பைப் போக்கி புத்துணர்ச்சி அளிக்கிறது. அருகிலிருப்போரையும் இன்ப உணர்ச்சிக்குட்படுத்துகிறது. ஆயின், நறுமணம் நிறைந்த அத்தரை அளித்த ரோஜா மலரோ, தான் அனுபவித்த பாடுகளால் நிறம் மாறி பசுமை மாறி, நொறுக்கப்பட்டு பிழியப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் சரீரமும் உலகோற்கு இரட்சிப்பை அருளும் தன்இரத்தத்தைச் சிந்துமுன் பட்ட பாடு . . .!

'பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன். ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும், எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்' (லூ. 12:49,50) என்ற இயேசுவின் வார்த்தைகள் அவர் அந்தப் பாடுகளைப் பற்றி நினைக்கும்பொழுதே அவர் தம் மனதில் அடைந்த வியாகுலத்தை வெளிப்படுத்து கின்றன அல்லவா! பாவத்தைப் பட்சிக்கும் அக்கினியாகத் தம் இரத்தத்தையும் தொடர்ந்து பூமியில் இறங்கின பரிசுத்த அக்கினியாம் பரிசுத்த ஆவியானவரையும் பற்றித்தான் சிலேடையாய் இவ்வாறு மொழிந்தாரோ? அறியோம்! அவர் தம் இரத்தம் சிந்தப்படுமுன் அவர் அடைந்த சரீரப் பாடுகளையும் நாம் சற்றே தியானிப்போமாக.

'கெத்செமனே'

இந்தப்பதத்தின் பொருள்: 'எண்ணெய்ச்செக்கு' (Oil Press). இந்த இடத்தை, பழைய எருசலேம் நகருக்கு எதிரில் உள்ள ஒலிவ மலையில் இன்றும் காணலாம். இயேசுகிறிஸ்துவின் நாட்களில் இருந்ததாகக் கருதப்படும் ஒலிவ மரங்களையும் அவற்றின் நடுவில் 'கெத்செமனே ஆலயம்' என்ற ஓர் அழகிய கிறிஸ்தவ ஆலயத்தையும் காணலாம். இந்த ஆலயத்தின் நடுவில் இயேசு மன வியாகுலத்தோடு முகங்குப்புற விழுந்து ஜெபித்ததாகக் கருதப்படும் இடம், சுற்றிலும் வேலியடைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

இங்குதான் இயேசுவின் இரத்தம் முதன்முறையாக சரீரத்திலிருந்து வியர்வையோடு கலந்து வெளியே விழுந்தது. அத்தரைத் தரும் அழகிய ரோஜா கசக்கப்படுவதுபோல், 'சாரோனின் ரோஜாவாம்' இயேசுவின் மலருடல் கசக்கப்பட்டது. கெத்செமனே தோட்டத்திற்கு வருமுன் இயேசு தம் சீடருடன் பஸ்காவை ஆசரித்தார். திராட்ச இரசம் நிறைந்த பாத்திரத்தைத் தம் கையில் எடுத்து, 'இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது' (மத். 26:28) என்றார். ஒரு வேளை இந்தத் திராட்சை இரசம் எடுப்பதற்காக, அந்த திராட்சைப்பழம் கசக்கப்பட்டதுபோல் என் சரீரமும்கூட கசக்கப்படும் என்பதைக் குறிப்பிடவே அவ்வாறு மொழிந்தாரோ அருமை நேசர்? யாரறிவார் அவர் அன்பின் வார்த்தைகளின் ஆழத்தை!

இன்றும் கெத்செமனே தோட்டத்திற்கு அருகில் ஓர் எண்ணெய்ச் செக்கு உண்டு. அதில் ஒலிவ விதைகளைப் போட்டு ஆட்டுவார்கள். அந்த விதைகள் நசுக்கப்பட்டு அதிலிருந்து எண்ணெய் வெளியே வரும். அவ்வாறே இயேசுவின் சரீரமும் அதே தோட்டத்தில் கசக்கப்பட்டது. இரத்தமானது வியர்வையோடு கலந்து தரையில் விழுந்தது.

இந்தப் புனித இடத்தைக் காண இந்தியாவிலிருந்து சென்ற பக்தன் ஒருவன், இயேசு ஜெபித்ததாகச் சொல்லப்படும் அந்த இடத்திற்கருகே முழங்கால் ஊன்றி தன்னை ஆசீர்வதிக்கும்படி ஊக்கமாக ஜெபம்பண்ணினாராம். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அவர் உள்ளத்தில் இவ்வாறு பேசினாராம்:

'தேவகுமாரனாகிய இயேசு இந்த இடத்தில்தான் முகங்குப்புற விழுந்து உலகில் உள்ள மக்களின் ஆத்துமாக்களுக்காகக் கண்ணீரோடு அழுது புலம்பினார். அவர் கண்ணீர் சிந்திய இந்த இடம் இன்று காலியாக இருக்கிறது. அவரைப் போலவே மக்களை உண்மையாகவே நேசித்து அவர்களுடைய ஆத்துமாக்களுக்காக அழுது புலம்பும் மக்களையே தேவன் தேடுகிறார். நீ இந்த ஸ்தானத்தைத் தெரிந்துகொண்டு, காலியாயிருக்கும் இந்த இடத்தை நிரப்புவாயோ! அப்படியானால், தேவன் என்றும் உன்னோடிருப்பார்.'

இந்த வார்த்தைகளைக் கேட்ட பக்தனது உள்ளம் நொறுங்கி, 'கர்த்தாவே! உம் குமாரனைப்போல மற்றவர்

களுக்காகக் கண்ணீர் சிந்தும் ஊழியத்திற்கு என்னையும் அர்ப்பணிக்கிறேன். என்னை ஆசீர்வதியும்' என உள்ளமுருகி ஜெபித்தாராம். கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் வல்லமையோடு இறங்கினாராம். இன்றும் புதிய கிருபைகளோடு அவரைத் தம் ஊழியத்தில் பயன்படுத்துகிறாராம்.

அன்பான வாசகரே! அவரைப்போலவே நீரும் இப்பொழுது நீர் இருக்கும் இடத்தில், சற்று இந்த புத்தகத்தை விட்டு, உம் கண்களை மூடி இயேசு கெத்செமனே தோட்டத்தில் வேதனையுடன் முகங்குப்புற விழுந்து அழும் காட்சியைத் தியானம் செய்வீராக. உமக்காக, உம் ஆத்துமா பாவ விலங்கிலிருந்து விடுபட அதோ தேம்பித் தேம்பி அழுகிறார்! அவர் அருகில் சென்று, 'ஆண்டவரே! நீர் அழுதது போதும். இப்பொழுது முதல் என் பாவ வாழ்க்கையை உம் பாதத்தில் வைக்கிறேன். என் தீய பழக்கங்களை அறிக்கையிடுகிறேன். இனி நான் பரிசுத்தமாய் வாழ்வேன். உம் தூய இரத்தம் என் பாவ ஆத்துமாவைக் கழுவிச் சுத்திகரிக்கட்டும். நான் இனி உம்மை என் அக்கிரமங்களால் அழவைக்க மாட்டேன். மற்றவர்களுக்குத் தீங்கு இழைத்து உம்மை வேதனைப்படுத்த மாட்டேன். என் மனைவியை அடித்துத் துன்புறுத்தி உம்மைக் கண்ணீர் சிந்த வைக்கமாட்டேன். குடி, விபசாரம், லாகிரி வஸ்துக்கள், பொய், களவு, வஞ்சகம், இன்னும் பலவித இச்சைகளால் மயங்கி என் சரீரத்தைக் கெடுத்து உம் சரீரம் தரையில் விழுந்து இரத்தவேர்வை சிந்த இனி இடம்கொடேன்' என்று தீர்மானம் செய்வீரா? அல்லது,

'என் ஆத்துமாவை, நாதா, நீர் இரட்சித்தீர். உம்மைப் பின்தொடர்ந்து வந்து உலகில் இன்னும் இந்த மகத்தான இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறாத கணக்கற்ற மக்களுக்காக, உம்மைப்போல கண்ணீர் சிந்தும் அனுபவத்தை எனக்கும் தாரும்! அதற்கென்றே என் ஜீவியத்தை அர்ப்பணிக்கிறேன்' என உம் வாழ்வை கிறிஸ்துவின் சேவைக்கு அர்ப்பணிப்பீரா?

உம் தீர்மானத்தால், அழுகின்ற இயேசுவின் உள்ளம் ஆறுதல் அடையட்டும். அவருடைய இரத்தவேர்வை நின்று, அவர் தேறுதல் பெறட்டும்.

'கெத்செமனே பூங்காவினில் கதறியழும் பேரோசை இன்றும் எத்திசையும், தொனிக்கின்றதே, எங்கள் உள்ளம் பதைக்கின்றதே' என பக்தன் பாடினன். கெத்செமனே காட்சியோடு நீர் செய்யும் உம் தீர்மானம் என்ன?

'கபத்தா'

கெத்செமனேயில் தேவகுமாரன் இரத்தவேர்வை சிந்தி தவித்துக்கொண்டிருக்கும்பொழுது, வஞ்சகக் குரல் ஒன்று அவர் அருகில் ஒலித்தது: 'ரபீ (போதகரே!) வாழ்க!' இயேசுவின் நயவஞ்சகச் சீடன் யூதாஸின் குரல்தான் அது. அருகில் வந்து அவரைக் காட்டிக்கொடுப்பதற்காக முத்தமிட்டான். ஒருவேளை இயேசுவின் இரத்தவேர்வை அவன் உடையிலும், முகத்திலும் படிந்திருக்கவேண்டும். ஆனல் இரத்த வெறி கொண்ட அவன் உள்ளமோ சற்றும் அதிர்ச்சியடையவில்லை. இயேசுவோ அந்தத் துரோகியின் மேலும் அன்புகொண்டவராய் 'சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிருய்?' என வினவினர். மறு விநடி யூதாஸோடு கூட வந்த ரோமச் சேவகரால் அவர் கைது செய்யப்பட்டார். அன்ன, காய்பா என்ற பிரதான ஆசாரியரின் மாளிகைகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டார். பொய் விசாரணைகள் நடத்தப்பட்டன! நாமே கொலை செய்வதைவிட ரோம அரசாங்கத்தின் கையில் ஒப்புக்கொடுப்பதே நலம் என்றெண்ணி தேசாதிபதியாகிய பிலாத்துவிடம் ஒப்புக்கொடுத்தனர். அவன் ஏரோது இராஜாவிடம் அனுப்பினன். 'ஏரோது, தன் போர்ச்சேவகரோடு கூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்ப பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினன்' (லூ. 23:11).

பிலாத்து திரும்ப அவரை விசாரிக்கிருன். ஒருகுற்றத்தையும் காண இயலவில்லை. யூதர்களோ அவரைச் 'சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்' எனக் கூக்குரலிடுகின்றனர். அவன் உள்ளம் தடுமாறுகிறது. 'அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினல் அடிப்பித்தான்' (யோ. 19:1).

ரோமச்சேவகர் அவரை அடிப்பதற்கு பயன்படுத்திய வார் பயங்கரமானது. அதன் முடிவில் ஒன்பது பிரிவுகள் இருக்கும்.

ஒவ்வொரு பிரிவின் நுனியிலும் ஓர் இரும்புக்குண்டு அல்லது எலும்புத்துண்டு இவற்றைக் கட்டி வைத்திருப்பார்கள். அதைக்கொண்டு குற்றவாளிகளை அடித்து, அவர்களிடமிருந்து உண்மையை வரவழைப்பார்கள். ஒவ்வொரு தடவை அடி விழும்பொழுதும், அது சரீரத்தில் ஆழமாய்ப் பாய்ந்து சதையைக் கிழித்துக்கொண்டுவரும். காயத்தின்மேலேயே திரும்பத் திரும்ப அடிமேல் அடி விழ, ஆழமாய் சரீரம் கிழிக்கப்படும். வேதனையைப் பொறுக்கமுடியாமல் குற்றவாளிகள் உண்மையைக் கக்கிவிடுவார்கள்.

இயேசுவின் பாவமறியா மென்சரீரம் எவ்வளவாய் இந்தக் குரூர அடிபடும் நேரம் துடித்திருக்கும். நம் பாவம் எவ்வளவு கொடியது! தேவகுமாரனுடைய சரீரத்தை நொறுக்கிஎறிந்த நம் அனைவரின் அக்கிரமம் எவ்வளவு வலியது! 'ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை . . . அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். என் ஜனத்தினுடைய (நம்முடைய) மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்' (ஏசா. 53:7,8) என வேதம் சொல்லுகிறது. அவர் பேசாமலிருந்தாலும் சரீரம் பொறுத்திருக்குமோ? தூய இரத்தம் அவர் சரீரத்திலிருந்து பீறிட்டு வெளிவந்திருக்குமன்றோ?

அதோடு நிறுத்தினார்களா, அக் கல்மனம் படைத்தவர்கள்? அவர் தலையில் ஒரு முள் கிரீடத்தை வைத்தார்கள். அதன் மேல் தம் தடியால் ஓங்கி அடித்தார்கள். முள் ஆழமாகத் தலையில் பதியப் பதிய தலையிலிருந்து எப்படியும் இரத்த ஆறு மேலிருந்து புறப்பட்டு உடல் முழுவதிலும் ஓடியிருக்க வேண்டும். இந்த இரத்த ஆற்றை மூடி மறைப்பதற்காகவே அவருக்கு 'சிவப்பு அங்கி'யைத் தரித்தாரோ, அக்கொடியவர் (யோ. 19:5)? இந்த உபாதைகளெல்லாம் பட்ட பிறகும், இயேசு இன்னும் உயிரோடு, முகத்தில் யாதொரு கலக்கமும் இன்றி இருப்பதைக் கண்ட பிலாத்து தன்னையுமறியாமல், ஜனத்திரள் முன்பாக, 'இதோ மனிதன்!' 'இதோ உங்கள் இராஜா' என்றெல்லாம் பிதற்றுகிறான். இயேசு 'கபத்தா' என்ற மேடையின் மேல் போடப்பட்ட, பிலாத்துவின் நியாயாசனம் முன் நின்றார். தலையில் முள்முடி சூடினவராய், சிவப்பங்கி தரித்தவராய், நிற்கவும் பலமின்றி நிற்கிறார். தலையி

லிருந்து புறப்பட்ட குருதி வெள்ளம், முதுகில் இறங்க, அங்கிருந்து பல பல காயங்களில் சுரக்கும் இரத்தத்தோடு கலந்து பெருகி, கால்கள் வழியாய் கட்டாயம் தரையில் இயேசு நின்ற இடமெல்லாம் பரந்து விசாலமாய்ப் பரவி இருந்திருக்க வேண்டும்.

பிலாத்துவே! உமக்கு என் நன்றி. கடந்த 2000 ஆண்டுகளாய், கோடிக்கணக்கான மக்கள் மூழ்கி தம் பாவக் கறைகளைப் போக்கிக்கொண்ட செங்குருதி ஆறு ஒன்றை, தேவ குமாரனுடைய சரீரத்திலிருந்து தோற்றுவித்த பெருமை உமக்குரியது. கபத்தாவின் மேல் உட்கார்ந்த நீர் உமக்கு முன் பாய் நிற்பவர் 'உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி' என்பதை சற்றேனும் அறிந்திருக்க மாட்டீர். 'நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்' (மத். 27:19) என்ற உம் அருமை மனைவியின் வார்த்தையையும் அலட்சியம் செய்து, தேவ ஆட்டுக்குட்டியின் சரீரம் பிளக்கப்படவும், இரத்த ஆறு ஓடவும் செய்த உமக்கு நன்றி. இல்லையெனில் எம்போன்ற எண்ணற்ற பாவிகள், திக்கற்ற துரோகிகள் அந்தக் குருதி வெள்ளத்தால் எங்ஙனம் வாழ்வடைந்திருக்க முடியும்? உமக்கு நன்றி! நன்றி!! அதே சமயம், இயேசுவை, குற்றமில்லா தேவசுதனை மனைவியின் அறிவுரையையும் தட்டி குருதி வெள்ளத்திற்குட்படுத்திய நீர், முடிவில் தற்கொலை செய்து உம் உயிரையும் மாய்த்துக் கொண்டதாகச் சரித்திரம் கூறுகின்றதே! உமக்கு எம் ஆழ்ந்த அனுதாபமும்கூட! பிலாத்துவே எங்கள் நன்றியையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் ஏற்றுக்கொள்வீராக!

'கபத்தா'வுக்கு முன் இயேசுவின் இரத்தம் சிந்தியதை, பக்தன் ஒருவன், திருச்சபையானது இயேசுவோடுகூட இந்தக் கட்டத்தில் உரையாடுவதுபோலப் பாடல் ஒன்றை இயற்றினன். இதில் இயேசுவிடம் கேட்கப்பட்ட கேள்வியையும் அதற்கு அவர் கொடுத்த பதிலையும் காணலாம்.

திருச்சபை: துய்ய திரு மேனியெல்லாம்
நொய்ய உழுத நிலம்போல் ஆகி—கன
சோரி சிந்த, வாரதினல்
நீர் அடிக்கப்பட்டதென்ன, கோவே?

கிறிஸ்து: வையகத்தின் பாதகத்தால்
பெய்யும் நடுத்தீர்வையெல்லாம் ஆற்ற—இந்த
வாதை எல்லாம் பட்டிறக்க,
போத மனம் சம்மதித்தோம், மாதே.

இயேசுவின் சரீரத்திலிருந்து 'கபத்தா' முன் பாய்ந்தோடிய இரத்தம், நம் யாவருடைய பாவங்களுக்காக உலகின்மேல் வரவேண்டிய தேவ கோபாக்கினியாகிய அக்கினியை அணைப்பதற்காகவேயாம்.

கொல்கொதா

'அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் (பிலாத்து) ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள்.'

அவர் (இயேசு) தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு எபிரேயு பாஷையிலே 'கொல்கொதா' என்று சொல்லப்படும் 'கபாலஸ்தலம்' என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார் (யோ. 19:16,17).

இயேசுவின் நைந்த உடல்மேல் பிலாத்துவின் ஆணைப்படி சிலுவையை ஏற்றினார்கள். கொல்கொதா சற்று உயர்ந்த இடம். இயேசு தமது சிலுவைப் பாரத்தைத் தூக்கமுடியாமல் தவித்து, மிக மிக மெதுவாக நகர்ந்து அதன்மேல் ஏறியிருக்க வேண்டும். எனவே பொறுமை இழந்த ரோமச் சேவகர்கள் 'சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள்' (லூ. 23:26). மெதுவாய்ச் சென்ற இயேசுவின்மேல் கோபம்கொண்டு, அவரைத் தெருவிலும்கூட வாரினால் அடித்தார்களோ நாம் அறியோம். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம்! இயேசு சென்ற எருசலேம் தெருக்களிலெல்லாம் அவருடைய மாசற்ற இரத்தம் சிந்தியிருக்கவேண்டும்.

'திசையறியாமல் தியங்கி, இயேசையா சுவாமி
தெருக்களெல்லாம் அலைந்தேன் நான்,
மனங்கசந்தழுகையில்
மாளிகை காட்டினாரே!'

என பக்தன் ஒருவன் மெய்ச் சமாதானத்தை, மெய் வாழ்வை, மெய்ப்பொருளை நாடித் தெருத் தெருவாய் தான் அலைந்த பொழுது இயேசுவில் பெற்ற ஆறுதலை, அடைக்கலத்தைப் பற்றி அழகாய்ப் பாடினான்.

நான் எழுந்து நகரத்தின் வீதிகளிலும், தெருக்களிலும் திரிந்து என் ஆத்துமநேசரைத் தேடுவேன்' என்ற வேதவசனத் தின்படி (உன். 3:2) அவன்தேடினான். இயேசுவில் தன் ஆத்தும நேசரைக் கண்டுபிடித்தான்.

நம் ஆத்தும சமாதானத்திற்காக, கருமம் நீங்குவதற்காக பல்வேறு ஸ்தலங்களுக்கு நாம் சென்று தெருத் தெருவாக அலைந்து அதைத் தேடலாம். தெருக்களிலெல்லாம் இரத்தம் சிந்திய இயேசுவிடம் மட்டுமே அந்த சாந்தியை நிச்சயமாகக் காணலாம். ஒருவேளை, வாழ்க்கைப் பிரச்சினைகளால் வாடித் தவித்து, வேலை தேடி, பொருள் தேடி, பொழில் தேடி தெருத் தெருவாய் அலைய நேரிட்டதோ? 'வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத். 11:28) என்ற அன்பர் வாக்கு நமக்கு ஆறுதல் அருளும்.

உயர் பதவியிலிருக்கும் நண்பர் ஒருவரை அறிவேன். அவர் வாழ்க்கையின் ஆரம்பம் தோல்வியில்தான். பட்டப்படிப்பில் இருமுறை தோல்வியுற்றார். வாழ்க்கை கசந்தது. மன நிம்மதியற்ற நிலையில்தான் இயேசுவை அறிந்தார். தன் பாவங்களை ஆண்டவரிடம் அறிக்கை செய்தார். புதிய வாழ்வு பெற்றார். உள்ளத்தில் ஒரு புதிய விசுவாசம் எழுந்தது. 'நான் இனி தேவனுடைய பிள்ளை! பூமியும் அதன் நிறைவும் . . . கர்த்தருடையது, எனவே அவர் எனக்கு உதவி செய்வார்' என்ற நம்பிக்கை அவருக்குள் தோன்றியது. மிக ஊக்கமான ஜெபத்துடன் படித்தார். பட்டம் பெற்றார். வேலையில்லாத் திண்டாட்டம் அவரையும் பிடித்தது. பல இடங்களுக்கும் மனுச்செய்தார்; அலைந்தார்; சில அலுவலகங்களுக்கு நேரிலும் போய்ப் பார்த்தார். அவ்வாறு அவர் போகும் பொழுதெல்லாம் அவருக்கு ஆறுதலளித்த வசனம் (நீதி. 3:5,6), 'உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழி

களிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்' என்பதே.

அவர் தம் வேலை நிமித்தமாகப் போகும்பொழுதெல்லாம், எருசலேம் வீதியில் இரத்தத்தைச் சிந்திக்கொண்டே போன நேசரையே தியானித்துச் சென்றார். அவர் வாழ்வின் துக்கம், தனிமை உணர்ச்சி, வேலையில்லையே என்ற கவலை பறந்தோடியது. அவரை ஆட்கொண்ட நேசர் இயேசுவும் அவருக்கோர் வேலை கிடைக்க அருள் செய்தார். பின் அதிலும் சிறந்த வேலையொன்றை நல்கினார். அதில் உயர்த்தினார்.

வேலையின்றி, தொழிலின்றி, ஊதியமின்றித் தவித்து அலையும் நண்பர்களே! உங்கள் கண்கள், தெருக்களெல்லாம் இரத்தம் சிந்தி நடந்த இயேசுவின்மேல் மட்டும் இருப்பதாக. கணவனால் கைவிடப்பட்டு இரத்தக்கண்ணீர் வடித்து, கணவன் வீட்டைவிட்டுப் பிறந்த வீட்டிற்குப் போய்க்கொண்டிருக்கும் சகோதரியே, நீர் நடக்கும் தெருவில் உமக்கு முன்பதாய், உம் துயர் நீக்க தம் இரத்தத்தைச் சிந்திச் சென்றுகொண்டிருக்கும் இயேசுவை நோக்கிப் பார்ப்பீராக. அவர் உமக்கு அடைக்கலம் அளிப்பார். வாழ்க்கையின் இன்னல்களைச் சகிக்கவொண்ணாது, தற்கொலை செய்துகொள்வேன் எனத் தெருவில் வேகமாய் மனங்கசந்து செல்லும் நண்பரே, சற்று நில்லும். உமது கண்களை சற்றே துடைத்துப்பாரும்! உமக்கு முன் சிலுவை சுமந்து, இரத்தம் சிந்திச்செல்லும் நாசரேத்தூர் தச்சன் மகன் இயேசுவைப் பாரும். அவர் உமது சிலுவைகளையும் மகிழ்ச்சியோடு சுமப்பார். 'வாழ்க்கைச் சுகங்கள் யாவற்றையும் துறந்து, இயேசுவின் ஊழியக்காரனாக, ஊழியக்காரியாக என்னைத் தத்தம் செய்தேன். யாது பயன்? தெருத்தெருவாக அலைந்து இயேசுவைப்பற்றிய நற்செய்தியை அறிவித்தேன். இன்னும் ஆத்துமாக்கள் மனந்திரும்பவில்லையே எனச் சோர்ந்துபோன நண்பரே! நீர் தெருக்களில் விதைத்த தேவ வசனங்களைத் தரையிலல்ல, அந்தத் தெருக்களில் சிலுவை சுமந்து கடந்து போன இயேசுவின் இரத்தத்தின் மேலேயே வேத வசனங்களை விதைத்திருக்கிறீர்! அது ஏற்ற சமயத்தில் பலன் தரும்!

சற்றே பொறுமையாயிரும். எனக்குக் குழந்தையில்லாத காரணத்தால் என் கணவனும் மற்றவர்களும் என்னை வெறுக்கிறார்களே, எங்கு செல்வேன்? எனக் கலங்கிச் சென்று கொண்டிருக்கும் சகோதரி! உமக்கு முன் இரத்தம் சிந்திக் கொண்டே சென்றுகொண்டிருக்கும் அந்த இயேசு, ஒரு கன்னிகையின் வயிற்றைத் திறந்து தேவ வல்லமையால் அதில் உதித்தவராம். அவர் உமக்கும் அத்தகைய அற்புதம் செய்ய வல்லவர். அவர் பாதங்களே உம் அடைக்கலமாவதாக.'

ஆம்! இயேசுவின் மாசற்ற இரத்தம் எருசலேம் நகரத் தெருக்களிலெல்லாம் வழிந்தோடியது, திக்கற்றோருக்கு வாழ் வளிக்க! அன்பார்ந்த நண்பரே! இயேசுவுக்கு உம் வாழ்வை அளிப்பீராக! அவர் தம் மாசற்ற இரத்தம் உம் வாழ்க்கைப் பாதையிலெல்லாம் விழுந்து அதை ஜீவ பாதையாய், சமாதானம் நிறைந்த பாதையாய் மாற்றும். கலங்காதிரும்.

நல்லது! இவ்வாறு நாம், தேவகுமாரனின் நடையைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கும்பொழுதே, அதோ, அவர் மெல்ல, மெல்ல நடந்து கொல்கொதா மேட்டில் ஏறிவிட்டார். நாம் ஓடி அங்கு என்ன நடக்கிறதென்று பார்ப்போம். வாரும்! விரைந்து வாரும்.

> 'அங்கே (கொல்கொதா மலையில்) அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்' (யோ. 19:18).

சிலுவை ஓர் அவமானச் சின்னம். யூதர்களுக்கு சாபச் சின்னம். சபிக்கப்பட்டவனே மரத்தில் இவ்வாறு தூக்கப் படுவான். 'தூக்கிப் போடப்பட்டவன் தேவனால் சபிக்கப் பட்டவன்' (உபா. 21:23) என்பது தேவ நியமம். இந்தக் கோரச் சிலுவையில் இயேசுவை அவரது உடைகளையெல்லாம் உரிந்துவிட்டுப் படுக்க வைக்கிறார்கள். இடது கையை சிலுவையின் இடது புறத்திலும், வலது கையை வலது புறத்திலும், நன்றாய்க் கட்டையோடு சேர்த்துக் கட்டு கிறார்கள். இரு கால்களையுமோ ஒன்றின்மீது ஒன்றாய் இணைத்து வைக்கிறார்கள். கொடியவன் ஒருவன் வருகிறான். முழுவதும் இரணமாயிருக்கும் நேசரின் உடலைப் பார்க்கிறான். அவனுக் குள் ஓர் எரிச்சல் வந்ததுபோலும். 'இத்தனை அடி கொடுத்தும் இன்னுமா இந்தச் சரீரத்தில் இரத்தம்

மிஞ்சி இருக்கிறது. இதோ மீதியாயிருக்கும் இரத்தத்தை இப்பொழுதே எடுத்துவிடுகிறேன் பார்' என்றே கொக்கரிப்பதுபோல் கையிலிருந்த சுத்தியலை ஓங்கி ஆணி ஒன்றை இடது கரத்தில் அடித்தான். விரைந்தோடி வலது கையிலும் அவ்வாறே ஆணி ஒன்றை அடித்தான். இரத்தம் ஒருவேளை அவன் முகத்தில் பீறிட்டு அடித்திருக்கவேண்டும். துடைக்க முயற்சித்த அவனை ரோமப் போர்ச்சேவகரின் 'சீக்கிரம்! உம்! ஆகட்டும்!' என்ற அதட்டல் இயேசுவின் கால்களைப் பிளக்க அவனை விரைந்து செல்லத் தூண்டியிருக்கக்கூடும். இயேசுவின் கால்களின் பக்கமாய்த் துரிதமாய் நகர்ந்து, இந்தக் கால்களுக்குள் ஆணியை அடித்துவிட்டால் அதோடு தன் வேலை முடிந்தது என்ற அவசரத்தோடும், இரண்டு கால்களையும் துளைத்து ஆணி செல்லவேண்டுமே என்ற ஆத்திரத்தோடும் தன் பலத்தையெல்லாம் கூட்டி, மிக உயரமாக சுத்தியலை ஓங்கி கடைசி அடியை அடிக்கிறான். முக்கிய நரம்புகள் ஓடும், கால்களின் அந்தப் பாகங்கள் துளைக்கப்படுகின்றன. மறுபடியும் இரத்தம் பீறிட்டுப் பாய்கிறது! போர்ச்சேவகருக்கோ அவசரம். இருட்டுவதற்குள் சிலுவையை நட்டுவிடவேண்டும். தூக்கு! தூக்கு!! என்ற குரல் எங்கும். ஆளுக்கொரு பக்கம் தூக்கி, தோண்டியிருந்த குழிக்குள் சிலுவையின் அடிப்பாகத்தை நட்டுவிட்டார்கள். 'தொப்பென்ற' சத்தத்தோடு சிலுவையின் அடிப்பாகம் குழிக்குள் விழுந்தது, சிலுவையும் நேராய் நின்றது. ஆனால் அதற்குள், அருமை இரட்சகரின் உடல் எவ்வளவு வேதனையை அனுபவித்திருக்கவேண்டும். நரம்புகள் மூலம், கைகளிலும், கால்களிலும் உண்டான வேதனை மூளையைத் தாக்கினது மட்டுமன்றி, சிலுவையைத் தூக்கி நிறுத்தும்பொழுது உண்டான அதிர்ச்சி அதைப் பன்மடங்கு அதிகமாக்குகிறது. புதிதாக இரத்தம் கைகளிலிருந்தும், கால்களிலிருந்தும் கொட்டுகிறது. நா வறளுகிறது. 'தாகமாயிருக்கிறேன்' என்ற குரல் போர்ச்சேவகரின் காதில் விழுகிறது. ஏராளமான இரத்தம் சரீரத்தை விட்டுப் போய்விட்டதால் உண்டான மரணதாகமே இது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவு.

G.B. Sathyanesan, B.A.

சிலுவையில் அனாதைபோல், கொடிய குற்றவாளிபோல் அக்கிரமக்காரர்போல் தொங்கும் இவர் யார்?

இவர் அற்புத மூர்த்தி! பாவிகளின் சிநேகிதர்!
குஷ்டரோகிகளைச் சுகமாக்கினவர்! அசுத்த ஆவிகளைத் துரத்தினவர்!
சகல நோய்களையும் குணமாக்கினவர்!
மக்கள்மேல் மனதுருகினவர்! மரித்தோரையும் உயிரோடெழுப்பினவர்!
காற்றையும் கடலையும் அதட்டினவர்!
தண்ணீரைத் திராட்ச இரசமாக மாற்றினவர்!

இத்தனை அற்புதமான சக்திவாய்ந்தவர் இப்பொழுது ஏன் இவ்வாறு இரத்தம் சிந்தி பரிதாபமாக சிலுவையில் தொங்குகிறார்? இயேசுவின் சிலுவை மரணத்தைப் பல நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே வேதம் இவ்வாறு முன்னுரைத்தது: 'மேசியா (இயேசு) சங்கரிக்கப்படுவார்! ஆனாலும் தமக்காக அல்ல!' (தானி. 9:26.) பின்னை யாருக்காக இந்த இரத்தம் சிந்துதல்? 'நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது' (ஏசா. 53:6).

நமக்காக! நமக்காக!! நமக்காக!!!
'பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்' (2 கொ. 5:21).
நமக்காக! நமக்காக!! நமக்காக!!!
'இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது' (எபி. 9:22)

என்ற தேவ நியமத்தின்படி, தேவகுமாரன் அதோ, சிலுவையில் தம் இரத்தத்தை, மாசற்ற இரத்தத்தை, உலகில் உள்ள மக்கள் யாவரின் தனிப்பட்ட, கூட்டான பாவங்கள் யாவற்றையும் தீர்ப்பதற்காகச் சிந்துகிறார். 'கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமங்களையும் அவர் மேல் விழப்பண்ணினார்!' (ஏசா. 53:6.) பாவமறியாத அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டார். இயேசுவின் சரீரத்திலிருந்து விழுந்த ஒவ்வொரு சொட்டு இரத்தமும், நம்

பாவங்களை நீக்குவதற்காகவே. அவர் அனுபவித்த வேதனையெல்லாம் தமக்காக அல்ல, நமக்காக! உமக்காக! எனக்காக!

பல ஆண்டுகளுக்குமுன் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றை வாசித்தேன். கொள்ளை, கொலை போன்ற கொடிய குற்றங்கள் சாட்டப்பட்டு மரண தண்டனை அடைந்த ஒரு மனிதன் சிறைச்சாலையில் தன் மரண நாளை எதிர்பார்த்திருந்த வேளையில், அன்பே உருவான தேவனுடைய ஊழியக்காரியான ஒரு அம்மாள் அவனைச் சந்தித்து, ஒரு வேதாகமத்தைக் கொடுத்து அதை வாசிக்கும்படி சொன்னார்கள். அவனோ அதை வாங்கி மிக அலட்சியமாகத் தன் அறையின் ஒரு மூலையில் தூக்கி எறிந்தான்.

அன்றிரவு அவன் அயர்ந்து உறங்குகையில், ஒரு இனிய கனவு கண்டான். அந்தக் கனவில் வெகு தூரத்தில் அழகிய பிரகாசமான நகரம் ஒன்றைக் கண்டான். அதிலிருந்து புறப்பட்ட இனிய கீதங்கள், நறுமணம் அவன் உள்ளத்தைப் பரவசமடையச் செய்தது. அதில் இருந்த மக்கள் யாவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு காணப்பட்டனர். திடீரென்று, அவர்கள் நடுவில், பல ஆண்டுகளுக்குமுன் இறந்துபோன தன் பக்தியுள்ள தாயைக் கண்டான். அவள் தன் இரு கரங்களையும் நீட்டி அவனை அன்போடு அழைப்பதுபோல் தோன்றியது.

தன்னையுமறியாமல், தன் அருமைத் தாயை நோக்கி வெகு வேகமாய் ஓடினான். மிக அருகில் வந்துவிட்டான். 'இன்னும் கொஞ்ச தூரம்தான்; என் தாயின் அரவணைப்பில் சேர்ந்துவிடுவேன்!' என அவன் எண்ணிப் பரவசமடையும் சமயம் கரும்பூதம்போல் மலையொன்று அவனுக்கும், அழகிய அந்த நகரத்திற்கும் நடுவே மெல்ல எழுந்தது. 'அது உயருவதற்குள் தாண்டிவிடுவேன்' எனக் கங்கணம் கட்டிக்கொண்டு வெகு வேகமாய் ஓடினான்! அவன் அருகில் வருவதற்குள் அது வானளாவ வளர்ந்துவிட்டது. ஓடி அதன்மீது மோதினான். தலையை வைத்து முட்டி அழுதான். பற்களைக் கடித்தான். மலைக்கு அப்பாலுள்ள தன் அருமைத் தாயையும், அழகிய நகரத்தையும் எண்ணி, எண்ணி மலையைச் சபித்தான். பயனொன்றுமில்லை.

சற்றே எரிச்சல் தணிந்தபின், அம்மலையை உற்று நோக்கினான், ஆச்சரியமடைந்தான். காரணம், அந்த மலை மற்ற மலைகளைப்போல் அல்லாமல் பெரிய சதுரக் கற்களால் கட்டப்பட்ட சுவராக இருந்தது. ஒவ்வொரு கல்லிலும் ஏதோ ஒன்று எழுதப்பட்டிருந்தது. கவனமாக வாசித்தான், அதிர்ச்சியடைந்தான்; ஏனெனில் ஒவ்வொரு கல்லின்மேலும் அவன் வாழ்க்கையில் காணப்பட்ட ஒவ்வொரு கொடிய பாவத்தின் பெயரும் காணப்பட்டது. தன் பாவங்களே தனக்கும் தன் தாய்க்கும் நடுவில் கொடிய சுவராய் எழுந்ததை உணர்ந்தான். 'உங்கள் பாவங்களே . . . அவருடைய (தேவனுடைய) முகத்தை உங்களுக்கு மறைக்கிறது' (ஏசா. 59:2) என்ற வேத வார்த்தை எவ்வளவு உண்மை!

அவனுடைய கோபமும் எரிச்சலும் தணிந்தது, மனங்கசந்து அழ ஆரம்பித்தான். 'நான் என் தாயாரிடம் போக வழியே இல்லையா?' எனக் கதறினான். அப்பொழுது மெய் சிலிர்க்கச் செய்யும் ஒரு காட்சியை வானத்தில் கண்டான். வானத்திலிருந்து ஒரே ஒரு சொட்டு இரத்தம் அந்த தடுப்புச் சுவர் மேல் விழுந்தது. மறுகணம், சூரியனைக் கண்ட பனிபோல, அந்த இரத்தத்தில் அந்த உயரிய மலை முற்றிலும் கரைந்து மறைந்தது. கொலைகாரனின் உள்ளம் பிரமிப்படைந்தது. அப்பொழுது வானில் இருந்து ஒரு குரல் ஒலித்தது.

> 'இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.'

இதைக் கேட்டவுடன் அவன் கனவு கலைந்தது, கண்விழித்துக் கொண்டான். சுய நினைவற்றவனாய் தன்னைச் சுற்றிலும் கண்ணோட்டம் விட்டான். தான் தூக்கியெறிந்த வேத புத்தகத்தின் மேல் அவன் கண்கள் விழுந்தன. ஆவலுடன் ஓடி அதைத் திறந்தான். அவனையும் அறியாமல் அவன் பார்வை 1 யோவான் 1:7ன் மேல் விழுந்தது. தான் கனவில் கேட்ட பரவசக் குரல் மொழிந்ததை அங்கே எழுத்தில் வாசித்தான்.

> 'இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.'

தன்னையும் அறியாமல் இயேசுவை நோக்கிக் கதறினான். தன் பாவங்கள் யாவற்றையும் ஜெபத்தில் வெட்கமின்றி

அவரிடம் அறிக்கை செய்தான். 'என்னையும் உம் இரத்தத்தால் கழுவும்' எனத் தாழ்மையாய் வேண்டுதல் செய்தான். அவ்வாறே இயேசுவின் இரத்தத்தால் தூய்மையடைந்தான்.

இயேசுவின் இரத்தம் சிலுவைமீது சிந்தப்பட்டது நமக்காக, உமக்காக. நம் பாவங்கள் மன்னிக்கப்பட்ட அனுபவம் நமக்குண்டா? இல்லையேல் இப்பொழுதே, சற்று நம் தியானத்தில் சிலுவையில் தொங்கும் காட்சியைப் பதிப்போமாக. இயேசு அவ்வாறு சிலுவையில் கஸ்தியடைய நம்முடைய எந்தப் பாவங்கள் காரணமாயிருந்தன என நம் உள்ளத்தை ஆராய்வோமாக. அவற்றை அவர் சந்நிதியில் அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்போமாக. 'உம் இரத்தம் என்னைக் கழுவட்டும்' என்று கெஞ்சுவோமாக. 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்' *(1 யோ. 1:9).*

> 'இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்' *(1 யோ. 1:7).*

> 'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என, பாடுபட்ட தேவகுமாரன் கடைசியாய்ச் சொல்லி தம் ஜீவனை விட்டார். ஆனாலும் போர்ச் சேவகருக்கு இன்னும் சந்தேகம்! . . .' போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது' *(யோ. 19:34).*

அன்று புறப்பட்ட இரத்தம் இன்றும், பாவிகளைக் கழுவ பாவத்தை நீக்க, ஓடிக்கொண்டே இருக்கிறது. சிலுவையண்டை வருபவர் பாவ விமோசனம் அடைவது திண்ணம், உறுதி. பக்தன் ஒருவன் தன் அனுபவத்தை இவ்வாறு பாடினான்.

> 'இம்மானுவேலின் இரத்தத்தால், நிறைந்த ஊற்றுண்டே!

எப்பாவத் தீங்கும் அதனல், நிவிர்த்தியாகுமே.
காயத்தில் ஓடும் இரத்தத்தை, விசுவாசத்தால் கண்டேன்.
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை, எங்கும் பிரஸ்தாபிப்பேன்.
அவ்வாறே நானும் இயேசுவால், விமோசனம் பெற்றேன்.
என் பாவம் நீங்கிப்போனதால்; ஓயாமல் பாடுவேன்.'

G.B. Sathyanesan, B.A

3

'காயங்கள், தழும்புகள்'

இயேசு சிலுவையில் மரித்த பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினுல் இயேசுவுக்கு அந்தரங்க சீடனுமாகிய யோசேப்பு, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோகும் படி, பிலாத்துவினிடம் உத்தரவு கேட்டான், பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையினுல் அவன், இயேசு வின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோனுன்.

முன்பு ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந் திருந்த நிக்கோதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரிய போளமும் கலந்து, ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தான்.

'அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்த வர்க்கங்க ளுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினுர்கள்' (யோ. 19:38–40). மேற்கண்ட வசனங்களைக் குறித்துத் தியானம் செய்தபொழுது என் மனக்கண்கள் முன் அந்தக் காட்சி எப்படி இருந்திருக்குமென யோசித்துப் பார்த்தேன். தேவ குமாரனுகிய இயேசு, சிலுவையில் உயிரற்றவராய்த் தொங்கு கிறுர். 'உமக்காய் என் ஜீவனையும் கொடுப்பேன்' என வீருப்பு பேசிய அவர் சீடர்கள் ஓடி மறைந்தனர். ஒருவரையும் சிலுவையண்டையில் காணும். இயேசு உயிரோடிருந்த பொழுது அவருக்கு அந்தரங்கச் சீடனுயிருந்த யோசேப்பு என்பவன் இந்தக் கோரக் காட்சியைப் பார்க்கிறுன். அவன் உள்ளம் துடிக்கிறது! ஓர் உத்வேகம் அவனைப் பிடிக்கிறது, ஓடிப்போய் பிலாத்துவிடம் இயேசுவின் சரீரத்தைத் தன்னிடம் கொடுக்கும்படிக் கேட்கிறுன். அவர் உண்மையிலேயே இறந்து விட்டார் என நூற்றுக்கு அதிபதியின் மூலம் நிச்சயித்துக் கொண்ட பிறகு, அவனுக்கு அனுமதி கொடுக்கிறுன்.

அனுமதி பெற்ற யோசேப்பு மறுபடியும் கொல்கொதா மலைக்கு ஓடிவருகிறான்.

இயேசுவின் இன்னொரு அந்தரங்க சீடனாகிய நிக்கோதேமு மற்றொரு பக்கமிருந்து வாசனைத் திரவியங்களுடன் வருகிறான். இருவரும் சிலுவையண்டை போகிறார்கள். இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்தப்பட்ட இடத்திலிருந்து இன்னும் இரத்தம் வடிந்துகொண்டிருக்கிறது. அதைக் கண்ட இருவரின் உள்ளமும் பதைக்கிறது. அருகிலிருந்த போர்ச் சேவகனிடம் உடலைக் கேட்கிறார்கள். அவன் முரட்டுத்தன மாய் கைகளிலிருந்த ஆணிகளைப் பிடுங்குகிறான். இயேசுவின் சரீரம் துவண்டு சாய்கிறது. இருவரும் பதைத்துத் தாங்கிக் கொள்கிறார்கள். தங்கள் நேசர் மரித்துவிட்டார் என்பதை ஒருகணம் இருவரும் மறந்து போர்ச்சேவகரை நோக்கி 'ஐயா! தயவுசெய்து மெதுவாய் ஆணிகளைப் பிடுங்குங்கள், அவருக்கு எவ்வளவு வலிக்கும்!' என்றார்கள் போர்ச்சேவகன் தனக்குள் முணுமுணுத்துக்கொள்கிறான், 'பைத்தியக்காரர்கள்! பிணத் துக்கு எங்கே வலிக்கும்!' அடுத்து கால்களிலுள்ள ஆணிகளைப் பிடுங்குகிறான். கால்கள் இரண்டும்கூட வேரற்ற மரம்போல் விழுகின்றன. 'யோசேப்பு, நீ தலைப்பக்கம் தாங்கிக்கொள், நான் கால்களைப் பிடித்துக்கொள்கிறேன்' எனக் கூறிவிட்டு அவர் கால்களைத் தாங்கிக்கொள்கிறான், நிக்கோதேமு. இனி நீங்கள் எடுத்துப் போகலாம் என அலட்சியமாகச் சொல்லி விட்டு போர்ச்சேவகன் தன் நண்பர்களோடு அளவளாவப் போய்விட்டான்.

அமைதி! எங்கும் அமைதி! யோசேப்பும், நிக்கோதேமுவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கிறார்கள். இருவர் கண் களிலும் கண்ணீர். தங்கள் கைகளால் இயேசுவின் உடலைப் பிடித்துக்கொண்டிருப்பதால் கண்களைத் துடைத்துக்கொள்ள வும் வழி இல்லை. அடுத்து பெருமூச்சு எழுகிறது. உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுந்த பெருமூச்சு வெளிவரும்பொழுது இருவர் நாக்குகளையும் புலம்பும்படி தூண்டிவிட்டுப் போகிறது. 'ஐயோ! ஆண்டவரே!' என்ற அழுகைக் குரல் இருவர் வாயிலும் அதே நேரம் ஒலிக்கிறது. இருவரும் ஒருவர் வியாகுலத்தை ஒருவர் பகிர்ந்துகொள்கிறார்கள். 'பல்லாயிரக் கணக்கான மக்களைத் தனித்தனியே தொட்டு சுகமாக்கின

இந்தக் கரங்களுக்கா இந்தக் கதி? ஐயோ! பிதாவே, எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே' (லூ. 4:40).

நிக்கோதேமு: 'ஐயோ! யார் கூப்பிட்டாலும், நான் வந்து சுகமாக்குவேன்' என்று விரைந்தோடின அன்பின் பாதங்களுக்கா இந்தப் பரிதாப நிலை! எனக்கும் ஒன்றும் புரியவில்லையே, யோசேப்பு!

யோசேப்பு: 'ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன்' என்று சொல்லி ஏழு அப்பங்கொண்டு நாலாயிரம் பேருக்கு அதிகமானவர்களைப் போஷித்த இந்த அற்புதக் கரங்களா இப்படித் துவண்டு கிடக்கின்றன! என்னால் நம்பமுடியவில்லையே அப்பா! (மத். 15:32.)

நிக்: 'எனக்கும் விளங்கவில்லை யோசேப்பு! பேதுருவைக் காக்க, தன் சீடர்களையும் அவர் சென்ற படகையும் காக்க கடல் அலைமேல் நடந்த அந்தப் பாதங்களா இப்படிச் செயலற்றுக் கிடக்கின்றன?' (மத். 14:31.)

யோசே: 'நாயீனூர் விதவையின் மகனைப் புதைக்க, பாடையில் கொண்டுபோனபொழுது மனதுருகி, அவளைப் பார்த்து ''அழாதே'' என்று சொல்லி அவள் கண்ணீரைத் துடைத்து, பாடையைத் தொட்டு அவள் மகனையும் உயிரோடு எழுப்பின கரங்கள் உணர்ச்சியற்று சில்லிட்டுப் போயிற்றே! இனி அப்படிப்பட்ட அற்புதங்களை என்று காணப்போகிறோம்? இருள்! எங்கும் இருள்! உலக ஜோதி அணைந்து போயிற்று!' (லூ. 7:12–14.)

நிக்: 'பெத்தானியா கிராமத்தில், மரித்து நாலு நாட்களுக்குப் பிறகும் கல்லறையைத் தேடிவந்து கல்லறைக்கு முன் நின்று ''லாசருவே வெளியே வா!'' என்று அன்புடன் அழைத்து உயிரோடு அவனை எழுப்பினாரே! அந்தக் கால்கள், தகுதியற்ற நான் தாங்கிக்கொள்ள வேண்டிய நிலையில் இன்று கிடக்கின்றனவே! இனி உலகில் இத்தனை அன்போடு தேடி வரும் இந்தப் பாதங்களை என்று காணப்போகிறோம்?'

யோசே: 'ஐயோ! தலையெல்லாம் காயம். முதுகெல்லாம் காயம். மார்பில் ஈட்டிக் குத்துக் காயம். உடல் முழுவதையுமே நொறுக்கிவிட்டார்களே கொடியவர்கள். உடைந்த

உள்ளங்களை ஆறுதல்படுத்திய என் நேசருக்கு ஏன் இந்தக் காயங்கள்? ஏன்? ஏன்?' (ஏசா. 61:1.)

நிக்: 'பாவிகள், ஆயக்காரர் பரிசுத்தம் நாடி தம் பாதத்தில் விழுந்தபொழுதெல்லாம், தங்களுக்கு அருமையானவர்கள் வியாதிப்பிடியில் சிக்கித் தவித்தபொழுது அவர்களைக் குணமாக்கும்படி அவரை அழைக்க அவர் பாதத்தில் விழுந்தபொழுதும் அவர்களை ஏற்று அவர்தம் வேண்டுதல்களை நிறைவேற்றின இந்த நற்பாதங்களுக்கு ஏன் இந்தக் காயங்கள் ஏன்? என்?' (லூ. 7:38; 8:41.)

அவர்கள் உள்ளத்தில் ஏக காலம் எழுந்த கேள்விதான் இன்று நம் உள்ளத்திலும் எழுகின்றது. ஏன்? இயேசுவின் சரீரத்தில் காயங்கள் ஏன்? அன்பையே மக்களுக்கு வாரி வழங்கிய அன்பின் சொரூபியின் சரீரத்தில் காயங்கள் ஏன்? தேவன் ஏன் அதை அனுமதித்தார்? வேதம் சொல்வதென்ன?

அ. 'மீறுதல்கள்'

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசா. 53:5). நம்முடைய மீறுதல்கள் ஒரு காரணமாம்.

'ஐயோ, யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தம் கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந் தானே?' (நீதி. 23:29,30.) 'காரணமற்ற காயங்கள்' வரும் ஒரு காரணத்தைப் பார்க்கிறோம். மதுபானம் ஒரு காரணம். இதைப்போலவே, பலவித கொடிய பாவப் பழக்கங்களில் சிக்குண்டு தவிக்கும் கணக்கற்ற மக்களை நாம் அனுதினம் காண்கிறோம் அல்லவா?

என் நண்பர் ஒருவருக்கு ஒரு விநோதமான நோய் இருந்தது. இரவுநேரம் தூக்கத்தில் அவரையும் அறியாமல் எழுந்து, பயந்து அலறி ஓடுவார். வேலிகளில் ஏறுவார். சுவர்களில் ஏறிக் குதிப்பார். கடைசியில் எங்காவது விழுந்து கிடப்பார்.

காலையில் விழித்துப் பார்க்கும்பொழுது உடலெல்லாம் காயமாக இருக்கும். காரணமற்ற காயங்கள். ஏன் எனக்கு இந்தக் காயங்கள் என்று அவர் அழுது புலம்புவார்.

அக்கிரமப் பழக்கங்களும் முதலில் இனிமையாகத்தான் இருக்கும். 'முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும்' (நீதி. 23:32). சரீரத்திலும், குடும்ப வாழ்விலும் காரணமற்ற பலத்த காயங்களைக் கொண்டுவரும். சமூகம் முழுவதுமே இத்தகையோரால் தவிக்கின்றது. பாவம் விஷம்போன்றது.

1963ம் ஆண்டு பத்திரிகையில் ஒரு பரிதாபமான செய்தியை வாசித்தேன். செல்வந்தர் ஒருவர் தம் ஒரே மகளை மருத்துவக் கல்லூரியில் படிக்கும் ஒரு மாணவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மாமனார் ஒரு குறிப்பிட்ட தொகையை மருமகனுக்குக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருந்தார். ஆனால், மருமகனுடைய படிப்பு முடிந்ததும் அதை அவருக்குக் கொடுக்கலாம் என்று எண்ணி, உடனே அதைக் கொடுக்கவில்லை. இது மருமகனுக்குக் கோபத்தை உண்டாக்கியது. மனைவியை வந்து பார்க்கவேயில்லை. கோபமாகவே இருந்தார். மாதங்கள் கழிந்தன. ஒருநாள் திடீரென்று வந்தார். அதிக அன்போடு வரவேற்று ராஜோபசாரம் செய்தனர். இரவு வந்தது. யாவரும் தம் தம் அறைக்கு உறங்கச் சென்றனர். நடுநிசி. திடீரென்று செல்வந்தரின் மகளின் குரல் கேட்டது. 'அப்பா! இவன் என்னைக் கொல்கிறானே! சீக்கிரம் வந்து என்னைக் காப்பாற்றுங்கள்! ஐயோ! அப்பா! ஐயோ! என்னால் தாங்க முடியவில்லையே' என அவள் கதறினாள். பெற்றோர், அவளும் அவள் புருஷனும் தங்கியிருந்த அறைக்கு கதறி ஓடினர். அறையோ உள்ளே தாளிடப்பட்டிருந்தது. கடைசியில் போலீசார் வந்தனர். கதவை உடைத்துத் திறந்தனர். கண்ட காட்சி!

செல்வந்தரின் மகள் தரையிலே பிணமாய்க் கிடந்தாள். போலீசார் தந்த விவரம் இதுதான்: நடுநிசியில் தன் மனைவிக்கு விஷ ஊசி ஒன்று போட்டுக் கொலை செய்ய கணவன் முயன்றான். அவள் விழித்துக்கொண்டாள். தடுத்து

விட்டாள். எனவே, அவளை அடித்தே கொன்றான். அந்த உடலில் 23 இடங்களில் படுகாயங்கள் இருந்ததாக வைத்தியர்கள் பரிசோதனையின்போது கண்டுபிடித்தனர்.

அந்தக் காயங்களுக்குக் காரணம் என்ன? பொருளாசை என்னும் ஒரு சிறு பாவம், அக்கிரமம். அதில் அந்த வாலிபன் சிக்குண்டதால், வேறொரு சரீரத்தில் காரணமற்ற 23 காயங்கள்! இந்தக் காயங்களுக்குக் காரணமான பாவத்தை அழிக்க, இவ்விதக் காயங்கள் வராமல் தடுக்கவே, இயேசுவின் சரீரத்தில் காயங்கள் தோன்றின. 'அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்' (ஏசா. 53:5) என தீர்க்கதரிசியும் இயேசுவின் காயங்களைப்பற்றி முன்மொழிந்தாரன்றோ!

பேதுருவும் இதைப் பின்வருமாறு விளக்குகிறார்: 'நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்' (1 பே. 2:24).

இயேசுவின் சரீரத்தில் காயங்கள் தோன்ற ஒரு காரணம் அவர் நம் பாவங்களை—காரணமற்ற காயங்களை உண்டுபண்ணும் பாவங்களை தாம் சுமந்ததினாலேயே. நமக்கு வரவேண்டிய காயங்களைத் தாம் தம் சரீரத்திலே ஏற்றுக்கொண்டார். அவருடைய காயங்கள், தழும்புகள் நம் ஆத்துமாவைக் குணமாக்கவே உண்டாயின. இயேசு 'முற்றிலும் அழகுள்ளவர்' என வேதம் விவரிக்கிறது (உன். 5:16). ஆனால், அவர் சிலுவையில் தொங்கினபொழுதோ, 'அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது' (ஏசா. 53:2). ஆம், நம்மை சகல துர்ப்பழக்கங்களிலிருந்தும் விடுவிக்க, காரணமற்றகாயங்களைத் தடுக்க இயேசுவின் சரீரம் காயங்கள் நிறைந்ததாயிற்று.

சில வருடங்களுக்குமுன் ஒரு குறிப்பிட்ட இடத்தில், நடந்த எழுப்புதல் கூட்டங்களில், இராணுவத்தைச் சேர்ந்த மிகக் கடின உள்ளம் படைத்த ஒருவர் இயேசுவை ஏற்றுக்கொண்டார். அவர் வாழ்க்கை மிக ஆச்சரியமாக மாறினது. ஒரு நாள் அவர் ஒரு பஸ்ஸில் ஏற முயற்சித்தபோது, காரண

மின்றி பஸ் கண்டக்டர் அவரைத் தள்ளினுன். ஏருமல் தடுத்தான். அவர் இறங்காமல் நின்றபொழுது சட்டையைப் பிடித்து, 'இறங்காவிட்டால் சட்டையைக் கிழித்துவிடுவேன்' என்ருன். பழைய வாழ்க்கையுடையவராயிருந்திருந்தால், அவர் அந்தக் கண்டக்டரைக் கிழித்து எறிந்திருப்பார். ஆனுல், அவர் ஒன்றும் பேசவில்லே. தேவ அன்பினுல் நிரப்பப்பட்டு தன்னேயும் அறியாமல் கண்ணீர் வடித்தார். அதைப் பார்த்து மற்றப் பிரயாணிகள், அவருக்காகப் பரிந்து பேசினர். காரணமற்ற காயங்கள் ஏற்படாமல் தடுத்தவர் இயேசு. இயேசுவின் காயங்களே அதைச் செய்தன. நீங்கள் 'எனக்கு இந்தக் குறிப்பிட்ட குணத்தின்மேல் வெற்றியில்லே, இந்தக் கெட்ட பழக்கத்தின்மேல் வெற்றியில்லே' என்று புலம்புகிறீர்களா? உங்களே விடுவிக்கவே இயேசுவின் சரீரத்தில் காயங்கள் உண்டாயின. உங்கள் வாழ்வில் காயங்கள் வராதிருக்க அவர் தம்மை நொறுக்க ஒப்புக்கொடுத்தார். அவர் பாதத்தில் விழுந்து, 'என்னேயும் விடுவியும், நீர் பட்ட பாடுகள், காயங்கள் போதாதோ' என்று கெஞ்சுவீர்களாக. அவர் உம்மேலும் மனதுருகுவார். உங்களே விடுவிப்பார்.

> 'குமாரன் உங்களே விடுதலேயாக்கினுல் மெய்யாகவே விடுதலேயாவீர்கள்' (யோ. 8:36) என்று அருள் நாதரும் நமக்கு வாக்களிக்கவில்லேயா?

ஆ. நோய்கள்

'அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர் அந்த ஆவிகளேத் தமது வார்த்தையினுலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினுர்.

அவர் தாமே நம்முடைய பலவீனங்களே ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களேச் சுமந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசியினுல் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது' (மத். 8:16,17).

ஏசாயா தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனம் என்று குறிப்பிடப்படுவது ஏசாயா 53:4ல் உள்ள 'மெய்யாகவே அவர் நம்

முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்' என்ற வசனமே.

இயேசு அனுபவித்த துக்கம், பாடுகளில் மனிதர் தம் சரீரத்தில் அனுபவிக்கும் நோய், பலவீனங்கள் இவையும் அடங்கியுள்ளன. இயேசுவின் சரீரத்தில் காயங்கள் எப்படி உண்டாயின எனச் சற்றுக் காண்போம். பிலாத்து இயேசுவை வாரினால் அடிக்கும்படி தன் போர்ச்சேவகரிடம் ஒப்புவித்தான் என வேதம் சொல்லுகிறது. ரோம அரசாங்கத்தில் ஒரு பழக்கம் உண்டு. ரோம போர்ச்சேவகர்கள் அடிமை ஒருவனைத் தெரிந்தெடுத்து வருடத்திற்கு ஒரு தடவை வரும் தங்கள் பண்டிகை நாட்களில் அவனைப் 'போலி அரசனாக' (Mock King) நடத்துவார்கள். அந்த நாட்களிலெல்லாம் அவன் கேட்கும் யாவற்றையும் அவனுக்குக் கொடுப்பார்கள். 'இராஜாவே வாழ்க' என வாழ்த்துவார்கள். பண்டிகையின் கடைசித் தினமன்று அவனைத் தங்கள் இஷ்ட தேவதைக்கு நரபலியாகச் செலுத்துவார்கள். நாளடைவில் இந்தப் பழக்கம் நிறுத்தப்பட்டதெனினும், வேறு ஒரு மாற்றுக் காரியத்தைக் கடைப்பிடித்து வந்தனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை, தேசாதிபதி, போர்ச்சேவகர் வசம் ஒப்புவிப்பான். அவர்கள் அவனைப் 'போலி அரசனாக' பரிகாசம் செய்து செம்மையாய் அடிப்பார்கள். இன்றைய எருசலேமில் இயேசு சிலுவை சுமந்துசென்ற வீதியில் 14 இடங்களைக் குறித்து வைத்திருக்கிறார்கள். இயேசு விழுந்த இடம், தம் தாயைச் சந்தித்த இடம், சீமோனுக்குச் சிலுவையைச் சுமக்கும்படி கொடுத்த இடம்.இப்படி ஒவ்வொரு சம்பவத்தை ஒவ்வொரு இடத்தோடு இணைத்துச் சொல்லுகிறார்கள். அதில் இரண்டாவது இடம் இயேசு போர்ச்சேவகரால் 'போலி அரசனாக' சித்திரவதை செய்யப்பட்ட இடம். இது பிலாத்துவின் அரண்மனையின் ஒரு புறம். இதில் போர்ச்சேவகர் தங்கியிருந்தனர். தம் குதிரைகளைக் கட்டியிருந்தனர் என்பதற்கு இன்னும் அத்தாட்சிகள் உள்ளன. சிலர் இந்த இடத்தில் 300 போர்ச்சேவகர் இருந்தனர் என்றும், வேறு சில வேதசாஸ்திரிகள் 600 பேர் இருந்தனர் என்றும் சொல்கின்றனர். எனினும், இயேசு இந்தப் போர்ச்சேவகர் கையில் ஒப்புக் கொடுக்கப்பட்டார். நூற்றுக்கணக்கான போர்ச்சேவகர்

அவரைச் செம்மையாக உதைத்தனர், பரிகசித்தனர், தடி கொண்டு தாக்கினர்.

அவர் சரீரம் முழுவதும் நொறுக்கப்பட்டது. எப்பக்கமும் காயம். காயம்படாத இடமே அவர் சரீரத்தில் இல்லை. வேதம் எதற்காக இந்தக் காயம் என்று சொல்லுகிறது? அது நமது பலவீனங்களுக்காக, நமது நோய்களுக்காக. எத்தனை இனிய செய்தி!

நமது சரீரமானது, தேவனுடைய ஆலயம், பரிசுத்த ஆவியின் ஆலயம் என்று வேதம் சொல்லுகிறது (1 கொ. 3:16; 16:19). அது தேவனுடைய ஆலயமானுல், தேவன் தம் ஆலயத்தைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்பது எத்தனை உண்மை! நமது சரீரம் எந்தெந்த அவயவங்களில் நோயினுல் வாடித் தவிக்கிறதோ அந்தந்த அவயவங்களில் இயேசு தமது சரீரத்தில் காயமடைந்தார் என்பதை நாம் மறக்கலாகாது.

இயேசு இப்பூமியில் மனிதனுய் உலாவினபொழுது, 'சகல பட்டணங்களையும், கிராமங்களையும் சுற்றி நடந்து ஜெப ஆலயங்களில் உபதேசித்து, இராஜ்யத்தின் சுவிசேடத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினுர்' (மத். 9:35) என்று வேதம் சொல்லுகிறது. அவரை, யூதாஸ் காட்டிக்கொடுக்க மூன்று தினங்களே இருக்கும் பொழுதுகூட அவர் கூறினதென்ன? 'நான் இன்றைக்கும், நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி, மூன்றும் நாளில் நிறைவடைவேன்' (லூ. 13:34). இயேசு இவ்வாறு மக்களை சொஸ்தமாக்கக் காரணம் என்ன? அவர் வியாதியுள்ளவர்கள்மேல் வைத்த மனதுருக்கம் என்ன? அவர் மனதுருகி வியாதியுள்ளவர்களைச் சுகமாக்கினுர் என்பதை வேதத்தில் பல இடங்களில் பார்க்கலாம் (மத். 14:14; 20:34; மா.1:41). லூ. 4:40ல் அவர் ஒவ்வொருவர்மேலும் தம் கைகளை வைத்து சுகமாக்கினுர் என்று காண்கிறேம். இந்த மனதுருக்கமே, அவர் தம் சரீரத்தில், நமது வியாதிகளின் கொடுமையைச் சகிக்கும்படி தம்மை ஒப்புக்கொடுக்கும்படி செய்தது.

வியாதியுள்ளவர்களுக்காக அதிகம் கரிசனையுடன் ஜெபிக்கும் வரம்பெற்ற ஒரு பக்தனிடத்தில் ஒரு தடவை 'ஐயா! நீங்கள் ஏன் வியாதியுள்ளவர்களுக்காய் ஜெபிக்கிறீர்கள்?' என்ற ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அவர் கொடுத்த பதில்: 'நான் 1955ம் வருடம் இயேசுவை என் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டேன். என் ஆன்மாவில் மெய்ச் சமாதானம் வந்தது. பாவப் பழக்கங்கள் ஓடி மறைந்தன. ஆன்மீக சுகம் பெற்றேன். ஆனால், என் சரீரமோ நோயால் பல வருடங்களாக வாடிக்கொண்டே இருந்தது. இயேசு என் வாழ்வில் வந்த பின், வேதத்தைக் கருத்தாய் வாசிக்க ஆரம்பித்தேன். சரீர நோயினால் வாடினவர்களையும் இயேசு எவ்வாறு ஏற்றுக்கொண்டு ஒவ்வொருவரையும் சுகமாக்கினார் என்பதை வாசித்தேன். உடனே நானும் மனங்கசந்து அழுது, ''ஆண்டவரே, அன்று நீர் மக்களைக் குணமாக்கினது உண்மையானால்'' என்னையும் சுகமாக்கும் என்று கண்ணீரோடு ஜெபித்தேன். என்ன ஆச்சரியம்! அப்பொழுதே குணமடைந்தேன். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற மூதுரைப்படி, இயேசுவினிடமிருந்து நான் பெற்ற நன்மைகளை ஆன்மீக, சரீர நோயால் வாடும் மற்றோர்க்குச் சொல்ல ஆரம்பித்தேன். பலர் நான் அவர்கட்காக ஜெபிக்க வேண்டுமென்று விரும்பினர். ஜெபித்தும் வந்தேன். 1962ம் வருடம் நான் ஊழியத்தில் சேர்ந்தேன்.'

'மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்' (யோ. 14:12) என்று எழுதியிருக்கிற வண்ணமே என்னையும் நோயினால் வாடும் மக்கட்கு ஆறுதல் தரும் ஆசீர்வாதமான கருவியாய்ப் பயன்படுத்தும் என வேண்டினேன். பல மாதங்கள் உண்மைப் பாரத்தோடு கதறி அழுதேன். 1962ம் வருடம் அக்டோபர் மாதம் 10ம் தேதி இயேசு என்னைத் தேடிவந்தார். என் ஜெபவேளையில் என்னைத் தம் தூய ஆவியால் நிறைத்தார். அவரை நான் தரிசிக்கும் பேறு பெற்றேன். மூன்று மணி நேரம் அவர் பிரசன்னத்தில் மூழ்கியிருந்தேன். இந்த அனுபவம் என் வாழ்

வில் ஓர் புதிய திருப்பத்தைக் கொண்டுவந்தது. 'மேலும், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது' (ரோ. 5:5) என்ற தேவ வாக்குப்படி என் உள்ளத்தில் நோயினால் வாடும் மக்கள்மேல் ஒரு அனுதாபத்தை அன்று முதல் கண்டேன். கிறிஸ்துவின் அன்பு, அம்மக்களுக்காக ஜெபிக்கும்படி என்னைத் தூண்டுகிறது' என்றார். இதுதான் அவருடைய அனுபவம்.

இயேசு அன்புள்ளவர். மனிதர் தம் மனதில் படும் வியாகுலங்கட்காக, அவர் கெத்செமனே தோட்டத்தில் வியாகுலத்தை அனுபவித்தார். மக்களின் ஆன்மீக நோயாகிய பாவத்தைப் போக்க அவர் சிலுவையில் தாமே பாவமாக்கப்பட்டு, மாசற்ற தம் இரத்தத்தைச் சிந்தினார். நாம் சரீரத்தில் அனுபவித்துத் தவிக்கும் பலவீனம், நோய்கள் இவற்றை அவர் தமது சரீரத்திலேயே அனுபவித்துத் தீர்த்தார்.

தீர்க்கமுடியாத நோயால் நீங்கள் வாடுகிறீர்களா? தாங்கவொண்ணா வலியினால் பல வருடங்கள் தவிக்கிறீர்களா? நீங்கள் சுகமடைய ஒரே வழி. இயேசு சரீரத்தில் அடைந்த காயங்கள் என் சரீரத்தில் நான் அனுபவிக்கும் ஒவ்வொரு நோய்க்காகவே என்று விசுவாசியுங்கள். எனவே, இயேசுவின் மனதுருக்கம் என்மேல் பாயும் என்று நம்புங்கள். அவ்வாறே அவர் மனதுருகி உங்களைச் சுகமாக்குவார். அவர்தாமே இந்த நோய்களைத் தம் சரீரத்தில் சிலுவையில் சுமந்ததால், உங்கள் வலிகளை, வேதனைகளை அவர் திட்டமாய் அறிவார், உணர்வார், உங்களைச் சுகமாக்குவார். அவர் மனதுருக்கம் மாறாதது.

இயேசு உயிரோடு எழுந்த பிறகு, மகிமையடைந்த தம் சரீரத்தில் தம் சீடர்கட்குக் காட்சியளித்தார். யாவரும் பரவசமடைந்தனர். அவ்வமயம் தோமா என்னும் சீடன் அங்கில்லை. அவன் வீடு திரும்பியவுடன் மற்ற சீடர்கள் கர்த்தரைக் கண்டோம் என்று சாட்சி பகர்ந்தனர். 'அவனோ அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்' என்றான் (யோ. 20:26). எட்டு நாளைக்குப் பின்பு மற்றச் சீடரோடு தோமாவும் இருக்கையில் இயேசு அவர்

களுக்குத் தரிசனமானூர். 'பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு' என்றார்.

தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: 'என் ஆண்டவரே, என் தேவனே என்றான்' (யோ. 20:27,28).

இந்தச் சம்பவம் ஒரு முக்கியமான காரியத்தைக் காட்டுகிறது. இயேசு உயிர்த்தெழுந்த பின்னும், அவருடைய மகிமையடைந்த சரீரத்திலும்கூட காயங்களால் உண்டான தழும்புகள் இன்னும் இருக்கின்றன. இன்று அவரிடம் நாம் நம் சரீரப் பாடுகளுக்காக, நோய்களுக்காக ஜெபிக்கும்பொழுது அவர் தம் கையில் உள்ள தழும்புகளைப் பார்ப்பார். அவர் பட்ட பாடுகள் அவர் நினைவிற்கு வரும். அப்பொழுது தம் ஆணி பாய்ந்த கைகளால் நம்மைத் தொட்டு சுகமளிப்பார்.

வேறு ஒரு சுவையான காரியம்: ஒரு மனிதன் தேவனுடைய பிள்ளையாய் மாறும்பொழுது, தேவன் அவனைப் பார்த்து, 'இதோ என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்' (ஏசா. 49:16) என்று சொல்லுகிறார். அவருடைய உள்ளங்கைகளில் நம் உருவம் மட்டுமல்ல, ஆணிகளால் உண்டான காயங்களும் இருக்கின்றன. எப்பொழுதெல்லாம் தன் உள்ளங்கையை அவர் பார்க்கிறாரோ அப்பொழுதெல்லாம் அவர் அதில் உம் உருவத்தை மட்டுமல்ல, உமக்காக சிலுவையில் பட்ட பாடுகளையும் அக்காயத்தின்மூலம் நினைவுகூருகிறார். உம்மைக் குணமாக்குகிறார். இயேசுவின் பிள்ளையாய் வாழ்வது எத்தனை பாக்கியம். இரவும் பகலும் நேசரின் காயங்கள் மத்தியில் நம் உருவம் அவர் உள்ளங்கையில் இருப்பது எவ்வளவு சிலாக்கியம்.

இயேசுவின் சரீரத்தில் காயங்களில் தழும்புகள் இருக்குமட்டும் நாம் எல்லா துர்ப்பழக்கங்களுக்கும் விலகி வாழ அவை பலம் தரும். நம் சரீர பாடுகளிலிருந்தும் விடுதலை நல்கும்.

ஒரு விநாடி நாம் இயேசுவின் காயம்பட்ட சரீரத்தை நினைவில் நிறுத்துவோம். 'அவர் கைகளில் அனுபவித்த வேதனைகள் என் கைகள் பாவத்திற்கும், வியாதிக்கும் விலகி இருக்க வேண்டுமென்பதற்காக, கால்களில் வேதனைகள் என் கால்

களுக்காக, அவ்வாறே பலவீனமான ஒவ்வொரு அவயவத்தையும் அவருடைய நொறுக்கப்பட்ட அவயவங்களோடு இணைத்து ஜெபிப்போம்.' வேதம் சொல்லுகிறது:

'நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும் அவருடைய மாம்சத்திற்கும், அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்' (எபே. 5:30).

நாம் அவரோடு இணைந்திருக்கிறோம். அவர் திராட்சைச் செடி, நாம் கொடிகள் (யோ. 15:5). எனவே, அவர் ஜீவன் நம் ஆத்துமாவிலும், சரீரத்திலும் பாய்வது உறுதி. 'அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்' (ஏசா. 53:5).

4

'நெருக்கமும் நெருப்பும்'

'பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறேன். ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.' (லூ. 12:49,50).

'நான் . . . நெருக்கப்படுகிறேன்!' துயரம் நிறைந்த இவ்வுலகில் அடிக்கடி நம் காதில் விழும் ஒரு வார்த்தை இது! 'ஐயா! மூத்த பையனுக்குக் கல்லூரிச் சம்பளம் கட்ட வேண்டும். மற்ற இரு பிள்ளைகளுக்கு பள்ளிச் சம்பளம் கட்ட வேண்டும். திருமணத்திற்குப் பின் முதல் முறையாகப் பண்டிகைக்கு வீட்டிற்கு வரும் பெண்ணுக்கும் அவள் மாப்பிள்ளைக்கும் வேண்டிய சீர் வரிசைகள் செய்யவேண்டும். அடுத்த பெண்ணின் திருமண நாள் வேறு நெருங்கிவருகிறது, அதற்கு இன்னும் ஓர் ஏற்பாடுமே செய்ய இயலவில்லை. இதற்கிடையில் என் கடைசிப் பயல் விளையாடும் இடத்தில் காலை ஒடித்துக் கொண்டு ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறான். என் மனைவியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். எல்லா நாளும் நோய்ப் படுக்கைதான். என்ன பாவம் செய்தேனோ! எல்லாப் பக்கமும் நெருக்கப்படுகிறேன்' இவ்வாறு புலம்பும் மக்கள் கோடா கோடி. வாழ்க்கையில் தோன்றும் பிரச்சினைகளை சமாளிக்க இயலாது தவிக்கும் மனுமக்கள் இவ்வாறு அங்கலாய்ப்பதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால், தலைப்பில் நாம் கண்ட வேத வசனத்தில் அவ்வாறு புலம்புவது, ஒரு மனிதனல்ல; தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து. தேவகுமாரன் அவ்வாறு அங்கலாய்க்கிறார் என்பதை உள்ளம் ஏற்க மறுக்கிறதல்லவா! ஆனால் அது உண்மை. முற்றிலும் உண்மை. அவர் வாயி லிருந்துதான் அவ்வார்த்தைகள் வெளிவந்தன என வேதம்

கூறுகிறது. நல்லது, அவ்வாறுயின் அவரை அவ்வாறு அங்கலாய்க்கும்படி செய்தது எது என்பதை வேதத்திலேயே காண முயற்சிப்போமா?

பிதாவாகிய தேவன் நெருக்கப்பட்டார்

தேவன் அன்புள்ளவர். அவர் இஸ்ரவேல் புத்திரரை எவ்வளவாய் நேசித்தார் என்பதைப் பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கிறோம். அவர்கள் தங்கள் சத்துருக்கள் கையில் சிக்கித் தவிக்கும்பொழுதெல்லாம், அவரும் தவிப்பாராம். அவர்கள் நெருக்கப்படும் சமயமெல்லாம், தாமும் நெருக்கப்படுவதாகவே கருதுவாராம்!

'. . . அவர்கள் (சத்துருக்கள்) தங்களை (இஸ்ரவேல் புத்திரரை) இறுகப்பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் தவிக்கிறதினாலே, கர்த்தர் மனஸ்தாபப்படுவார்' (நியா. 2:18).

'இப்பொழுது எனக்கு இங்கே என்ன இருக்கிறது, என் ஜனங்கள் விருதாவாய்க் கொண்டுபோகப்பட்டார்கள்; அவர்களை ஆளுகிறவர்கள் அவர்களை அலறப்பண்ணுகிறார்கள்; . . .' என அவர் தம் ஜனங்களை நினைந்து அங்கலாய்ப்பதாக ஏசாயா 52:5 சொல்லுகிறது.

'அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; . . . அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்து வந்தார்' (ஏசா. 63:9).

> '. . . தேவன் அன்பாகவே இருக்கிறார்' (1 யோ. 4:8).
> 'மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார் . . .' (உபா. 33:3)

என்ற வார்த்தைகள் எவ்வளவு உண்மை! இந்த உண்மையை இன்னும் சில உதாரணங்களால் வேதத்திலிருந்தே பார்ப்போம்.

இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாய் 430 வருடங்கள் இருந்த பிறகு, தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தம் தாசனாகிய மோசேயை அவர்களிடம் அனுப்பினார். அவன் பார்வோனோடு அவர்களுக்காக வழக்

காடி, தேவனுடைய வல்லமையால் அற்புத அடையாளங் களை நடப்பித்து, எகிப்து தேசத்திலிருந்து அவர்களை மீட்டு, கானான் தேசத்திற்கு நேராய் வழிநடத்திக்கொண்டு போனான். மக்கள் இவ்விதமாய்ப் பிரயாணம் பண்ணுகையில், ஆங்காங்கே கூடாரம் அடித்துத்தான் இளைப்பாறினர். தேவன் அவர்களை வழிநடத்துமாறு பகலில் ஒரு மேகஸ்தம்பத்திலும், இரவில் ஓர் அக்கினி ஸ்தம்பத்திலும் முன்சென்றார். அவர் களுடனேயே இருந்தார் (யாத். 6:2–8; 12:40,41; 13:21,22). எனினும் அவர்களுக்கு வழிகாட்டியாய் மட்டும் இருப்பதில் அவர் திருப்தியடையவில்லை. தீர்க்கதரிசியான மோசேயைப் பார்த்து:

'அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.'

'இஸ்ரவேல் புத்திரரின் நடுவே நான் வாசம்பண்ணி, அவர் களுக்குத் தேவனாயிருப்பேன்.'

'உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்; . . .' (யாத். 25:8; 29:45; லேவி. 26:11) என்றெல்லாம் அவர்களுடனே கூடாரத்திலும்கூட தாம் தங்க விரும்புவ தாகத் தம் ஆசையை வெளிப்படுத்தினார்!

> ' . . . வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; . . .' (ஏசா. 66:1)

எனத் தன் இருப்பிடத்தை வருணித்தவர், கோடாகோடி தேவ தூதர்களால் போற்றப்படுபவர் (வெளி. 5:11), 'சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுபவர்' (1 தீமோ. 6:16), தம்மை நேசிக்கும், தம் தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியா கிய இஸ்ரவேல் புத்திரரைக் கண்டபொழுதோ தாம் அவர்க ளோடு வனாந்திரத்தில் வாசம்பண்ண விரும்பினாராம். தேவ னுடைய அன்பு உள்ளத்தைத்தான் எவ்விதம் வருணிப்பது!

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய இராணுவத்தைத் திரட்டி சிங்கப்பூரின் அருகில் இருக்குங்காலை அவருடைய இராணுவத்தில் ஒரு பகுதியினருக்குள் சிறு பூசல் உண்டாயிற்று. இரு பகுதியினராகப் பிரிந்தனர். இதையறிந்த போஸ் அங்கு விரைந்து சென்று அவர்களுடனேயே தங்கிவிட்

G.B. Sathyanesan, B

டாராம். அவர் அவர்களுடன் தங்கியதால் பூசல் வெளியே தோற்றமளிக்காவிடினும் இதயத்தில் இரு தரப்பாரிடையேயும் இன்னும் ஒற்றுமை ஏற்படவில்லையெனக் கண்டுகொண்டார். ஒரு நாள் உணவு அருந்தும் நேரம் வந்தபொழுது, இரு தரப்பாரையும், இரண்டு வரிசையாக ஒருவருக்கொருவர் எதிர் முகமாக உட்கார வைத்தாராம். அவர்கள் உணவுண்ண ஆரம்பித்தவுடன் தாம் இரு வரிசைக்கும் நடுவில் மெதுவாக நடந்துசென்று ஒவ்வொரு உணவுத் தட்டிலும் இருந்து ஒரு பிடி சாதம் எடுத்துத் தம் வாயில் போட்டு புன்முறுவலோடு உண்டாராம். இந்தச் செய்கை ஒவ்வொரு சிப்பாயின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது. அவரது தாழ்மை, ஒவ்வொருவர் மேலும் பாகுபாடின்றி அவர் வைத்திருந்த பாசம் அவர்கள் உள்ளத்தை அசைத்தது. அவர்களால் தம் உள்ளுணர்ச்சியை அடக்கிக்கொள்ள இயலவில்லை. குதித்தெழுந்தனர். அவரை அணைத்துக்கொண்டு 'கோ'வென்று கதறி அழுதனர். அவர்களது அன்புப் பிடியில் சிக்கி ஒரு கணம் சுபாஷ் திணறினார். சில வினாடிகளுக்குப் பிறகு, அவர் கண்களில் நீரை வடியச் செய்யும் மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. தமக்குள் ஒருவரையொருவர் சிறு பூசல் நிமித்தம் வெறுத்துப் பகைத்த இரு கோஷ்டி இராணுவத்தினரும் ஒருவரையொருவர் மார்புறத் தழுவிக் கண்ணீர் வடித்தனர். பூசல் 'ஆதவனைக் கண்ட பனி'போல் ஓடி மறைந்தது. யாவர் வாயிலிருந்தும் 'நம் தலைவர் நேதாஜி வாழ்க' என்னும் கோஷம் எழும்பிற்று.

இந்த நிகழ்ச்சியில் கனம் நேதாஜி அவர்கள் தம் இராணுவத்தின்மேல் வைத்த அன்பை, அவர்கள் தமக்குள் சண்டையிட்டுக் குற்றம் செய்தபொழுதும், மாறாத அன்பைவைத்திருந்ததைக் காண்கிறோம். தாம் அவர்கள் தலைவன் என்று பெருமை கொள்ளாது, உண்மை அன்பினால், பட்சத்தினால் நிறைந்து, அவர்களோடு வந்து வாழ்ந்து அவர்களது எளிய உணவைத் தாமும் உண்டார். அவ்வாறே 'அன்பாகவே இருக்கும்' தேவனும், தம் மக்களாகிய இஸ்ரவேலரோடு தாமும் தங்க விரும்பினார். அவர்கள் தம் சத்துருக்களால் நெருக்கப்பட்டபொழுது, தாமும் நெருக்கப்பட்டார்.

'துன்பம், துயரம், கண்ணீர் உங்களை நெருக்குங்காலே, நீங்கள் தேவன்பால் அன்புகொண்டு வாழ்பவராணுல், உங்களோடுகூட அவரும் நெருக்கப்படுகிருர்' என்பதை மறவாதிருங்கள். பல்லாண்டுகட்குமுன் மகா அரசனுக கல்தேயர் நாட்டை நேபுகாத்நேச்சார் என்னும் ஓர் அரசன் அரசாண்டான். அவன் கீழ் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று யூத அதிகாரிகள் இருந்தனர். ஒரு சமயம் பொற்சிலை ஒன்றைச் செய்வித்து தன் இராஜ்யத்தில் உள்ள யாவரும் அதை வணங்கவேண்டுமென்றும், அங்ஙனம் வணங்காதோர் எரியும் அக்கினிச் சூளையில் போடப்படுவர் என்றும் பறைசாற்றுவித்தான். யாவரும் வணங்கினர். ஆனுல் இந்த மூன்று அதிகாரிகள் மட்டும் கர்த்தரையேயன்றி வேறு எவரையும் வணங்குவதில்லை எனப் பதிலளித்தனர். கோபமூண்ட அரசன் அவர்களைத் தம் பணியாட்கள்மூலம் சூளையில் தூக்கி எறிந்தான்; அவர்கள் தொலைந்தனர் என அவன் எண்ணும் நேரம் வானளாவ எரியும் அக்கினியின் நடுவில் ஓர் விசித்திரக் காட்சியைக் கண்டான்.

நெருப்பின் நடுவில் போடப்பட்டவர் மூவர். ஆனுல் அக்கினிக் குண்டத்தை உற்று நோக்கியபோது பின்வருமாறு கூச்சலிட்டான்.

> '...இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது...' (தானி. 3:25).

ஆம்! காணக்கூடாத இறைவன், தம்மையே வணங்கின தம் அடியவர்கள் நெருப்பின் நடுவிலே எறியப்பட்டபொழுது தாமும் அவர்களோடுகூட நெருக்கத்தை அனுபவிக்க அக்கினிக் குண்டத்திற்குள் இறங்கினுர். அவர் அன்பை என்னவென்று விவரிப்பது.

அவர்மேல் பாசம் வைத்து நீங்கள் வாழ்வது உண்மையாயின் உங்கள் நெருக்க நேரத்திலும், அவ்வாறே, அவரும் நெருக்கப்படுவார். அவர் பிரசன்னத்தில் நெருப்பின் உக்கிரம் தாணுகவே அணையும். யாதொரு சேதமுமின்றி, நீங்கள் எந்தச் சூழ்நிலையின் நடுவிலிருந்தும் வெளியே வருவீர்கள்.

'முட்செடி போலப் பற்றிடுமே.
மோசமடையாய் நீ முற்றிலுமே.
ஏங்கிடாதே நீ. நேசர் அதில் தோன்றுவாரே'

என்றே பக்தனும் பாடினன் அன்றோ. தேவன் எங்கோ வானத்தில் உறைபவர் அல்லர். தம் அடியவருடன் அவர் தம் சுக துக்கங்களில் பங்கு பெற்று வாழ்வதே அவர் விருப்பம்.

தேவகுமாரன் நெருக்கப்பட்டார்

காணக்கூடாத இறைவன், பாவக் கடலில் மூழ்கித் தவிக்கும் தம் சிருஷ்டியாம் மானிடரை மீட்க சுமார் 2000 வருடங்கட்கு முன் தாமே மனுவுருக்கொண்டு பூமியில் இறங்கிவந்தார். அவருக்கு 'இயேசு' என்று பெயரிட்டார்கள். 'இயேசு' என்ற பதத்திற்கு,

> '...அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்...' என்று அர்த்தமாகும் *(மத். 1:21).*

இயேசு தம்மைப்பற்றிக் கூறும்பொழுது,

> '...என்னைக் கண்டவன் பிதாவை (தேவனை)க் கண்டான்...' *(யோவா. 14:9).*
>
> 'நானும் பிதாவும் (தேவனும்) ஒன்றாயிருக்கிறோம்...' *(யோவா. 10:30)*

என்றார்.

> 'அவர் (இயேசு) அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்' *(கொலோ. 1:15).*
>
> 'இவர் (இயேசு) அவருடைய (தேவனுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமும்...' *(எபி. 1:3)*

என்று வேதம் இயேசுவை வருணிக்கின்றது. தேவகுமாரனாகிய இயேசுவில் இறைவனது சுபாவம் முழுவதும் பிரதிபலிக்கக் காண்கிறோம்.

ஏசாயா 63:9ல் தம் ஜனங்களுடைய,

> 'எல்லா நெருக்கத்திலும் அவர் (தேவன்) நெருக்கப்பட்டார்...'

என வாசித்தோம். அதே தேவன் மாம்சத்தில் தேவகுமாரனாக வெளிப்பட்டபொழுதும்,

'எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்' (லூ. 12:49,50)

என வேதனையுடன் பகர்ந்தார். தேவனிடத்தில் காணப்பட்ட அதே தன்மை தேவகுமாரனிடமும் காணப்பட்டது.

தேவகுமாரன் அனுபவித்த நெருக்கத்தில் வேறு ஓர் ஆழ்ந்த பகுதியும் உண்டு. வெளிப்படுத்தல் 5:6ல் ஒரு தரிசனத்தை பரி. யோவான் அப்போஸ்தலன் காண்கிறார். பரலோகம் திறந்திருக்கிறதையும், தேவனுடைய சிங்காசனம் இருப்பதையும் கண்டார். இவை இனிமையான காட்சிகள். அதோடுகூட ஒரு துயரக் காட்சியையும் அவர் காண்கிறார். அஃதென்ன? அவரே கூறக் கேட்போம்.

'அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஓர் ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன்; . . .'

ஏசாயா தீர்க்கதரிசி, இயேசுவின் பாடுகளை, பல நூற்றுக் கணக்கான வருடங்கட்கு முன்பே, தரிசனம் மூலம் கண்டு எழுதும்பொழுது, பின்வருமாறு விவரித்தார்:

> ' . . . அடிக்கப்படும்படி கொண்டுப்போகப்படுகிற ஓர் ஆட்டுக்குட்டியைப்போல . . .' (ஏசா. 53:7)

அவர் இருந்தார். இக்காட்சி சிலுவையில் அறையப்படுவதற்காகக் கொண்டுபோகப்பட்ட இயேசுவைச் சித்திரிக்கிறதென உடனே நாம் அறியலாகும். யோவான் அப்போஸ்தலன் கண்ட ஆட்டுக்குட்டியும், இயேசுவையே காண்பிக்கிறதென நாம் இந்தத் தரிசனத்தை மனதில் வைத்து எளிதில் கூறிவிடலாம். ஆனால், இரு தரிசனங்கட்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு.

'அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டி'யை ஏசாயா தம் தரிசனத்தில் கண்டார்.

யோவான் அப்போஸ்தலன் கண்ட ஆட்டுக்குட்டியோ,

'அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி.'

அந்த ஆட்டுக்குட்டி இரவும் பகலும் 'அடிக்கப்பட்டவண்ணமாகவே' இருந்தது. ஆ! எத்தனை குரூரம்! அந்த ஆட்டுக்

குட்டியின் சரீரம் எவ்வளவு நொந்துபோயிருக்கவேண்டும்! எவ்வளவு அடிகளை, எத்தனை நாட்கள், எதுவரைதான் அந்தக் குட்டி ஆடு தாங்கக்கூடும்?

'ஐயா! இப்பொழுது இந்த ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிறது. எப்பொழுது இந்த அடிகள் துவங்கி இருக்கும்? இந்த அழகிய ஆட்டுக்குட்டி இந்த துன்ப அனுப வத்திற்குள் எவ்வளவு காலம் இருக்கிறது?' என்றெல்லாம் உள்ளத்தில் கேள்விக்குறி எழக்கூடும்.

> 'உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி! . . .' (வெளி. 13:8).

இந்த ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவது இன்று நேற்றல்ல, உலகத் தோற்ற முதல். சற்றே இதை ஆராய்வோம்.

> 'உலகத் தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியை களெல்லாம் தெரிந்திருக்கிறது' (அப். 15:18)

மட்டுமல்ல.

> ' . . . அவருடைய கிரியைகள் உலகத் தோற்ற முதல் முடிந்தும் (எபி. 4:3) இருக்கின்றன,

என தேவனுடைய முன்னறிவைப்பற்றி வேதம் கூறுகின்றது. தேவன், தம் உள்ளத்தில், என்று உலகைப் படைக்கச் சித்தம் கொண்டாரோ, அன்றே உலகத்தை நிரப்ப, அதில் பலுகிப் பெருகி, அதை அரசாள, மானிட வர்க்கத் தையும் படைக்கத் தீர்மானம் செய்தார். உலகத்தைப் படைக்கும் முன்பே ஆதியில் இந்தத் தீர்மானம் அவர் மனதில் உதயமாயிற்று. எனவேதான்

> ' . . . உலகத் தோற்றத்துக்கு முன்னே . . . நம்மைத் தெரிந்துகொண்டபடியே' (எபே. 1:4)

என வேதமும் சொல்லுகிறது. உலகத் தோற்றத்திற்கு முன்னே அல்லது ஆதியிலே, என்று மனிதனைப் படைக்கத் தீர்மானம் செய்தாரோ, அன்றே தேவகுமாரனுடைய உதயமும் உண்டாயிற்று.

> 'தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி, நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்'

என்ற வார்த்தைகள் மூலம் (சங். 2:7) இந்தச் சத்தியம் விளங்குகிறதன்றோ!

உலகத் தோற்றத்திற்கு முன்பே, ஆதியும் அந்தமுமாய், அல்பாவும் ஓமெகாவுமாய், முந்தினவரும், பிந்தினவருமாய் தேவகுமாரன் ஜெநிப்பிக்கப்பட்டார். எதற்காக? பின்னல், தேவன் படைக்கப்போகும் உலகில் தோன்றி, பாவம் செய்து மாளப்போகும் மக்களின் பாவங்களைச் சுமப்பதற்காக! மனிதன் தோன்றி, பின் பாவம் செய்து, என்று விழுந்து போனானோ, அன்று முதல் பரலோகத்தில், 'பிதாவின் (தேவனுடைய) மடியில்' இருந்த தேவகுமாரன்மேல் உலகோர் செய்யும் பாவங்கள் விழுந்துகொண்டே இருக்கின்றன! அவர் அப்பாவங்களால், அவற்றிற்குரிய தண்டனைகளால் அடிக்கப்பட்ட வண்ணமாகவே இருக்கிறார். அவர் மாம்சத்தில் கடைசியாக பூமியில் வெளிப்பட்டபொழுது, தீர்க்கதரிசியாகிய யோவானும்,

> 'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' (யோவா. 1:29)

என்றே அவரை வருணித்தானன்றோ! இயேசுவாகிய தேவகுமாரன், தேவ ஆட்டுக்குட்டி, உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட வண்ணமாகவே இருக்கிறார். அந்தோ! எத்தனை யுகங்கள் இந்த வேதனை? தேவன் நெருக்கப்பட்டார் குமாரனும் நெருக்கப்பட்டார், அடிக்கப்பட்டார், அடிக்கப்பட்ட வண்ணமாகவே இருக்கிறார். எதற்காக? ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

ஆலிவர் கிராம்வெல் என்றொரு இராணுவத் தளபதி இங்கிலாந்து தேசத்தை அரசாட்சி செய்த போது, கடினமான சட்டதிட்டங்கள் இருந்தன. இளம் போர்ச் சேவகன் ஒருவன் அந்நாட்கள் ஒன்றில் கிராம்வெல்முன் இராணுவச் சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொண்டுவரப்பட்டான். தலைவரும் சட்டப்படி அவனுக்கு மரணதண்டனை விதித்தார். 'நாளை மாலை ஆலய மணியடிக்கும் நேரம், அவன் துப்பாக்கியால் சுடப்படக்கடவன்' என்று தீர்ப்பு வழங்கினார்.

G.B. Sathyanesan, B.

மறுநாள் மாலே வந்தது. அந்தப் போர்ச்சேவகன் கண்கள், கைகள் கட்டப்பட்டவனுய் பாறை ஒன்றின்மேல் நிறுத்தப்பட்டான். தூர இருந்த ஆலயமணியின் ஓசைக்காக, சுடுவதற்கென நியமிக்கப்பட்ட போர்ச்சேவகர் காத்திருந் தனர். மாலே மறைந்து இருள் வந்தது. மணியின் ஓசையோ வரவில்லே. கிராம்வெல் திகைத்தார். துப்பாக்கி பிடித்து, குற்றவாளியைச் சுடக் காத்திருந்தோர் குழம்பினர். குற்ற வாளியும் ஏன் இன்னும் துப்பாக்கிக் குண்டு வெடிக்கும் சத்தம் எழவில்லே, நான் உயிரோடு இருப்பது உண்மையோ, இது நனவோ, கனவோ எனத் தனக்குள் பிதற்றிக்கொண் டிருந்தான்.

அப்பொழுது எங்கிருந்தோ ஓடிவந்த இளம் நங்கை ஒருத்தி கிராம்வெல்லின் பாதத்தில் விழுந்தாள். அவளால் பேசவும் இயலவில்லே. இரு கைகளே மட்டும் உயர்த்திக் காண்பித் தாள். அவைகள் அதிகமாய் நைந்து, நசுங்கி, இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தன. ஒரு விஞடியில் காரியத்தை கிராம்வெல் விளங்கிக்கொண்டார்.

அந்தப் பெண், குற்றம் சாட்டப்பட்ட போர்ச்சேவக னுக்குத் திருமணம் செய்துகொடுப்பதற்கென நியமிக்கப் பட்டிருந்தவள். அவனுக்கு மரணதண்டனே விதிக்கப்பட்டது' எனக் கேட்டவுடன் அவள் உள்ளம் பதறியது. எப்படியும் அவனேக் காப்பாற்ற விரதம் பூண்டாள். ஆலயத்தில் மணிக் கூண்டிற்குள் மத்தியானமே ஏறி உட்கார்ந்துகொண்டாள். தன் இரு கரங்களாலும் மணியின் இரும்பு நாக்கை இறுகப் பற்றிக்கொண்டாள். ஆலய மணி அடிக்கும் மாலே நேரம் வந்தது. கோவில் வேலேயாள் வழக்கம்போல் வந்து ஓங்கி ஓங்கி அடித்தான். 'இந்த மணியின் நாதம் வெளிவந்தால் தானே என் அன்புக்குரியவன் உயிர்போகும். என் உயிர் போனுலும் சரி. இந்த மணியிலிருந்து ஒரு சிறு நாதமும் வெளிவராது காப்பேன்' எனக் கூறிக்கொண்டே விடாது மணியின் நாவைப் பற்றிக்கொண்டாள். அவள் கைகள் இரும்பு மணியில் மோதி, சிதைவுண்டன! வலியைப் பொறுக்க இயலவில்லே. எனினும் துப்பாக்கி முனேயில் அநாதை போல் நிற்கும் தன் அன்பனே நினேத்துப் பல்லேக் கடித்து யாவற்றையும் சகித்துக்கொண்டாள். மணி அடிப்பவனே

ஓர் செவிடன். மணியிலிருந்து நாதம் ஒன்றும் எழவில்லை என்பதையோ தான் கயிறை இழுக்க இழுக்க ஓர் பெண்ணின் கைகள் நொறுங்குகின்றன என்பதையோ அவன் அறிய வில்லை. அடித்து முடித்தான். தன் வழியே போனான். ஏழைப் பெண்ணோ வேகமாய்க் கீழிறங்கி தன் அன்பன் உயிர் இருக்கின்றதோ எனக் காண உளம் பதைத்து ஓடிவந்தாள். கிராம்வெல்லைக் கண்டாள். தஞ்சம் என அவன் பாதம் வீழ்ந்தாள்.

கிராம்வெலின் உள்ளம் உருகிற்று. 'உன் அன்பன் உயிர் பிழைப்பான்' என உறுதி கூறினார். தன் கையில் ஆலய மணியின் அடி, மேலே மேலே விழுந்து அளவிலா வேதனையை உண்டுபண்ணியும்கூட அவை யாவையும் பொறுமையாகச் சகித்தன்றோ, ஓர் உயிரைக் காப்பாற்றினாள். அவ்வாறேதான் உலகில் உள்ள ஒவ்வொருவருடைய பாவங்களும் அவற்றின் தண்டனையும் உலகத் தோற்றமுதல் இயேசுவின்மேல் விழுந்து கொண்டே இருக்கிறது. அவர் அடிக்கப்பட்ட வண்ண மாகவே, நெருக்கப்பட்டவராகவே இருக்கின்றார். உலகின் இரட்சிப்பிற்காக அவர் பொறுமையாய் எல்லா வேதனையும் சகித்துக்கொண்டே இருக்கிறார்!

பாவம் செய்து விழுந்துபோன தாவீது அரசன்,

> 'தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ் செய் தேன் . . .'

என்று அறிக்கை செய்தாரன்றோ! (சங். 51:4).

'. . . உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்' என எரேமியா தீர்க்கதரிசியும் புலம்பினாரன்றோ! (எரே. 14:20).

மனந்திரும்பிய கெட்ட குமாரனும், தான் செய்த பாவங் கள் எல்லாம் . . . 'பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன் பாகவும்' செய்யப்பட்டது எனத் தன் தந்தையிடம் ஒத்துக் கொண்டானன்றோ! (லூ. 15:21.)

ஒவ்வொரு பாவமும், தேவனுக்கு விரோதமானதாகவே கருதப்படுகிறது. எனவே ஒவ்வொன்றும் பாவப் பரிகாரமாம் கிறுஸ்துவின் மேலேயே விழுகிறது.

இயேசுவின் பாடு மரணங்களைத் தியானிக்கும் நாம் ஒன்றைத் தியானிப்பது நல்லது. சிலுவையில் அவர் பட்ட

பரம வேதனைகள் போதாதா? நாம் வேறு இன்னும் பாவங்கள் செய்து தொடர்ந்து அவரை வேதனைக்குட்படுத்த வேண்டுமா?

'ஆண்டவரே! பாவம் செய்யாதிருக்க எனக்குப் பலம் தாரும். நான் உம்மை என் பாவச் செய்கைகளால் வேதனைக் குட்படுத்த விரும்பவில்லை. என்னை அனுதினமும் பரிசுத்தமாகப் பாதுகாத்தருளும்' என்று பொருத்தனை செய்து நம் வாழ்வை அவர் கரத்தில் ஒப்புவிப்போமா?

'ஐயா, சிலுவையில் இயேசு அனுபவித்த பாடுகளோடு அவர் பாடுகளெல்லாம் முடிந்துவிட்டன' என்றொரு எண்ணம் எழலாம்! அது நியாயமே. எனினும் சற்றே அப்போஸ்தலர் 9:1–9 வாசிப்போமாக. சவுல் என்னும் வாலிபன் கிறிஸ்து இயேசுவின்மேல் நம்பிக்கைவைத்து வாழ்பவரைத் துன்புறுத்துவதற்காக, தமஸ்கு என்னும் ஒரு பட்டணத்திற்குப் புறப்பட்டுப் போகிறான். வழியில்,

> 'அவன் பிரயாணமாய்ப்போய், தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடுதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது;
> அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே நீ, என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்.
> அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார் என்றான்.
> அதற்குக் கர்த்தர்: நீ துன்பப் படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்' (அப். 9:3–5).

வானத்திலிருந்து சவுலோடு இப்பொழுது பேசியது, உயிர்த்தெழுந்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இயேசு. அவர் கேள்வி 'நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்' என்பதே! சவுல் துன்பப்படுத்துவது இயேசுவை நேசிக்கும் அவரது அடியவர்களை.

> '. . . பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலைசெய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெப ஆலயங்களிலும், நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து தேவ

தூஷணஞ் சொல்லக் கட்டாயப் படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்க வெறிகொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்' என்று அவனே கூறுகிறான்' (அப். 26:10,11).

ஆனால் இயேசுவோ, அவன் தன்னையே, துன்பப்படுத்துவதாகச் சொல்லுகிறார். இயேசுவின் அன்பை எவ்வண்ணம் விவரிப்பது?

'... கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களா... வதே மேன்மையான அனுபவம்' என்று அதே சவுல் தாம் மனம்மாறிய பிறகு எழுதுகிறார் (எபே. 3:18,19).

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் மூலம் நாம் அறிவதெல்லாம், மனிதனுடைய பாவங்கள் தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசுவை உலகத் தோற்றமுதல் தொடர்ந்து வேதனைப் படுவதுபோலவே அவரது அடியவர்கள் அனுபவிக்கும் வேதனையும், அவரைத் துன்பப்படுத்துகிறது, அவரை நெருக்குகிறது. இயேசுவின் பிள்ளையே! கலங்காதிருப்பீராக! உம் பாவங்களைச் சுமக்க உம்மோடு நெருக்கப்படுகிற ஒப்பற்ற ஒரு நேசர் உண்டு. அவர்மேல் உம் பாரத்தை வைத்துவிடுவீராக.

'... கர்த்தாவே, ஒடுங்கிப் போகிறேன்; என் காரியத்தை மேற்போட்டுக் கொள்ளும்' என்றேன்.

'நான் என்ன சொல்லுவேன்? அவர் எனக்கு வாக்கு அருளினார்; அந்தப் பிரகாரமே செய்தார்;...' (ஏசா. 38:14,15)

என்ற எசேக்கியா அரசனின் அநுபவம் உம்முடையதாகவும் இருக்கட்டும்!

'நெருக்கமும், நெருப்பும்'

மக்களுடைய பாவங்களாலும், தன்னை நேசிப்பவர்கள் படும் துன்பத்தாலும் தேவகுமாரன் இன்றும் நெருக்கப் படுகிறார் என முன் பத்திகளில் தியானித்தோம். ஆனால் இந்த

அத்தியாயத்தின் தலைப்பில் நாம் கண்ட வசனம், இயேசு, வேறு ஒரு முக்கியமான காரியத்திற்காக 'நெருக்கப்படுகிறேன்' என்று சொல்வதாகப் பார்க்கிறோம். இன்னும் ஒரு விசை அந்த வசனத்தை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

'பூமியின்மேல் அக்கினியைப்போட வந்தேன், அது இப்பொழுதே பற்றிய எரிய வேண்டுமென்று விரும்புகிறேன். ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்' (லூ. *12:49,50*).

பொதுவாக நாம் தியானிப்பதெல்லாம்,

> 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். . .' (*1 தீமோ. 1:15*).
>
> 'இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் . . .' (லூ. *19:10*)

என்ற சத்தியத்தையே! தாம் வந்த வேறொரு நோக்கத்தையுங்கூட மேற்சொன்ன வசனங்களில், வெளிப்படுத்துகிறார். அஃதென்ன? 'பூமியின்மேல் அக்கினியைப் போட வந்தேன்' என்பதே! இந்த வார்த்தை, ஓரளவு நம்மைத் திடுக்கிடச் செய்கிறதல்லவா? அன்பே உருவான இயேசு, அக்கினியைப் போடுவதா? இந்த சர்ச்சையை, அவ்வாறே விட்டு விட்டு உள்ளத்தில் பரபரப்பூட்டும் வேறொரு காட்சிக்குச் செல்வோம்.

இக்காட்சி வேதத்தில் 1இராஜாக்கள் 18ம் அதிகாரத்தில் உள்ளது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் அவரை மறந்து வேறே தெய்வங்களை நாடிப் போகின்றனர். இதனால் தேசத்தில் கொடிய பஞ்சம் ஏற்படுகிறது. அப்பொழுது, தேவன் எலியா என்னும் தீர்க்கதரிசியை அழைத்து, முதலாவது, ஜனங்கள் தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் தம்மண்டை மனந்திரும்பும்படி செய்வதற்காக, அவன் செய்யவேண்டியது என்னவென்று சொல்லி அனுப்புகிறார். அவ்வாறே அவன் புறப்பட்டு வந்து, இஸ்ரவேல் ஜனங்கள் யாவரையும் கர்மேல் என்னும் ஓர் பர்வதத்தில் கூட்டுகிறான். அங்கே கர்த்தருக்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதன்மேல்,

'விறகுகளை அடுக்கி, ஒரு காளையைச் சந்து சந்தாகத் துண்டித்து விறகுகளின் மேல் வைத்தான்.'

பிறகு தேவனை நோக்கி அவன் பின்வருமாறு ஜெபிக்க ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

'கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் எங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான்.

அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகன பலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.'

'ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள் *(1 இரா. 18:33,37–39)*.

வானத்திலிருந்து இறங்கி வந்த அக்கினி, திரளான இஸ்ரவேல் ஜனங்களைத் தங்கள் பாவங்களிலிருந்து, பயந்து, விலகி, மறுபடியும் கர்த்தரிடம் வந்து சேரும்படி செய்தது எனக் காண்கிறோம்!

இதேபோல் வேறொரு காட்சியை 2 நாளாகமம் 7:1–5 ல் உள்ள வசனங்களில் நாம் காணலாம். இராஜாவாகிய சாலொமோன் கர்த்தருக்கென்று அழகிய, விலையேறப் பெற்ற ஆலயம் ஒன்றைக் கட்டினான். ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும் முகமாக,

'தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய தாபர ஸ்தலத்திற்குத் தேவரீர் உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் எழுந்தருளும், . .' (2 நாளா. 6:41) எனக் கருத்தாய்ப் பிரார்த்தனை செய்தான். அடுத்து நிகழ்ந்ததை வேதம் பின்வருமாறு விளக்குகிறது.

'சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று.

கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதினுல், ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது.

அக்கினி இறங்குகிறதையும், கர்த்தருடைய மகிமை ஆலயத்தின்மேல் தங்கியிருக்கிறதையும், இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் கண்டபோது, தளவரிசை மட்டும் தரையிலே முகங்குப்புறக் குனிந்து பணிந்து கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி, அவரைத் துதித்தார்கள்' (2 நாளா. 7:1–3).

மேற்கண்ட இரண்டு சம்பவங்களிலும், வானத்திலிருந்து பரிசுத்த அக்கினி இறங்கியவுடன், மக்கள் உள்ளங்கள் குத்தப்பட்டு தேவனே நோக்கித் திரும்பின எனக் காண்கிறோம். இந்த அக்கினி, மக்கள் கண்கள் காண இறங்கியது. அதேபோன்ற ஓர் அநுபவத்தை மக்களுக்கு அருளிச்செய்ய, நிரந்தரமாய் அருளிச்செய்ய, அதன் மூலம் மக்கள் உள்ளங்கள் எப்பொழுதும் தேவன் பக்கமாகத் திரும்பியே இருக்கத்தக்கதாகவே, இயேசுவும் தாம் பூமிக்கு வந்ததாகச் சொல்லுகிறார். எலியாவும் சாலொமோனும் மன்றுடி, பரலோகத்திலிருந்து பரிசுத்த அக்கினியை இறங்கச் செய்ததுபோல, தேவகுமாரனும்

'பூமியின்மேல் அக்கினியைப் போடவே' (லூ. 12:49) வந்தார் என வேதம் சொல்லுகிறது. இயேசுவை மக்களுக்கு அறிமுகம் செய்துவைத்த யோவான்ஸ்நானகனும்,

> '. . . அவர் (இயேசு) பரிசுத்த ஆவியினுலும் அக்கினியினுலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்'

என்றே நற்சாட்சி பகர்ந்தாரன்றே! (மத். 3:11.)

இயேசுவும் கடைசியாகத் தம் சீடருடன் உரையாடும்பொழுது 'நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினுலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்' என அவன் வாக்கை தம் வாய்மொழியால் உறுதிப்படுத்தினுர் (அப். 1:4; 11:16). அந்த நாளும் வந்தது. அன்று நிகழ்ந்த அற்புத சம்பவத்தை வேதத்திலிருந்தே காண்போம்:

'பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.

அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.

அவர்களெல்லாரும்பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்' (அப் 2: 1–4).

ஆம்! அன்று, அவர், தம் வாக்குப்படி, அவர்களை 'அக்கினியினாலும், பரிசுத்த ஆவியினாலும்' நிரப்பினார். இந்த அநுபவத்தை பரிசுத்த பேதுரு, கீழ்க்கண்டவாறு விளக்கினார்:

'அவர் (இயேசு) தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்' (அப். 2:33). அக்கினியையும் பரிசுத்த ஆவியையும் அன்பு பொழிந்தருளினது. இயேசுவும் இதைச் செய்யவே தாம் பூமிக்கு வந்ததாகக் கூறினார்! அதை நிறைவேற்றினார்!

ஆனால் அதை நிறைவேற்றுமுன்'அவர் அடைந்த நெருக்கம்தான் எத்தனை! '. . . தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார் . . .' (எபி. 9:14) என்ற வார்த்தைகள் சிலுவையில் அவர் அடைந்த பாடுகளை விளக்குகின்றன. சிலுவையில் அவர் பாடுகளை அநுபவிக்கு முன்பே, வேறுவித நெருக்கங்களையும் அவர் அநுபவித்திருக்கவேண்டும். எனவேதான் முன்பே 'நான் . . . நெருக்கப்படுகிறேன்' என அவர் மனங்கலங்கிச் சொன்னார். சரீர பாடுகளின்றி, அவர் இதற்காக அநுபவித்த மன வியாகுலங்கள்தான் எண்ணிலடங்கா.

அவருடைய சகோதரர் அவரை நம்பவில்லை (யோவா. 7:5). அவருடைய இன ஜனத்தார் அவர் 'மதிமயங்கியிருக்கிறார்' என்றனர்! (மா. 3:21). அவருடைய ஊரார் அவரைப்பற்றி

இடறலடைந்தனர் (மத். 13:57). பொது ஜனங்களோ 'பிசாசு பிடித்தவன், 'வஞ்சிக்கிறவன்' என்றனர். (யோவா. 7:12,20.) சிலர் கல்லெறியுவும் கொலை செய்யவும் முயற்சித்தனர்! (யோவா. 8:59; லூ. 4:29). பரிசேயரோ பரிகாசம் செய்தனர்! (லூ. 16:14). அவர் சீடரில் ஒருவன் அவரைக் காட்டிக்கொடுக்க வகை தேடிக்கொண்டேயிருந்தான் (மத். 26:16).

சிலுவையில் அவர் அநுபவித்த பாடுகள்தான், அவர் வேதனைகளின் உச்சக்கட்டம். ஆனால் அதற்கு முன்பே, அவர் நெருக்கப்பட்டுக்கொண்டே இருந்தார் என்பதை மேற்கண்ட வேத வசனங்கள் ஓரளவு உணர்த்துகின்றன. நெருக்கத்தின் உச்சமோ சிலுவையில் வெளியாயிற்று. பாவத்தை நீக்கும் ஜீவ ஊற்றும் இயேசுவின் இரத்தம் அவர் சரீரத்திலிருந்து வெளியாயிற்று. பின் பரலோகம் சென்று அங்கிருந்து தேவனுடைய சிங்காசனத்திலிருந்து பரிசுத்த அக்கினியாம் ஆவியானவரை மக்கள்மேல் பொழியும்படி செய்தது. எலியா, சாலொமோன் என்பவர்களின் ஜெபத்திற்குப் பதிலாக பூமியில் இறங்கிய பரிசுத்த அக்கினி, கைகளால் கட்டப்பட்ட ஒரு பலிபீடத்தின் மேல் இறங்கி அங்கிருந்த பலிகளைப் பட்சித்தது. ஆனால் இயேசு அநுபவித்த நெருக்கங்களின் பலனாய் பூமியில் இறங்கிய பரிசுத்த அக்கினியாம் பரிசுத்த ஆவியானவரோ, மக்கள் உள்ளம் என்னும் பலி பீடத்தில் இறங்கி, அங்கு இருக்கும் பாவ வேரைப் பட்சிக்கிறார்.

முன்னைய இரு உதாரணங்களிலும் இறங்கிய பரிசுத்த அக்கினி அந்த ஒரே நேரம் தோன்றி பின் மறைந்தது. ஆனால் கிறிஸ்து இயேசுவின் மூலம் இறங்கும் பரிசுத்த ஆவியாகிய அக்கினியோ

'என்றென்றைக்கும்' தாம் இறங்கிய உள்ளத்தில் தங்கியிருக்கிறதாயிருக்கிறது (யோவா. 14:16).

'. . . அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும் . . .' படி செய்கிறது (யோவா. 4:14; 7:38).

'. . . அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் . . .' படி செய்கிறது (யோவா. 4:14; 7:38).

மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் இடம் (Power House) ஒன்றைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த இடத்திற்கு மேல் விசாலமான ஒரு தேக்கத்தில் பல அடி உயரத்திற்குத் தண்ணீர் தேக்கிவைக்கப் பட்டிருந்தது. அந்தத் தண்ணீர்க் குழாய்கள் மூலம், சிறிய அளவில், மின் உற்பத்தி அறைக்குள் பாயும்படி செய்யப்படுகிறது. தண்ணீரின் வேகம் அங்குள்ள இரும்பு அலகுகள் மேல் தாக்கி அவற்றைச் சுழலச் செய்யும்பொழுது மின்சக்தி உற்பத்தியாகிறது. அந்த மின்சாரம் எத்தனையோ மைல்கள் பரந்துள்ள பல்லாயிரக் கணக்கான மக்கட்கு ஒளியையும், பலவித நன்மைகளையும் கொடுக்கிறது.

பிரம்மாண்டமான இந்த மின்ஆலையைக் காணும்போது பிரமிப்படைந்தேன். எல்லா இயந்திரங்களையும் கண்ணுற்று வெளிவருங்கால் அழகிய வெண்கலத் தட்டில் சில பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். ஆவலோடு உற்று நோக்கினேன். என் மனம் ஒரு கணம் ஆழ்துயரில் மூழ்கியது. இந்தமின் ஆலையை, நீர்த்தேக்கத்திலுள்ள தண்ணீரோடு, இயற்கையோடு, போராடி நிர்மாணிக்கையில் தம் உயிரை இழந்த பொறியாளர்கள் மற்றும் அவர்தம் உதவியாளர் முதலியவர்களின் பெயர்ப் பட்டியலே அது! அந்த மின் ஆலையிலிருந்து பாயும் மின்சக்தி, பல்லாயிரக்கணக்கானோருக்குப் பற்பல விதங்களில் வாழ்வளிக்கிறது. ஆனால், அது உற்பத்தியாவது ஒரு விதத்தில், இந்த மக்களின் தியாகத்தின் பயனால். ஆம், கடினமான பாறைகளை உடைத்து, காடுகளை வெட்டித் திருத்தி, வனவிலங்குகளோடு போராடி மிகுந்த நெருக்கத்தில் அந்தத் திட்டத்திற்காக உழைத்திருப்பர். முடிவிலோ தம்மையே தியாகமாகவும் அர்ப்பணித்து விட்டனர். அவ்வாறே ‘பரிசுத்த ஆவியாம் அக்கினி’ எனும் பரலோக மின்சாரம் கோடானுகோடி மக்களின் ஆன்மீக வாழ்வைப் பிரகாசிப்பிக்க, வழி வகுக்குமாறு, கர்த்தராகிய இயேசு தாமே, பல ‘நெருக்கங்களை’ அநுபவித்து, முடிவில் தம்மையே சிலுவையில் அர்ப்பணித்தார்.

இயேசு அனுபவித்த ‘நெருக்கத்தைப்’ பற்றிய தியானத்தை நாம் முடிக்கும் முன்பதாக, அந்த நெருக்கத்தினின்று புறப்

பட்ட 'அழியா பரிசுத்த நெருப்பாகிய' 'பரிசுத்த ஆவியான வரின்' முக்கியத்துவம்தான் என்ன? அதனால் மானிட வர்க்கத் திற்கு யாது பயன் என சற்றே தியானிப்போமாக.

அ. 'சுட்டெரிப்பின் ஆவி'

'அப்பொழுது ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக் கைக் கழுவி, நியாயத்தின் ஆவியினாலும், சுட்டெரிப்பின் ஆவியினாலும், எருசலேமின் இரத்தப் பழிகளை அதின் நடுவி லிருந்து நீக்கிவிடுவார்' (ஏசா. 4:3).

மேற்கண்ட வசனத்தில், இந்தப் பரிசுத்த அக்கினி செய்யும் பணியினை 'நியாயத்தின் ஆவி, 'சுட்டெரிப்பின் ஆவி' என்ற இரு பதங்கள் விளக்குகின்றன. இந்தப் பணியை ஆண்டவர் இயேசுவும் கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

'அவர் (பரிசுத்த ஆவியானவர்) வந்து, பாவத்தைக் குறித் தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்' (யோவா. 16:8).

ஏசாயா ஆறும் அதிகாரத்தில் ஒரு தெய்வீகக் காட்சி யைப் பார்க்கிறோம். ஏசாயா தீர்க்கதரிசி ஒருநாள் தேவால யத்தில் இறைவழிபாட்டில் ஈடுபட்டுள்ளார். திடீரென்று தேவனுடைய பிரசன்னம், ஆலயத்தை நிரப்புகிறது. தேவ னுடைய பிரசன்னம் அவரது உள்ளத்தில் பாவ உணர்வை உண்டாக்குகிறது. தன்னையுமறியாமல்,

'ஐயோ! அதமானேன்: நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் . . .' எனக் கூவுகிறார். மறுபடியும்,

'அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் (தேவதூதரில் ஒருவன்) பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட் டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து,'

'அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடு களைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான்' (ஏசா. 6:5,6,7) என மாறு பட்ட ஓர் அனுபவத்தையும் கூறுகிறார்.

தேவனுடைய பிரசன்னம் அவருக்குள் பாவ உணர்வை உண்டாக்கியது. தேவ சமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட நெருப்புத் தழலோ அதை நிவிர்த்தியாக்கிற்று. சுட்டெரித்தது.

'எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்' (ரோ. 3:23).

'பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே' (1 இரா. 8:46).

மேற்கண்ட வேத வசனங்கள், பாவமே செய்யாத மனுஷன் பூமியிலில்லையென வலியுறுத்துகின்றன. எனினும் நான் ஒரு பாவியென்ற எண்ணம் நமக்கு எளிதில் வருவதில்லை. பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்தில் நிழலிடும்பொழுது, ஏசாயாவின் அனுபவம் போல, நம் உள்ளத்தில் மறைந்திருக்கும் இரகசிய குறைகள், பாவங்கள் இவை நம் மனக் கண்கள் முன் பளிச்சிடுகின்றன. நம்மையுமறியாமல் 'அந்தோ! நான் அசுத்தன்' எனக் கதறும்படி செய்கிறது.

ஒரு சமயம், இரும்புக் குழாய்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றைக் காணச் சென்றிருந்தேன். அப்பொழுது அங்கிருந்த விஞ்ஞானி ஒருவர் என்னை ஒரு சிறு கருவியினிடம் அழைத்துச் சென்று அதன் பணியை விளக்கினார். என்னிடம் ஒரு இரும்புத் துண்டைக் கொடுத்து 'ஐயா! இதில் ஏதாவது குறைகளைக் காண்கிறீர்களா?' என வினவினார். அதை நன்றாய் உற்று நோக்கினேன். மழ மழவென்றிருந்தது. 'குறை ஒன்றையும் காண இயலவில்லை' என்றேன். அந்த இரும்புத்துண்டை என் கையிலிருந்து வாங்கி அந்த இயந்திரத்தின் முன்பு வைத்து அதோடு பொருத்தினார். அந்த இயந்திரத்தின் மேல் இருந்த வரைபடத்தில் (Graph) உடனே பலவித மேடு பள்ளங்கள் எழும்பக் கண்டேன். வியந்தேன். அந்த மேடு பள்ளங்களைக் கீழ்க்கண்டவாறு என் நண்பர் விளக்கினார்:

'இந்த இயந்திரத்திலிருந்து நுண் கிரணங்கள் அந்த இரும்புத் துண்டுக்குள் பாய்ந்து செல்கின்றன. அவை அதிலுள்ள காற்றுக் குமிழிகள் போன்ற குறைகளைக் கண்டுபிடித்து இந்த வரைபடத்தில் வெளிப்படுத்துகின்றன' என்றார். என் கண்களுக்கு மிக ஒழுங்கான, யாதொரு பழுதுமற்றதாகக் காட்சியளிக்கும் அதே இரும்புத் துண்டினுள் இத்தனை

வாயுக் குமிழிகளா என வியந்தேன். அவ்வாறே நம் பார்வையில் மிகத் தூய்மையாகக் காணப்படும் நம் வாழ்வை, பரிசுத்த ஆவியானவர் முன் திறந்து வைக்குங்கால், அவருடைய நுண் கதிர்கள், அதைப் பரிசோதித்து, மிக மிக ஆழத்திலிருக்கும் பாவக் குமிழிகளையும் வெளிப்படுத்துகிறது.

அந்தத் தொழிற்சாலையிலுள்ள இயந்திரம் குறைகளைக் காட்டுவதோடு நின்றுவிடுகிறது. ஆனால் பரிசுத்த ஆவியானவரோ, குறைகாட்டுவதோடு அல்ல, அந்தக் குறைகளைச் 'சுட்டெரிக்கும் ஆவியாகவும்' விளங்குகிறார்.

'உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாய் (பாவிகளாய்) இருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்' (1 கொ 6:11) என்ற வேத வசனத்தின்படி பரிசுத்த ஆவியானவர், பாவங்களை, அக்கிரமங்களைச் சுட்டெரிக்கிற அக்கினியாயிருக்கிறார்!

பாவியான ஒரு மனிதன் சுவிசேடக் கூட்டம் ஒன்றிற்கு வருகிறான் என வைத்துக்கொள்வோம். அங்கு 'ஆவியாகவும் ஜீவனாகவும்' இருக்கிற வேத வசனங்களைக் கேட்கிறான் (யோவா. 6:63). தேவனுடைய ஆவியானவர் அந்த வசனங்கள் மூலம், அவன் குறைகளை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார், அவன் மனங்கசந்து தன் பாவங்களுக்காக அழுகிறான். 'தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' எனக் கதறுகிறான். சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம் அவனுடைய எல்லாப் பாவங்களையும் நீக்கி அவன் உள்ளத்தைச் சுத்திகரிக்கிறது. அவன் ஒரு தூய்மையான இருதயத்தை அடைகிறான். பாவ அழுக்குகள் அவன் இருதயத்தை விட்டு அகலுகின்றன. பாவப்பாரம் நீங்கி அவன் உள்ளம் இலகுவடைகிறது.

'சிலுவை யண்டையில் நம்பிவந்து நிற்கையில்,
பாவப்பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்.
எந்த நேரமும், எனதுள்ளத்திலும்,
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்'

என்றே அவனையும் பாடச் செய்கின்றது. இது மாபெரும் அநுபவமே. ஆயின் அதோடு காரியம் முடிந்துவிட்டதோ?

ஒரு குறிப்பிட்டுள்ள இடத்திலுள்ள காற்று முழுவதையும் எடுத்துவிட்டோம் என வைத்துக்கொள்வோம். எந்த ஒரு இடமும் வெறுமையாய் இருக்க இயற்கை என்றும் அநுமதிப்ப தில்லே. அந்த இடத்தை நோக்கி வாயு விரைந்து சென்று, நிரப்ப முயற்சிக்கிறது. அவ்வண்ணமே, பாவம் நீங்கி, தூய்மையடைந்த ஒரு இருதயத்தில், பாவம் இதுகாறும் ஆட்சி செய்து வந்த இடம் வெறுமையாயிருக்கிறது. எனவே இயற்கை விதிப்படி, நாட்கள் செல்லச் செல்ல, பழைய பாவங்கள், தீய பழக்க வழக்கங்கள் திரும்ப நுழைய பலமாய் முயற்சி செய்கின்றன. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட அநேகர் இந்தக் கொடிய தீய சக்திக்கு முன் நிற்க இயலாது, அவற்றில் மறுபடியும் விழுந்து மடிகிருர்கள். இந்தப் பரிதாப நிலையையே பரி. பேதுரு பின்வருமாறு வருணிக்கிருர்:

'கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிஞலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பின வர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப் பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். . . . நாய் தான் கக்கினதைத் தின்ன வும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது' (2 பே. 2:20,22).

இந்த நிலை வராதிருக்க, இயேசுவின் மாசற்ற இரத்தத் தால் கழுவப்பட்ட ஒரு உள்ளம் அடுத்து அவரது பரிசுத்த அக்கினியால் நிரம்பி இருப்பது அவசியமாயிருக்கிறது. பாவம் நீங்கி வெறுமையான ஒரு உள்ளம் அவரது ' சுட்டெரிக்கும் ஆவியால்' நிரம்புமாயின், வேறு பதர்கள் குப்பைகள் அங்கு நுழைய இடம் ஏது?

ஒரு சமயம் ஈரான் தேசத் தலைநகராகிய டெஹ்ரானுக்குப் போயிருந்தேன். அங்குள்ள மத்திய இராஜ்ய பாங்கில், ஈரான் தேச மன்னர், அரசியின் அணிகலன்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அதைக் காண உள்ளே சென்ற பொழுது, கீழ்க்கண்ட எச்சரிப்புப் பலகையை ஆங்கிலத்தில் கண்டேன்:

'நகைகள் வைக்கப்பட்டிருக்கும் கண்ணுடிப் பெட்டியைச் சுற்றிலும் போடப்பட்டிருக்கும் கம்பிகள் அருகே செல்லாதீர், தொட்டுவிடாதீர்!'

அங்கிருந்த காவலாளர் இதற்கு விளக்கம் தந்தார்.

'ஐயா! யாராவது தவறித் தொட்டுவிட்டாலும், அதில் மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ளதால், உடன் 'பாதுகாப்பு மணி' யடிக்கும். உடனே தொட்டவர்களைப் பிடித்து, திருட முயன்றதாகக் குற்றம்சாட்டி சிறையில் அடைத்து விடுவோம்.'

விலையுயர்ந்த நகையைப் பாதுகாக்க அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள பாதுகாப்பு முறை பாராட்டத்தக்கதே. சில மேலை நாடுகளில் உள்ள பாங்குகளில் கீழ்க்கண்டபடி விளம் பரங்களைக் காணலாம்:

'திருடர்கள் ஜாக்கிரதை. பணம் வைத்துள்ள இரும்புப் பெட்டகம் மின்சாரம் பாய்ச்சப்பட்டுள்ளது.' இதை மீறி திருடர்கள் அந்தப் பெட்டகத்தைத் தொடுவார்களாயின் அவர்கள் உடனேயே, மின்சாரத்தால் தாக்குண்டு மடிவார் கள்.

விலையுயர்ந்த பொருட்களை, செல்வத்தைப் பாதுகாக்க, பாங்குகள் எவ்வளவு சிரத்தை எடுக்கின்றன! கவலை கொள் கின்றன. மின்சக்தியைப் பயன்படுத்துகின்றன. மனிதனின் ஆன்மா இவை யாவற்றிலும் மிக மிக உயர்ந்ததன்றோ!

'மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?'

'மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப் பான்?' (மா. 8:36,37.)

உலகம் முழுவதிலும் உள்ள செல்வத்திலும், நம் ஆன்மா விலையுள்ளதென ஆண்டவர்தாமே கூறியுள்ளார். அவ்வாறு யின் அதைப் பாதுகாக்க பரலோக மின்சக்தியாம், பரலோக அக்கினியாம் பரிசுத்த ஆவியானவரால் வெறுமையான நம் உள்ளம் நிரப்பப்படுதல் மிக மிக இன்றியமையாததாகும். பரலோக அக்கினி நம் உள்ளத்தை நிரப்பும்பொழுது, நம் ஆன்மாவைப் பற்றிக்கொள்ள விரும்பும் 'பாவ இச்சை'

யென்னும் திருடர்களை அது பட்சிக்கிறது. எரிக்கிறது. நம்மையோ தூய்மையாய்க் காப்பாற்றுகிறது.

'... நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்திற்கு ...' (எபி. 12:1) நம் ஆன்மாவைத் தப்புவிக்கவல்ல, பரலோக அக்கினியாம், பரிசுத்த ஆவியானவரை நம் உள்ளத்திற்குள் அனுப்பவே, 'எவ்வளவோ நெருக்கப் படுகிறேன்' என இயேசு அங்கலாய்த்தார். சகல விதத் திலும் நெருக்கப்பட்டார்.

'உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்' (2 தீமோ. 1:14)

என்ற தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து: 'சுவாமி! என் ஆன்மாவைக் காப்பாற்றிக்கொள்ள உம் பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பும்' எனக் கண்ணீரோடு அவரை நோக்கிக் கதறுவாயாக. அவரது மாசற்ற இரத்தத்தால் கழுவப்பட்ட, அருமை ஆன்மாவே, அவ்விதம் அந்த அக்கினி உன்மேல் இறங்கும்வரை, அவர் பாதங்களை விடாதிருப்பாயாக. அவ்வாறே உள்ளமுருக, கதறியழுத வேதநாயகம் சாஸ்திரி யார் பாடலே உம் கதறுதலாய், தியானமாய் அதுமட்டும் அமைவதாக.

'என்றன் பாவம் யாவையும், எரிக்கும் வகை தேடியும்,
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காண்கிலேன்.
என்றன் செயலால் யாதொன்றும் முடியா(து)
இன்றே வான் அக்கினி வரவேணும்'.

ஆ. விண்ணப்பத்தின் ஆவி

'நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடி களின் மேலும் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; ...'(சக. 12:10).

பரலோகத்திலிருந்து இறங்கும் பரிசுத்த அக்கினிக்கு வேறு இரண்டு பெயர்கள் இந்த வசனத்தில் தரப்பட்டிருக்கின்றன. 'கிருபையின் ஆவி,' 'விண்ணப்பத்தின் ஆவி' என்பவைகளே.

'கிருபையின் ஆவி' என்ற பதத்தை எபிரெயர் 10:29ல் உள்ள வசனத்திலும் காணலாம்.

இந்தப் பரிசுத்த அக்கினி ஓர் ஆன்மாவை நிரப்பும்பொழுது அந்த ஆன்மாவை பாவத்தின் எல்லா வல்லமைக்கும் விலக்கிப் பாதுகாப்பதோடு அது நின்றுவிடுவதில்லை. இந்த உயரிய அனுபவத்திற்குள் இன்னும் வராமல் பாவத்திலும் அக்கிரமத்திலும் உழன்று தவிப்போர்பால், ஒரு தெய்வீக பாசத்தையும், அத்தகைய ஆன்மாக்கள்மேல் ஒரு கரிசனையையும் உண்டாக்குகிறது. அத்தகையோருக்காக அழுது புலம்பி தேவனை நோக்கி விண்ணப்பம் செய்யும்படியும் தூண்டுகிறது.

நமதாண்டவரும் தேவகுமாரனுமாகிய இயேசுவைப் போல தேவ ஆவியால் நிறைந்த ஒருவர் உலகில் தோன்றினதுண்டோ?

> '. . . தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்' என அவரது முன்னோடியாகிய யோவான்ஸ்நானகனும் சாட்சி பகர்ந்தான்! (யோவா. 3:34.)

அளவில்லாமல் தேவனுடைய ஆவியைப் பெற்றிருந்த தேவகுமாரன் பாவத்தில் உழலும் மக்களது ஆன்மாக்களைப் பார்த்து, அவரது பரிதாப நிலையைக் கண்டு கண்ணீர் வடித்தார். அவர்களுக்காக பல இரவுகளை ஜெபத்தில் செலவழித்தார் (லூ. 5:16; 6:12).

'அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து அதற்காகக் கண்ணீர்விட்டழுது,

> உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது' (லூக். 19:41,42).
>
> 'எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள

மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று' (லூ. 13:34)

என அழியும் ஆன்மாக்களுக்காக அவர் அழுத அழுகையும், புலம்பலும் நம் இதயத்தைப் பிளக்கிற பரிசுத்த அக்கினியால் நிரப்பப்படும் ஓர் ஆன்மா, பாவத்தில் உழலும் மற்ற ஆன்மாக்களைப்பற்றிய பாரத்தால் நிரப்பப்பட்டு, அவர்களுக்காக தேவனை நோக்கி ஜெபிக்கச்செய்யும் விண்ணப்பத்தின் ஆவியாலும் நிரப்பப்படுகிறது. கெத்செமனே தோட்டத்தில் இயேசு ஆத்தும பாரத்தால் நிறைந்து மனம் கலங்கி அழுததுபோல அன்னாரை அழச்செய்கிறது.

'... கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்' (கலா. 6:17)

என மொழிந்த பவுலும், இயேசுவின் வாழ்க்கையில் காணப்பட்ட விண்ணப்பத்தின் ஆவியைத் தாமும் பெற்றிருந்தாரன்றோ!

'... எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது' (2 கொ. 11:28).

'உங்களுக்காகவும் லவோதிக்கேயாவிலிருக்கிறவர்களுக்காகவும், சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன்' (கொலோ. 2:1).

'நான் ஜெபம் பண்ணும்போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக்கொண்டிருக்கிறதைக் குறித்துத் தமது குமாரனுடைய சுவிசேடத்தினாலே என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்குச் சாட்சியாயிருக்கிறார்' (ரோ. 1:9).

பவுலுக்குள்ளும், அருமை இரட்சகரைப்போன்றே இந்த 'விண்ணப்பத்தின் ஆவி' நிறைந்திருந்ததால்தான் மேற்கண்டவாறு ஆன்மீக பாரம்கொண்டு அவர் புலம்புகிறார். அவருடைய சீடர்களும் அவ்வாறே விண்ணப்பத்தின் ஆவியால் நிறைந்தவராய், சுவிசேடத்தைக் கேட்ட மக்கள் உறுதிப்படுவதற்காக ஜெபத்தில் போராடினார்கள் எனக் காண்கிறோம்.

உதாரணமாக, எப்பாப்பிரோதீத்து, கொலோசு பட்டணத்தி லுள்ள ஆத்துமாக்களுக்காகப் போராடினன் என கொலோ செயர் 4:12ல் பவுல் வாயிலாகவே கேட்கிறோம்.

> 'எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லு கிறன்; உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக் காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்த மானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடு கிறன்' (கொலோ. 4:12).

அப்போஸ்தல நடபடிகள் நான்காம் அதிகாரத்தில் மனதை உருக்கும் ஒரு காட்சியைக் காண்கிறோம். உயிர்த் தெழுந்த இயேசுவின் நாமத்தில் பேதுரு, யோவான் என்ற இரு அப்போஸ்தலரின் விசுவாசத்தால் முடவன் ஒருவன் குண மாக்கப்பட்டான். இதனல் கோபமடைந்த பிரதான ஆசாரியனும், மூப்பரும், வேதபாரகரும் அவர்களைப் பிடித்து பயமுறுத்தி,

> 'இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளை யிட்டார்கள்' (அப். 4:18).

இதை அவர்கள் தேவனுடைய ஆவியால் நிறைந்த மற்ற சீடர்களுக்கு அறிவித்தபொழுது, அவர்கள் ஒருவரும் இதைக் குறித்துக் கலங்கவில்லை. மாருக, அவர்கள் விண்ணப்பத்தின் ஆவியினல் நிறைந்து, இதுவரை சுவிசேடத்தைக் கேளாதவர் களுக்கு,

> '. . . உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்தருளும் . . .' எனக் கண்ணீரோடு ஜெபிப்பதைக் காண்கிறோம் (அப். 4:30).

இம்மக்களெல்லாம் பரிசுத்த அக்கினியால் நிரப்பப்பட் டிருந்தபடியால், அவர்களுக்குள் இந்த விண்ணப்பத்தின் ஆவியும் காணப்பட்டது. உலகில் தேவனல் பயன்படுத்தப் பட்ட பக்தர்கள் எல்லோருடைய வாழ்க்கையிலும், இதே அனுபவம் இருந்ததைச் சரித்திரத்தில் நாம் வாசிக்கலாம்.

அமெரிக்காவிலுள்ள சிவப்பு இந்தியரிடையே தேவனுல் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட டேவிட் பிரெய்னுர்ட் என்ற ஊழியர், பனிக்கட்டிகள் நடுவே, குழிதோண்டி அதில் முழங்காலில் நின்று, அம்மக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமே என்று கதறியழுது ஜெபிப்பாராம். அவர் உடல் நோயால் வாடி, நுரையீரலிலிருந்து இரத்தம் வரும் சமயமும்கூட அப்படி அவர் ஜெபித்ததுண்டாம். எனவே அம்மக்கள் திரளாய் இயேசுவண்டை மனந்திரும்பினர்.

ஜான் நாக்ஸ் என்ற பக்தன், 'ஆண்டவரே, எனக்கு இந்த ஸ்காட்லாந்து தேசத்தைத் தாரும்; இன்றேல் (ஜெபித்தே) மடிவேன்' எனக் கதறுவாராம்.

டோவி என்ற ஒரு பக்தனைக் குறித்து உள்ளமுருக்கும் ஒரு காரியத்தைக் கேள்விப்பட்டேன். அவர்மேல் 'குணமாக்கும் வரங்களை' தேவன் ஏராளமாய்ப் பொழிந்திருந்தார். அவருடைய கண்ணீர் நிறைந்த ஜெபம் பல்லாயிரக்கணக்கான மக்கட்கு சரீர நோயிலிருந்து விடுதலையளித்தது. அவருடைய மரணநேரம் சமீபித்த நாட்களிலும்கூட நோயினுல் வாடின மக்கள் திரளாய் அவரைத் தேடி வந்தனர். அவரோ படுக்கையில் மிக பலவீனமாய்ப் படுத்திருந்தார். அவருடைய இருபுறமும் நோயாளிகளை வரிசையாக நிறுத்தி, அவருடைய நண்பர்கள், அவர் கையைப் பிடித்து ஒவ்வொருவர் தலை மீதும் வைத்தார்களாம். கையைத் தூக்கக்கூட அவருக்குப் பலமில்லை. ஆனுல் உள்ளத்திலிருந்த விண்ணப்பத்தின் ஆவியோ அணையவில்லை. தன் கரம் யார் யாரைத் தொடுகிறதோ, அவர்களெல்லாம் குணமடையும்படி உள்ளம் விண்ணப்பம் செய்துகொண்டிருந்தது. மக்களும் அவ்வாறே இயேசுவால் குணமடைந்தனர்.

'. . . அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்!' (மத். 9:37)

என இயேசு வேதனைப்படுவது உண்மையேயெனினும் தம்மைப்போல விண்ணப்பத்தின் ஆவியினுல் நிறைந்தோரையே அவர் பயன்படுத்த இயலும். இந்த ஆவியை அருளவே அவர் நெருக்கப்பட்டார். இயேசுவின் மகத்தான சேவையைச் செய்ய நாம் ஆசிப்பது நன்றே. ஆனுல் இயேசு

மிகுந்த நெருக்கத்திற்குட்பட்டு, உலகிற்கு அனுப்பியுள்ள பரிசுத்த அக்கினியை நாம் பெற்றுள்ளோமா என்று நம்மை நாமே பரீட்சிப்பதும் அவசியமல்லவா? நம் ஆன்மாவில், அழிந்துபோகும் ஆத்துமாக்களைப்பற்றிய ஓர் உண்மைப் பாரம் இல்லாவிடில் உண்மையான வாஞ்சையோடு நாம் அத்தகையோருக்கு, இயேசுவைப்பற்றிய நற்செய்தியைக் கூறுவது எங்ஙனம்?

எலியாவின் ஜெபத்தைக் கேட்டு இறங்கிய பரலோக அக்கினி, பலியைப் பட்சித்து நின்றுவிட்டது. ஆனால் இயேசு அனுபவித்த 'நெருக்கத்தி'னிமித்தம் இறங்கிய பரிசுத்த ஆவியாம் அக்கினியோ, தாம் இறங்கும் ஆன்மாவைப் பலியாக பட்சிப்பது மட்டுமல்ல, அந்த ஆன்மா மற்றோர்க்காகவும் பலியாகுமாறு செய்கிறது.

> '. . . நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன்' *(2 கொ. 12:15)* என்று பவுலைக் கூறும்படி செய்தது.
> 'அவர் (இயேசு) தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்' *(1 யோ. 3:16)*

என்று மற்றவர்கட்காக நம் வாழ்வைத் தியாகம் செய்யும்படித் தூண்டுகிறது.

இந்த அன்பும், தியாக சிந்தையும் நமக்குள் இருக்கிறதா எனச் சோதிப்போம்; இல்லையேல் 'என்னை உம் பரிசுத்த அக்கினியால் நிரப்பும்' எனக் கண்ணீரோடு ஜெபிப்போம்!

இ. 'பலமுள்ள ஆவி' ('Spirit of Power')

> 'தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்' *(2 தீமோ. 1:7)*.

இயேசுகிறிஸ்துவின் சீடர்கள் அவரோடுகூட 3½ வருடங்கள் இருந்தார்கள். அற்புதங்களைக் கண்டார்கள். கிறிஸ்துவும்,

'. . . சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து,

தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்' (லூ. 9:1,2).

'நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்' (யோவா. 15:3)

என அவர்களைக் குறித்துச் சாட்சியும் பகர்ந்தார். தாம் தெரிந்து எடுத்த எழுபது சீடரைப் பார்த்து,

'. . . உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்' (லூ. 10:20).

இவை யாவும் எத்தனை நல் வார்த்தைகள். இவை யாவும் ஒருவன் அவருடைய சீடனாய் விளங்கத் தகுதி தராதோ? இத்தனை சிறந்த சாட்சிகளாகிய தம் சீடரைப்பற்றிக் கூறியிருந்தும், கடைசியாகத் தாம் அவர்களைவிட்டுப் பிரிகையில் வேறொரு காரியத்தையும் சொன்னார்.

'என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்' (லூ. 24:49).
'பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்' (அப். 1:8).

மேற்சொன்ன இரு வசனங்களிலும் இதுவரை அவர்கள் பெற்றிருந்த பரிசுத்தமோ, அவர்கள் பெயர் ஜீவ புத்தகத்தில் காணப்படும் பாக்கியமோ, பிசாசுகளைத் துரத்தவும், வியாதிகளைக் குணமாக்கவும் அவர் அளித்திருந்த அதிகாரமோ, அவருடைய ஊழியத்தைச் செய்வதற்குச் சற்றும் போதாது என்றும், இவை எல்லாவற்றிற்கும் மேலாக 'உன்னத பெலன்' ஒன்றை அவர்களுக்குத் தாம் அருளப்போவதாகவும் வாக்கருளினார். எப்பொழுது இந்த உன்னத பெலன் வருமாம்? 'பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது!' ஆம்!

இயேசு அருளிய பரிசுத்த அக்கினி, அது தங்கும் உள்ளத்திற்குள் ஓர் 'உன்னத பெலனை' அருளிச் செய்கிறது.

இயேசுவை மறுதலித்த பேதுருவும்கூட, தேவ ஆவியால் நிரப்பப்பட்டபொழுது தன் ஆன்மாவில் ஓர் உன்னத பெலனைப் பெற்ருன் எனக் காண்கிறோம். யூதர்களைப் பார்த்து

> '. . . இயேசுவை நீங்கள் . . . கொலை செய்தீர்கள்' எனத் தைரியமாய் பேசினுன் (அப். 2:23). அவன் பேச்சைக் கேட்ட 3000 பேர் அன்று மனம் திரும்பினுர்கள் என வேதம் சொல்கிறது.

பழைய ஏற்பாட்டைப் பார்க்கும்பொழுது, தேவனுல் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஒரு யுத்தத்திற்கோ அல்லது ஒரு கடினமான காரியத்தைச் செய்வதற்கோ தேவனுல் அனுப்பப்பட்டபொழுது, அவர்களை அவர் தம் ஆவியினுல் நிரப்பியே அனுப்பினுர் என்று பார்க்கிறோம். மோசேயின் மேல் தேவன் தம் ஆவியை வைத்திருந்தார் (எண். 11:17). யோசுவாவை ஞானத்தின் ஆவியினுல் நிறைத்தார் (உபா. 34:9). கிதியோன் மேல் கர்த்தருடைய ஆவியானவர் இறங்கினுர் (நியா. 6:34). யெப்தாவின் மேலும் இறங்கினுர் (நியா. 11:29). சிம்சோனின் மேலும் இறங்கினுர் (நியா. 14:6,19; 15:14). தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார் (1 சாமு. 16:13; 2 சாமு. 23:2). எலியாவின் மேலும், எலிசாவின் மேலும் தங்கியிருந்தார் (2 இரா. 2:9,15).

இவர்கள் மூலமாக பலத்த செய்கைகள் நடப்பிக்கப்பட்டன. குறிப்பிட்ட காரியங்களை, கர்த்தருடைய ஆவியைக் கொண்டு அவர்கள் செய்து முடித்தார்கள். புதிய ஏற்பாட்டிலோ, கிறிஸ்து இயேசுவின் 'நெருக்கத்தின்' மூலமாக பூமியில் இறங்கின பரிசுத்த அக்கினியோ, அது இறங்கும் உள்ளத்திற்கு இரண்டு காரியங்களைச் செய்கிறது. முதலாவது, அந்த உள்ளத்திற்கு ஒரு விவரிக்கமுடியாத ஆன்மீக, உன்னத பெலனைக் கொடுக்கிறது. இந்தப் பரிசுத்த அக்கினியினுல் நிறைந்தவர்களுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் குண நலன்கள் பரிசுத்த ஆவியின் கனிகளாகத் திகழ்கின்றன. இந்தக் கனிகளைப்பற்றி கலா. 5:22,23; எபே. 5:9; பிலி.

1:10; கொலோ. 1:10; யாக். 3:17,18 இவைகளில் வாசிக்கிறோம். அவை அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் முதலியன. இந்த ஒன்பது கனிகளை மெய்யாய் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்தவர்களுடைய வாழ்க்கையில் நாம் காணலாம். இவைகள் பரிசுத்த ஆவியினிடமிருந்து அவர்கள் பெற்ற உன்னத ஆன்மீக பெலனுக்கு அடையாளங்களாய்த் திகழ்கின்றன.

சாது சுந்தர்சிங் அவர்களைச் சந்தித்த மக்களை இந்தியாவிலும், இலங்கையிலும் சந்திக்கும் பேறு எனக்குக் கிட்டியது. அவர்களிடம் 'ஐயா! சாது சுந்தர்சிங்கின் வாழ்க்கையில் நீங்கள் குறிப்பாகக் கண்ட சிறந்த அம்சம் என்ன?' என்று கேட்டேன். அவர்கள் ஒவ்வொருவரும் உரைத்த பதிலாவது: 'ஐயா! அவருடைய முகத்தில் எப்பொழுதும் காணப்படும் தெய்வீக சமாதானமும், அவர் மக்களோடு பழகும் பொழுதும், பேசும்பொழுதும் அவரிடம் காணப்பட்ட அன்புமே என்னைக் கவர்ந்தது.' சாது சுந்தர்சிங் அவர்களின் வாழ்க்கைச் சரிதையில் இதைக் காணலாம். அவர் கேரளத்திற்கு வந்திருந்த சமயம் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவருடைய தெய்வீக அமைதி நிறைந்த முகத்தைப் பார்ப்பதற்கும், அவருடைய கிறிஸ்துவைப் பற்றியசொற்பொழிவுகளைக் கேட்கவும் திரளாய்க் கூடி வந்தனர். அவர்களில் சிலர் அவரை அணுகி தங்கள் சரீர பிணிகளுக்காக ஜெபிக்கும்படி வேண்டிக்கொண்டனராம். அவர்கள் அனைவரையும் பார்த்து, 'நான் குணமாக்கும் வரங்கள் உள்ளவன் அல்லன்' என்று சொல்லி ஜெபிக்காமலே சென்றுவிட்டார். அவருடைய வாழ்வில் வெளிப்பிரகாரமாக யாதொரு வரமும், வல்லமையும் கிரியை செய்யாமற்போன பொழுதிலும் அவருடைய உள்ளத்திலிருந்து புறப்பட்டு அவர் வாழ்வில் பிரதிபலித்த ஆவியின் கனிகள் பல்லாயிரக்கணக்கானோரை உலகெங்கிலும் கிறிஸ்துவண்டை இழுத்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. கிறிஸ்து இயேசுவின் நெருக்கத்தினிமித்தமாக பூமியில் தமது அடியார்மேல் பொழிந்தருளப்பட்ட பரிசுத்த அக்கினி அவர்தம் உள்ளத்தில் விவரிக்கமுடியாத உன்னத

பெலனைக் கொண்டுவருகிறது. இயேசுவின் மேல் அன்பு வைக்கும் ஒவ்வொருவரும் இந்த பரிசுத்த அக்கினியைப்பெற்று அதன்மூலம் வரும் ஒன்பது ஆவியின் கனிகளையும் உன்னத பெலனையுமடைந்து கிறிஸ்துவை உலகிற்கு காண்பிப்பதன்றோ இறைவனது திருவுளச்சித்தம். இந்தப் பெரும் பேற்றை நம் ஒவ்வொருவருக்கும் (எபி. 2:9) அருளிச் செய்வதற்காகவன்றோ இயேசு நெருக்கப்பட்டார். நம் வாழ்க்கையில் இந்த குணநலன்கள் இல்லையேல், இன்றே பணிவாகக் கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்து 'என்னையும் உமது தூய ஆவியினால் நிரப்பும்' என இறைஞ்சுவோமாக.

பரிசுத்த ஆவியின் வரங்கள்

> தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்; தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம் பண்ணும்பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக் கொண்டீர்' (சங். 68:18).

> 'ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்' (எபே. 4:8).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தாம் பரலோகம் ஏறிப்போகுமுன்பதாக,

> 'நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், . . .' (யோவா. 14:18)

என்று வாக்கருளினார். அதோடுகூட தாம் அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும் பின்வருமாறு திட்டமாகப் பேசினார்.

'நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

> '. . . அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்' (யோவா. 14: 16,17).

இயேசுகிறிஸ்து தம் சீடர்களை பல திறப்பட்ட உலக வேலைகளி லிருந்து தம்மைப் பின்பற்றி வரும்படி அழைத்தார். அவர் அழைப்பைப் பெற்றவுடன் அவர்கள் தம் தம் உடைமைகளை உடனே முழுவதுமாக விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றிச் சென்றார்கள். எனவே இயேசு அவர்களைப் பிரியும் நேரம் வந்தபொழுது,

> 'பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக் காலம் நான் உங்க ளுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக் கூடாது . . .' (யோவா. 13:33)

என்று மனங்கலங்கிச் சொன்னார். அவர்களோடு அவர் இருந்த $3\frac{1}{2}$ வருடங்களும் அவர்களில் அன்பு வைத்தார். அவர் களைப் பிரியும் நேரம் வந்தபொழுது அவர்களும் 'துக்கமடைந் தார்கள்' (யோவா. 16:6,22). அவர்களை ஆறுதல்படுத்தும் முகமாகவே தாம் அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனைக் குறித்து அவர் பேசுகிறார். அவர் வந்து அவர்களைத் தேற்றுவார் என உறுதிகொடுத்தார்.

> 'பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவரு மாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் . . .' என்று பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுகிறார் (யோவா. 15: 26; 16:7).

அவ்வாறே, 'நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு . . .' (லூ. 12:60) என்று சொன்ன வார்த்தையின்படி, அவர் சிலுவையில் கொடிய பாடுகளை அனுபவித்துத் தம்மைப் பலியாக அர்ப்பணித்தார். பரலோகம் ஏறிச் சென்றார். அங்கிருந்து 'பரிசுத்த ஆவியைப் பெற்று . . . பொழிந்தருளி னார், (அப். 2:33). அவ்விதமாக பரிசுத்த அக்கினியாம் ஆவி யானவரை உலகில் அனுப்பும்பொழுது அவரோடேகூட மேலே நாம் கண்ட இரு வசனங்களின்படி ஆவிக்குரிய ஒன்பது வரங் களையும் கூடவே பொழிந்தருளினார். இந்த ஒன்பது வரங் களின் பட்டியல் 1 கொரிந்தியர் 12:8–10 வசனங்களில் அடங்கியுள்ளது. அவை முறையே,

1. ஞானத்தைப் போதிக்கும் வசனம்
2. அறிவை உணர்த்தும் வசனம்

3. விசுவாசம்
4. குணமாக்கும் வரங்கள்
5. அற்புதங்களைச் செய்யும் சக்தி
6. தீர்க்கதரிசனம் உரைத்தல்
7. ஆவிகளைப் பகுத்தறிதல்
8. பற்பல பாஷைகளைப் பேசுதல்
9. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்—

G.B. Sathyanesan, B

இவை யாவும் கிறிஸ்துவின் 'நெருக்கத்'தினிமித்தம் பரலோகத்திலிருந்து இறங்கிய அக்கினியாம் பரிசுத்த ஆவிக்குள் அடங்கியிருக்கின்றன. பரிசுத்த ஆவியின் ஒன்பது கனிகள் எப்படி ஒரு மனிதனுக்குள் உன்னதமான ஆவிக்குரிய பெலனை அருளிச்செய்கிறதோ, அப்படியே ஆவிக்குரிய வரங்களும் அன்னார் செய்யும் இறைவனுடைய ஊழியத்தில் தேவனுடைய உன்னத பெலனை வெளிப்படுத்துகிறது. இந்த வரங்கள் அப்போஸ்தலருடைய ஊழியத்தில் அவ்வாறே எல்லாப் பகுதிகளிலும் மிளிர்வதைக் காணலாம்.

'அவர்கள் அங்கே அநேக நாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம் பண்ணினார்கள்; அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அனுக்கிரகம் பண்ணினார்' (அப். 14:3).

'பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர் மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப் போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன' (அப். 19:11,12).

மாய வித்தைக்காரனாகிய எலிமா சுவிசேடத்தை எதிர்த்து நின்றபொழுது, பவுல், பரிசுத்த ஆவியினால் நிறைந்து,

'இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சில காலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய்...' என்று சொன்னான். உடனே அவன் கண்கள் இருளடைந்ததால் அவ்விடத்து அதிபதி மனந்திரும்பினான் என வாசிக்கிறோம் (அப். 13:9–12).

'அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது . . .' (அப். 5:12).

'பிணியாளிகளைப் படுக்கைகளின்மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில், அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்தார்கள்.

சுற்றுப்புறப் பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்' (அப். 5:15, 16).

'புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப் பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை' (ரோ. 15:18).

மேற்கண்ட வசனங்கள் யாவற்றையும் எபிரேயர் 2:4 கீழ்க்கண்டவாறு ஒருங்கிணைத்துச் சுருக்கி சாராம்சத்தைக் கூறுகிறது.

'அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பு! . . .'

தேவனிடத்திலிருந்து இறங்கி வந்த பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவானவர் தம் மூலமாக அனுப்பின ஆவியின் ஒன்பது வரங்களை, தமது சித்தம்போல மக்களுக்குப் பகிர்ந்து அளித்து, அவற்றின் மூலமாக தேவனுடைய உன்னத பெலனை வெளிப்படுத்தி, கிறிஸ்துவினால் வரும் இரட்சிப்பை அறிவிக்கும் ஊழியத்தைக் கனப்படுத்துகிறார்! இன்றும் பரிசுத்த அக்கினியினால் நிரப்பப்படுகிறவர்களுக்குக் கிறிஸ்து இந்த வரங்களை அளிக்கிறார்.

நீலகிரிக்குச் செல்ல மலைமேல் ஏறிச் செல்லும் இரயிலில் போகவேண்டும். அந்த இரயில் இரண்டு தண்டவாளங்களின் மேல் ஏறிச் செல்கிறது. ஆனால் சமவெளியிலே செல்லும் இரயிலுக்கும், அந்த மலையின்மேல் ஏறிச் செல்லும் இரயிலுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. மலைமேல் செல்லும் இரயில் வண்டிகளின் நடுவே பல் சக்கரம் ஒன்று கூடவே இருக்கும். மலைப்பாதை வந்தவுடன் இந்தச் சக்கரம் இரண்டு தண்டவாளங்களுக்கும் நடுவில் இறக்கப்படும். அதின் பற்களைப் பிடித்துக்கொள்ள குழிகள் நிறைந்த வேறொரு இருப்புப் பாதை அதற்கு நேராய்ப் போடப்பட்டிருக்கிறது. சக்கரத்தில் உள்ள பற்கள் அந்தப் பாதையில் உள்ள குழியில் விழுந்து கவ்விக்கொள்ள இரயிலானது உறுதியாய் மலையின்மேல் ஏறிச் சென்றுவிடுகிறது. சாதாரண இரயிலுக்கும் மலைமேல் செல்லும் இரயிலுக்கும் உள்ள வேறுபாடு நடுவிலிருக்கும் பல் சக்கரமே. அஃதேபோன்றதுதான், சாதாரண கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், கிறிஸ்துவின் பரிசுத்த அக்கினியின் மூலம் வரும் ஆவியின் வரங்கள் நிறைந்த வாழ்க்கைக்கும் உள்ள வேறுபாடு. எல்லா இடர்கள், எதிர்ப்புகள் நடுவிலும், பல் சக்கரம்போல் வரங்களும் கிரியை செய்து, அவ்வாழ்க்கை பரலோகம் நோக்கி ஏறிச் செல்ல உதவுகிறது.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் அவசியத்திற்கும் ஏற்றவாறு அந்தந்த சம்பந்தப்பட்ட வரங்கள் கிரியை செய்கின்றன. ஆழ்ந்த இரகசியத்தை அறிவதற்கு அறிவை உணர்த்தும் வசனம் என்ற வரம் பயன்படுகிறது. இக்கட்டான ஒரு சூழ்நிலையில் சிக்கிக்கொள்ளும்பொழுது அதிலிருந்து தப்புவதற்கான வழியை, ஞானத்தைப் போதிக்கும் வசனம் தேவனிடமிருந்து பெற்று அறிவிக்கிறது. நம்முடைய விசுவாசம் தடுமாறும் வேளையில் விசுவாச வரம் தேவனுடைய விசுவாசத்தை நமக்குக் கொண்டுவருகிறது. சரீர நோயினால் வாடுபவர்களுக்கு மத்தியில் ஊழியம் செய்யும்பொழுது குணமாக்கும் வரங்கள், ஆனந்த தைலம்போல் உதவுகின்றன. எப்பக்கத்திலும் சத்துருக்களால் சூழப்படும்பொழுதும், எதிர்க்கமுடியாத தீய சக்திகளால் அலசடிப்படும்பொழுதும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்யும் தேவனுடைய சக்தி நம் உதவிக்கு வருகிறது. வரும் காலங்களில்

நடக்கப்போகிறவைகளை தீர்க்கதரிசன வரம் முன்னறிவிக்கிறது. அசுத்த ஆவிகளின் வல்லமைகளினுல் வாடுபவர்களை விடுவிக்க ஆவிகளைப் பகுத்தறியும் வரம் அருளப்பட்டுள்ளது. பரலோகத்திலே பேசப்படும் பாஷைகளையும், பூலோகத்தில் தேவனுடைய ஆவியினுல் தூண்டப்பட்டு மக்கள் பேசும் பாஷைகளையும் அறிந்துகொள்ளவும், நமக்கு முற்றிலும் தெரியாத பாஷைகளைப் பேசும் மக்கள் மத்தியில் ஊழியஞ் செய்ய நேரும்பொழுதும் பற்பல பாஷைகளைப் பேசும் வரமும், பாஷைகளை வியாக்கியானம்பண்ணும் வரமும் கிரியை செய்கின்றன.

இந்த வரங்கள் எவ்வளவு நேர்த்தியானவைகள்! இந்த வரங்கள் நிறைந்த ' ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை எவ்வளவு 'உன்னத பலம்' நிறைந்ததாயிருக்கும்!

> 'பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியவேண்டுமென்று விரும்புகிறேன். ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்' (லூ. 12:49,50)

என்று இயேசு சொன்ன வார்த்தையை நாம் முதல் முதல் வாசிக்குங்கால், 'ஒரு அக்கினியைப் போடவா, இயேசு இவ்வளவு நெருக்கத்தை அடைந்தார்' என்று நமக்குள் வினு எழும்பிற்று. இயேசு தாமே 'நான் நெருக்கப்படுகிறேன்' என்று புலம்பும்படி செய்த அந்த அக்கினியில்தான் அப்படி என்ன மகத்துவம் இருக்கப்போகிறது என்று நம்மில் சிலர் சிந்தித்தோம்! ஆனுல் நாம் மேலே சிந்தித்த மூன்று காரியங்களை நோக்குங்கால், அந்த பரிசுத்த அக்கினி எப்படி மனிதனின் ஆன்மாவை பாவத்திலிருந்து காப்பாற்றுகிறது என்பதையும், தாம் நிரப்பும் ஆன்மாவை, எப்படி பாவத்தில் மாளும் மற்றவர்களுக்காக கண்ணீர்விடும்படி செய்கிறது என்பதையும், தம்மை ஏற்போரின் உள்ளத்திலும் ஊழியத்திலும் எவ்விதம் உன்னதத்திலிருந்து வரும் பெலனை அருளிச் செய்கிறது என்பதையும் அறியுங்கால், மெய்யாகவே இந்த அக்கினி எத்துணை மேன்மையானது என்று அறிந்துகொள்கிருேம். இதற்காக கிறிஸ்து 'நெருக்கப்'பட்டதில் வியப்பொன்றுமில்லையென்றும் நாம் நிர்ணயிக்கிருேம். கிறிஸ்துவின் 'நெருக்கம்'

மனுமக்களுக்குக் கொண்டுவந்த பரிசுத்த அக்கினியை நாம் ஒவ்வொருவரும் பெற்று, அதன் ஆசீர்வாதங்களை அனுபவிப்பது மட்டுமே 'நெருக்கப்'பட்ட தெய்வகுமாரனாகிய இயேசுவுக்கு மன இரம்மியத்தை அளிக்கும்.

இயேசுவின் 'நெருக்கம்' உலகிற்கு அளித்த பரலோக 'நெருப்பாகிய' பரிசுத்த ஆவியைப் பூரணமாய் நான் பெற்றிருக்கிறேனா? என நம்மை நாமே சற்று ஆராய்வோம். இல்லையேல், வேண்டிக்கொள்ளுகிற யாவருக்கும், இல்லையென்னாமல் தம் ஆவியை அளிக்கும் அவரிடம் கேட்போம். மகிழ்வோம். இயேசுவின் உள்ளத்தைப் பரவசப்படுத்துவோம்.

5

‘ஆத்தும வருத்தத்தின் பலன்’

‘அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தி யாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்’ (ஏசா. 53:11).

இயேசுகிறிஸ்து எத்தகைய வேதனைகளைப் பொறுமையோடு சகித்தார் என்பதை முன் அத்தியாயங்களில் தியானித்தோம். அத்தனை வருத்தத்திற்கும் அவர் ‘பலனைக் கண்டு திருப்தி யாவார்’ என்று வேதம் சொல்லுகிறது. எப்படி திருப்தி யாவார்? அநேகரை நீதிமான்களாக்குவதன் மூலமாய். சுருங்கக் கூறின் அவர் ஆத்துமாவிலும், மனதிலும், சரீரத்திலும் அடைந்த பாடுகளின் பலனை நாம் அநுபவிக்கும் பொழுதே அவர் திருப்தியடைகிறார். எனவே அவருடைய பாடுகளின் பலனை ஒவ்வொருவரும் எப்படிப் பெற்று அநுபவிப்பது என்பதை சற்றே தியானிப்போம்.

அ. பாவமன்னிப்பாகிய மீட்பு

‘. . . இவருடைய (இயேசுவினுடைய) இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது’ (எபே. 1:7).
‘(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது’ (கொலோ. 1:14).

மேற்கண்ட வசனங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள் ‘பாவமன்னிப்பு’ என்னும் ‘ஆத்தும இரட்சிப்பு’ உண்டாயிருக்கிறது என்று சொல்லுகின்றன. பாவமன்னிப்பை பெற

விரும்புகிற எவரும் இதை முதலாவது விசுவாசிக்கவேண்டும். 'இயேசுகிறிஸ்து எனக்காகவே சிலுவையில் அறையப்பட்டார். என்னுடைய பாவங்களுக்காகவே அவர் சிலுவைப் பாடுகளை சகித்தார்' என்று விசுவாசிக்கவேண்டும்.

> 'அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான் . . .' (அப். 10:43).

இரண்டாவது, பொதுவாக நாம் 'பாவி, பாவி' என்று சொல்லுவதில் மட்டும் பயனில்லை. ஏனெனில் அவ்விதமாகவே,

> '. . . பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன' (யாக். 2:19)

என்று வேதம் சொல்லுகின்றது. எனவே அடுத்தபடியாக நம்முடைய வாழ்க்கையின் குறிப்பிட்ட பாவங்களை ஜெபத்தில் ஆண்டவரிடம் அறிக்கை செய்வது அவசியமாயிருக்கிறது.

> 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்' (1 யோ. 1:9).
>
> 'தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்' (நீதி. 28:13).

மேற்கண்ட வசனங்கள் கிறிஸ்து இயேசுவிடம் நம் பாவங்களை அறிக்கை செய்வது அவசியம் என்று விளக்குகிறதன்றோ! அன்னாள் தன் இருதயத்தின் பாரங்களை தேவனுடைய பாதத்தில் ஊற்றின பொழுதே தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றாள் (1 சாமு. 1:10,15).

> '. . . அவர் சமூகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; . . .' (சங். 62:8)

என வேதமும் நமக்கு அறிவுரை கூறுகிறதன்றோ! மூன்றாவதாக,

> 'ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்' (எபே. 4:32; கொலோ. 3:13)

என்ற கட்டளையின்படி நாமும் மற்றவர்கள் நமக்குச் செய்த குற்றங்களை மன்னிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

> 'மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.
>
> மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்' (மத். *6:14,15*)

என ஆண்டவரும் நமக்குக் கட்டளை கொடுத்தாரன்றோ! ஒவ்வொரு தடவையும் ஜெபம்பண்ணும் பொழுதும்கூட, மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மன்னித்திருக்கிறோமா என்று நம்மை நாமே சோதித்துப் பார்க்கும்படியும் கற்பித்தாரன்றோ! (மா. *11:25,26.*)

நான்காவதாக, மற்றவர்களிடமிருந்து தவறாக ஏதாவது ஒரு பொருளையோ, பணத்தையோ எடுத்துக்கொண்டது உண்டானால் அதை உரியவர்களிடம் சேர்ப்பதும் இரட்சிப்பின் ஓர் அம்சமாம்.

> 'ஆயக்காரனுக்குத் தலைவனும்,' 'பாவியான மனுஷனுமாகிய' சகேயு இயேசுவை நோக்கி, 'ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்' என்றான்.
>
> 'இயேசு அவனைநோக்கி: இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது . . . என்றார்' (லூ. *19:8,9*) என வாசிக்கிறோமே.
>
> '. . . கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் . . .' (அப். *16:31*)

என்ற வார்த்தையின்படி, இயேசுகிறிஸ்து சிலுவையில் என் பாவங்களுக்காகவே மரித்தார் என விசுவாசித்து, தன் பாவங்களை அவரிடம் அறிக்கை செய்தால் அவனுடைய பாவங்களை தேவன் மன்னிக்கிறார். அவன் தன்னையுமறியாமல் உடனே தன் சத்துருக்கள் மேலும் அன்புகொண்டு, அவர்கள் தனக்கு

இழைத்த தீங்கை மன்னிக்கிறுன். மற்றவர்களிடமிருந்து தான் தவருக அபகரித்துக்கொண்ட பொருட்களை, தானே கொண்டுபோய்ச் சேர்க்கிறுன். இத்தகைய அனுபவங்களை அடைந்த ஆத்துமா என்றும் பாவமன்னிப்பின் நிச்சயத்தோடு உலகில் வாழ்ந்து சுகிக்கும்.

ஆ. எல்லாவற்றிலும் வாழ்வு

'பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்' (3 யோ. 2 வச.).

'தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?' (ரோ. 8:32).

'ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?' (மத். 7:11).

மேற்கண்ட வசனங்கள் நம்முடைய அன்ருடசு வாழ்க்கையின் தேவையை நமக்கு அருளிச்செய்வது தேவனுடைய திருவுளச் சித்தம் என்றும் விளக்குகிறதல்லவா?

எனவே கிறிஸ்து இயேசுவிடம் தங்கள் பாவங்களை அறிக்கை செய்து, அவரால் வரும் பாவமன்னிப்பை பெறும் ஒரு மனிதன் அல்லது பெண் பாக்கியவான் (பாக்கியவதி). தேவன் அவர்களுடைய பரம தந்தையாக மாறுகிருர் (கலா. 4:7; ரோ. 8:15–17). அவர்களுடைய சகலதேவைகளையும் மகிழ்ச்சியுடன் அருளுபவராய் இருக்கிருர். நோய், வறுமை, சத்துருக்களால் வரும் மோசம் போன்ற வாழ்க்கையின் பிரச்சினைகள் நம்மைச் சூழும்பொழுது நாம் கலங்கவேண்டியதில்லை. நாம் செய்யவேண்டுவதெல்லாம் இதுவே:

'நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை தோத்திரத்தோடே

கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்' (பிலி. 4:6,7).

'அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்' (1பே. 5:7).

மேற்கண்ட வசனங்கள் சொல்வதுபோல, வாழ்க்கையின் பிரச்சினைகள் என்னும் கார்மேகம் நம்மை மூடும்பொழுது, முழங்காலில் நின்று கண்ணீரோடு ஜெபம் செய்து நம் எல்லாத் தேவைகளையும் கிறிஸ்துவின் பெயரால் தேவனுக்குத் தெரியப்படுத்துவோம்.

'என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்' (யோவா. 14:14).

'இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்' (யோவா. 16:24)

என்ற வாக்குத்தத்தங்களின்படி அவர் நம் ஜெபத்தைக் கேட்பார். நம் தொல்லைகளிலிருந்து விடுதலை செய்வார்.

ஆனால் இதில் ஒரு காரியம் உண்டு. நாம் ஜெபிக்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட வழியில்தான் தேவன் கிரியை செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அவ்விதம் நடவாதபொழுது சோர்வு அடைகிறோம். ஆனால் தேவன் அளவுகடந்த ஞானம் உள்ளவர். தமக்குச் சித்தமான விதத்தில், வழியில்தான் பதில் கொடுப்பார். அதுவே நமக்கு ஆசீர்வாதம், பாக்கியம்.

'ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்'!

கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்?

தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்?' (ரோ. 11:33-35.)

'பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது' (ஏசா. 55:9).

இந்த தேவனுடைய வசனங்கள் தேவனுடைய ஞானம் அளவிடப்படாததாயும், அவர் நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிக்கும் விதங்கள், ஆச்சரியப்படத்தக்கதான வழிகளில் வருபவைகளாயும் இருக்கும் என போதிக்கின்றனவன்றோ! எனவே எல்லா ஜெபத்திற்கும் முடிவாக தேவகுமாரனாகிய இயேசுவைப்போல,

'. . . ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது. . .' (லூ. 22:42)

என்று சொல்லி பதில் தரும் விதத்தையோ, அவருடைய கையில் ஒப்புவித்துவிடுவோம்.

'என் சித்தம் ஆகாததால் எத்தனை துயர்கொண்டேன்
பொன்னடிக் கீழடங்கி புகழுமக்கென்று வாழ்வேன்'

என்ற பக்தன் பாடல் நமக்கும் முன் மாதிரியாக இருப்பதாக.

இ. ஆவிக்குரிய சகல ஆசிர்வாதம்

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்' (எபே. 1:3).

இயேசுகிறிஸ்துவுக்குள் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் நிறைந்திருக்கின்றன. அவைகளை ஓர் மனிதன் கேட்கும் பொழுது அதை அவனுக்கு அருளிச் செய்கிறார்.

'ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்' (லூ. 11:10).

'கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது' (எபே. 4;7).

கிறிஸ்துவினுடைய ஈவை கேட்டுப் பெற்றுக்கொள்வதோ நம்முடைய கையிலேதான் இருக்கிறது. ஆன்மீக, தெய்வீக ஆசீர்வாதங்களைப்பெற, பரிசுத்த ஆவியானவரையும், அவருடைய வரங்களையும் பெற, இரண்டு காரியங்களை நாம் செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது, முதலாவது,

'வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் . . .' (யோவா. 5:39)

என்ற ஆண்டவருடைய கட்டளையின்படி வேதத்தை ஆராய்ந்து பார்த்து அதில் என்னென்ன ஆசீர்வாதங்களைத் தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். அடுத்தபடியாக,

'. . . ஞான வரங்களையும் விரும்புங்கள். . .' (1 கொ. 14:1)

என்ற கட்டளையின்படி உன்னதங்களிலுள்ள சகல ஆசீர்வாதங்களும் எனக்கு வேண்டுமென விரும்புவது அவசியமாயிருக்கிறது. 'விரும்புங்கள்' என்ற வசனத்தின் உட்கருத்தை விளக்கும் மூலக்கருத்தை நாம் கவனிக்கும்போது, 'ஞான வரங்கள்மேல் தீராத தாகமுடையவர்களாயிருங்கள்' என்ற கருத்தையே அது சுட்டிக்காட்டுவதாயிருக்கிறது என நாம் விளங்கிக் கொள்ளலாம்.

'தாகமுள்ளவன்மேல் (பரிசுத்த ஆவியாகிய) தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் (பரிசுத்த ஆவியாகிய) ஆறுகளையும் ஊற்றுவேன்' (ஏசா. 44:3)

என்ற தேவனுடைய வசனத்தின்படி, பரிசுத்த ஆவியானவரின் நிரப்புதலுக்காக நம் உள்ளத்தில் ஆழ்ந்த ஒரு தாகமிருக்க வேண்டும். பக்தனாகிய தாவீதுடைய கடைசி வார்த்தைகளில் அவன் தேவனுடைய ஆவியினால் வாழ்நாள் முழுவதும் நிறைந்திருந்ததாக சாட்சி பகருகிறான் (2சாமு.23:1,2). அவன் அவ்விதமாக தேவனுடைய ஆவியினால் அளவில்லாமல் நிரப்பப்படக் காரணம், அவன் வாழ்க்கையில் தேவன்மேல் அவன் கொண்டிருந்த மெய்த் தாகம். அவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட கீழ்க்கண்ட வசனங்கள் அதைத் தெளிவாய் எடுத்துரைக்கின்றன.

'மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.

என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?' (சங். 42:1,2.)

'தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது' (சங். 63:1).

நம்முடைய வாழ்விலும் 'நான்' பெற்றிருக்கும் ஆன்மீக ஆசீர்வாதங்கள் போதாது, இன்னும் இறைவனை 'நான்' நெருங்கிச் சேரவேண்டும் என்ற மெய்த் தாகம் வந்தாலொழிய தேவனுடைய ஆவியைப் பெறுவதென்பது இயலாத காரியமாம்.

இரண்டு இராஜாக்கள் 2ம் அதிகாரத்தில் வேறொரு உதாரணத்தைப் பார்க்கிறோம். எலியா என்ற தேவனுடைய தீர்க்கதரிசி உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் வேளை வந்தது. அவனுடைய பணிவிடைக்காரனாகிய எலிசா கூடச் செல்கிறான்.

> '. . . எலியா, எலிசாவை நோக்கி: நான் உன்னை விட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன்னே நான் உனக்குச் செய்ய வேண்டியது என்ன, கேள் என்றான். அதற்கு எலிசா: உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன் என்றான்' (2 இரா. 2:9).

அவன் கேட்டபடியே எலியாவின் வாழ்க்கையிலிருந்த தேவ ஆவியின் வரத்தை அவன் இரட்டிப்பாய்ப் பெற்று அனுபவித்தான் அன்றோ! தேவகுமாரனாகிய இயேசுவும் கீழ்க்கண்ட இனிய வாக்குத்தத்தத்தை நமக்கும் அருளிப்போனாரன்றோ!

> 'மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்' (யோவா. 14:12).

பிரியமானவரே, இந்த வசனத்தில் சொல்லப்பட்ட மிகப் பெரிய ஆசீர்வாதத்தை, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை, நம்மேல் பொழிய நமது மூலமும் தம் நாமத்தை

மகிமைப்படுத்த கிறிஸ்து இன்றும் ஆவலோடு காத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஆசீர்வாதமான பாத்திரமாக நம்மையும் அவர் உபயோகிக்குமாறு கெஞ்சுவோம். நீர் விரும்பினால், விரும்பிக் கெஞ்சினால் மட்டுமே பெறுவீர்.

> '. . . ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்' (மத். 16:24)

என்ற ஆண்டவர் வார்த்தையின்படி அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம். அவர் நம்மை 'உன்னதங்களிலுள்ள சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதிப்பார்.

கடைசியில் ஒரு வார்த்தை! தேவனுடைய ஆவியானவரை விரும்பி ஜெபிக்கும்பொழுது நம்முடைய மனதில் எழும்பும் ஒரு கேள்வி 'நான் தேவனுடைய ஆவியைப் பெற்றுக்கொள்ளத் தகுதி உள்ளவன் தானோ?' என்பதே ! நண்பரே, நம்முடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தை போலிருக்கிறது (ஏசா. 64:6).

> 'எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது' (2 கொ. 3:5)

என்ற வேத வசனத்தின்படி நம்முடைய தகுதி இயேசுகிறிஸ்து கெத்சமனேயிலும் சிலுவையிலும் அனுபவித்த பாடுகளினால் மட்டுமே உண்டாயிருக்கிறது. நம் ஆண்டவராம் இயேசு மிகுந்த பாடுபட்டு நமக்காகச் சம்பாதித்து வைத்த மிகப்பெரிய பொக்கிஷம்தான் பரிசுத்த ஆவியானவர். எனவே அவருடைய நிரப்புதலுக்காக மிகுந்த தைரியத்தோடு நாம் ஜெபம்பண்ண நமக்குத் தகுதியுண்டு. தேவன் தாமே நமது தாகம் நிறைந்த ஜெபத்தை, விண்ணப்பத்தைக் கேட்டு நம்மைத் தமது மகத்துவமுள்ள ஆவியானவரால் இடங்கொள்ளாமல் போகுமட்டும் நிரப்புவாராக! இருள் சூழ்ந்த உலகில் பிரகாசிக்கும் ஒளிப்பிழம்பாய் உம்மைத் திகழச் செய்வாராக!

G.B. Sathyanesan, B.A.

டி. ஜி. எஸ். தினகரன்

1935ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியன்று இராமநாத புரம் மாவட்டம் பாம்பன் கிராமத்தில் பிறந்தார். கல்லூரிப் படிப்பை முடித்தபின், 1955ம் ஆண்டு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவில் அலுவலாளராகச் சேர்ந்தார். தற்போது ஏரியா சூப்பரின்டென்டாக அதன் சென்னை தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றி வருகிறார்.



தமக்குக் கிடைத்த நேரமெல்லாம் கிறிஸ்துவைப்பற்றி ஓயாது மக்களுக்குச் சொல்லி வருகிறார். பல்லாயிரம் மக்கள் பயனடைந்து வருகிறார்கள். அவர் செய்தியால் மனம் திரும்பியவர்களும் உடல் பிணி நீங்கப்பெற்றோரும் பலர். பொதுப் பிரார்த்தனைக் கூட்டங்கள் நீங்கலாக இவரது செய்திகள் ரேடியோ, கிராமபோஃன் தட்டுகள், ஒலி நாடாக்கள், நூல்கள், நிழல்படங்கள், திரைப்படங்கள் மூலமும் மக்களுக்குக் கிடைக்கின்றன.

இவர் இயேசு அழைக்கிறார் என்றொரு பத்திரிகை வெளியிட்டு வருகிறார். குணமாக்கும் தழும்புகள் எனும் நூலை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

CLS

WILT THOU NOT MELT, O HEART

By D. G. S. DHINAKARAN

விலை ரூ. 2·00 (இந்தியாவில் மட்டும்)